**மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்**

**திருநெல்வேலி - 627012**

**MANONMANIAM SUNDARANAR UNIVERSITY**

**TIRUNELVELI - 627012**

**தொலைநெறி தொடர்கல்வி இயக்கம்**

**DIRECTORATE DISTANCE & CONTINUING EDUCATION**

**TIRUNELVELI**

# இலக்கணம் - யாப்பும் அணியும்

இளங்கலை மூன்றாமாண்டு

ஆறாம் பருவம்

**2025**

**மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்**

**திருநெல்வேலி – 627 012**

# யாப்பிலக்கணம்

**நூலின் அமைப்பு**

உலக மொழிகளுள் ஒப்பற்ற மொழியாக விளங்குவது தமிழ்மொழி. இதற்கு இரு கண்களாக இலக்கியமும் இலக்கணமும் திகழ்கின்றன. இத்தமிழ்மொழியின் இலக்கணம் தொடக்கத்தில் எழுத்து, சொல், பொருள் என மூன்றாகப் பாகுபடுத்தப்பட்டது. பின்னர் யாப்பு, அணி என ஐந்தாக விரிவடைந்தது. இவ்வைந்தையும் தொகுத்தும் தனித்தும் விளக்குகின்ற நூல்கள் பல. அவற்றுள் செய்யுள் இலக்கணமாகிய யாப்பைப் பற்றித் தனித்துப் பேசுவது யாப்பருங்கலக்காரிகை என்னும் நூலாகும். இது யாப்பு நூல்களுள் தலை சிறந்ததாகப் போற்றப்படுகிறது. தமிழ் இலக்கணத்தைத் தொல்காப்பியத்தின் வழி இனிதென விரும்பிக் கற்போர் பலர். அவர் அனைவரும் செய்யுள் இலக்கணத்தை யாப்பருங்கலக் காரிகையின் துணை கொண்டே அறிய விரும்புவர். அத்தகு சிறப்பு வாய்ந்த இந்நூல், தோன்றிய காலம் முதலாக இன்றுவரை தனக்கெனத் தனித்ததோர் இடத்தைப் பெற்றுள்ளது.

**யாப்பருங்கலக் காரிகை பெயர்க்காரணம்**

யாப்பருங்கலம் என்னும் நூலுக்குத் துணை (சார்பு) நூலாக எழுதப்பட்டதே யாப்பருங்கலக் காரிகை ஆகும். காணிகை என்பதற்குக் கட்டளைக் கலித்துறை என்பது பொருளாகும். யாப்புப் பற்றிய விதிகளைக் கட்டளைக் கலித்துறையால் எடுத்துரைப்பதால் இந்நூல் யாப்பால் (பாவகையால்) இப்பெயர் பெற்றது. பெண்ணாகிய சாரிகையை முன்னிறுத்திப் (மகடூஉ முன்னிலை) பேசுவதால் இப்பெயர் பெற்றது எனப் பொருள் கூறுவது பொருந்தாததாகும். யாப்பாகிய பெரிய கடற்பரப்பைக் கடப்பதற்கு ஒரு மரக்கலம் போன்றது' யாப்பினைப் பற்றி எடுத்துரைக்கும் நூல்களுள் அரிய அணிசுலன் போன்றது என யாப்பருங்கலக் காரிகை என்னும் பெயருக்குப் பொருள் கூறுவர்.

**நூல் அமைப்பு**

இந்நூல் **உறுப்பியல், செய்யுளியல், ஒழிபியல்** என்னும் மூன்று இயல்களையும் **44** காரிகைகளையும் கொண்டுள்ளது. செய்யுளின் உறுப்புக்களைப் பற்றிக் கூறும் முதல் இயல் **20** காரிகைகளைக் கொண்டுள்ளது. செய்யுளின் வகைகளையும் இனங்களையும் விளக்கும் செய்யுளியல் **15** காரிகைகளைப் பெற்றுள்ளது. இவ்விரு இயல்களிலும் கூறப்படாத செய்திகளை எடுத்துரைக்கும் ஒழிபியல் **9** காரிகைகளால் அமைந்தது. ஒவ்வொரு இயலின் இறுதியிலும் இயல் காரிகைகளின் முதற் சீர்களைத் தொகுத்து அமைக்கப்பெற்ற ஒரு காரிகை இடம் பெற்றுள்ளது. உதாரண முதல் நினைப்புக் கூறுகின்ற காரிகைகள் (மாவாழ் நீங்கலாக) 15. இவற்றையும் கூட்ட இந்நூலின்கண் அமைந்த காரிகை 59.

**நூலாசிரியர்**

யாப்பருங்கலம், காரிகை என்னும் இரண்டு நூல்களையும் இயற்றியவர் அமிதசாகரர் ஆவார். அமிதசாகரர் என்னும் பெயருக்குப் பெருங்கடல் என்பது பொருளாகும். மிதம் - அளவுக்கு உட்பட்டது' அமிதம் அளவுக்கு உட்படாதது. சாகரம் கடல். இப்பெயரில் இருந்து இவ்வாசிரியரின் பரந்துபட்ட அறிவை அடிப்படையாக வைத்துச் சூட்டபெற்ற சிறப்புப் பெயர் எனக் கொள்ளலாம். இவர் சமணசமயத்தைச் சார்ந்தவர் என்பதைத் தற்சிறப்புப் பாயிரத்தின் வழி அறியலாம். இவருடைய காலம் கி. பி. 10 ஆம் நூற்றாண்டாகும். இந்நூலை இயற்றியதற்காகக் குளத்தூர் என்னும் ஊரைப் பரிசாகப் பெற்றார். அவ்வூர் காரிகைக் குளத்தூர் என வழங்கப்பட்டதை நீடூர்க் கல்வெட்டின் வழி அறிய முடிகின்றது. குளத்தூர் தொண்டை மண்டலத்தில் இருப்பதாகக் குறிக்கப்படுவதால் இந்நூலின் ஆசிரியர் தொண்டை மண்டலத்தைச் சார்ந்தவர் எனக் கருதலாம்.

**உரையாசிரியர்**

அமிதசாகரரின் இரண்டு நூலுக்கும் உரை எழுதியவர் குணசாகரர் குணசாகரர் என்பதற்குக் குணக்கடல் என்பது பொருளாகும். இவரைப் பற்றிய வரலாறு முழுமையாகத் தெரியவில்லை. ஆயினும் இவ்வுரையாசிரியர் பண்டை இலக்கிய இலக்கணங்களைத் தோய்ந்து கற்றவர்' ஆழங்கால் பட்ட ஆராய்ச்சி அறிவுடையவர் என்பவை புலனாகின்றன. இவர்தம் உரை சுருக்கம், நுட்பம், தெளிவு ஆகியவற்றை

**உறுப்பியல்**

இந்நூல் உறுப்பியல் செய்யுளியல், ஒழிபியல் என்னும் மூன்று இயல்களைக் கொண்டது. முதலாவதாகிய உறுப்பியலில் அமைந்த காரிகைகள் 20. அவற்றுள் தற்சிறப்புப்பாயிரம் (1) அவையடக்கம் (23) நீங்கலாக அமைந்தவை 17. அக்காரிகைகளும் 8, 11, 13, 15, 18, 20 ஆகிய ஆறும் உதாரண முதற்குறிப்பும் காரிகைகள், எஞ்சிய பதினொன்றும் எழுத்து முதல் தொடை ஈறாக அமைந்த உறுப்புக்களை நிரல்பட விளக்குகின்றன. உறுப்புகளின் இயல்பைக் கூறுவதால் உறுப்பியல் என்பது காரணப்பெயராகும் உறுப்பியலின் இறுதியில் காரிகைகளின் முதற்குறிப்பு நினைவுக் காரிகை ஒன்றுள்ளது. அதனையும் கூட்ட இவ்வியலில் அமைந்த காரிகை 21.

**1. எழுத்துக்கள் பற்றிய கருத்துக்கள்**

காற்றைக் கீழிருந்து மேல் எழுப்பி உண்டாக்குகின்ற காரணத்தாலும் (ஒலிவடிவம்) எழுதுகின்ற காரணத்தாலும் (வரிவடிவம்) எழுத்து அவ்வாறு அழைக்கப்படுகிறது. அவ்எழுத்து 1.குறில் 2. நெடில் 3. உயிர் 4.குற்றியலிகரம் 5.குற்றியலுகரம் 6.ஐகாரக்குறுக்கம் 7-ஆய்தம் 8.மெய் 9.வல்லினம் 10. மெல்லினம் 11.இடையினம் 12.உயிர்மெய் 13.அளபெடை எனப் பதின்மூன்று ஆகும். இவ்வெழுத்துப் பற்றிய செய்திகள் ஒரு காரிகை (4) வழி எடுத்துரைக்கப்படுகின்றன.

**எழுத்துக்களின் பெயர்வேறுபாடு**

4. **குறினெடி லாவி குறுகிய மூவுயி ராய்தமெய்யே**

**மறுவறு மூவின மைநீ குயிர்மெய் மதிமருட்டும்**

**சிறுங்தற் பேரமாக் கட்செய்ய வாயைய நுண்ணிடையாய்**

**அறிகு குரைத்த வளபு மசைக்குறுப் பாவனவே**

பிறைமதியினைத் தோற்று ஓடச் செய்கின்ற அல்லது ஆடவரின் அறிவை மயக்குகின்ற பிறை போன்ற நெற்றி, போர் செய்கின்ற பெரிய கண்கள், சிவந்த இதழ், உண்டோ! இல்லையோ என்னும் ஐயத்தைத் தோன்றச் செய்யும் இடை ஆகியவற்றை உடையவளே! 1.குறில் 2.நெடில் 3. (என்னும் பகுப்பிற்குரியதாய் அமையும்) உயிர் 4.குற்றியலிகரம் 5.குற்றியலுகரம் 6.ஐகாரக்குறுக்கம் 7.ஆய்தம் 8.மெய் (அதன் வகையாகிய) 9.வல்லினம் 10. மெல்லினம் 11. இடையினம் 12. (உயிரும் மெய்யும் சேர்ந்தியங்கும்) உயிர்மெய் 13.அளபெடை (உயிரளபெடை, ஒற்றளபெடை) என்னும் பதின்மூன்றும் அசைக்கு உறுப்புக்கள் ஆவனவாம்.)

மேல் அதிகாரம் பாரித்த எட்டனுள் அசைக்கு உறுப்பாம் எழுத்துக்களது பெயர் வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

1. **குறில்:** என்பது குற்றெழுத்து'-அ, இ, உ, எ, ஒ என இவை.

> **"அஇஉ**
>
> **எஒ என்னும் அப்பால் ஐந்தும்**
>
> **ஓரளபு இசைக்கும் குற்றெழுத்து என்ப." (தொல்.3)**

2. **நெடில் :** என்பது நெட்டெழுத்து :- ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என இவை.

> **"ஆ,ஈ,ஊ,ஏ,ஐ.**
>
> **ஓ, ஔ என்னும் அப்பால் ஏழும்**
>
> **ஈரளபு இசைக்கும் நெட்டெழுத்து என்ப." (தொல்.4)**

3. **ஆவி:** என்பது உயிரெழுத்து : அவை அகர முதல் ஔகாரம் ஈறாய்க் கிடந்த பன்னிரண்டு எழுத்தும் எனக் கொள்க.

> **"ஔகார இறுவாய்ப்**
>
> **பன்னீர் எழுத்தும் உயிர்என மொழிய." (தொல்.9)**

**4,5,6.** குறுகிய மூவுயிர் ஆவன : குற்றியலிகரமும், குற்றியலுகரமும் ஐகாரக் குறுக்கமும் என இவை. இவை மேலே சொல்லுதும்.

7. **ஆய்தம் :** என்பது அ.ஃகேனம். அ.ஃகேனம் எனினும் ஆய்தம் எனினும் தனிநிலை எனினும் புள்ளி எனினும் ஒற்று எனினும் ஒக்கும்.

> **"அ.ஃகேனம் ஆய்தம் தனிநிலை புள்ளி**
>
> **ஒற்றுஇப் பால ஐந்தும் இதற்கே."**

வரலாறு : எ.ஃகு, சு.ஃசு, க.ஃடு, சு.ஃது, க.ஃபு, க.ஃறு என வரும். என்னை?

> **"குறியதன் முன்னர் ஆய்தப் புள்ளி**
>
> **உயிரொடு புணர்ந்தவல் லாறன் மிசைத்தே." (தொல்.38)**

8. **மெய்யாவன :** சுகர முதல் னகரம் பதினெட்டெழுத்தும் எனக்கொள்க. என்னை? ஈறாய்க் கிடந்த

> **"னகார இறுவாய்ப்**
>
> **பதினெண் எழுத்தும் மெய்என மொழிய." (தொல்.9)**

**9,10, 11. மூவினமாவன**

வல்லினம், மெல்லினம், இடையினம் என இவை. வல்லினமாவன: க, ச, ட, த, ப, ற. மெல்லினமாவன : ங, ஞ, ண, ந, ம, ன. இடையினமாவன : ய, ர, ல, வ, ழ, ள.

**“வல்லெழுத்து என்ப கசட தபற.”** **(தொல்.19)**

**“மெல்லெழுத்து என்ப வருண நமன.”** **(தொல். 20)**

**“இடையெழுத்து என்ப யரல வழள.”** **(தொல்.21)**

மறுவறு மூவினம் என்று சிறப்பித்த அதனால்,அவை உயிர்மெய்யாகிய காலத்தும் அப்பெயரானே வழங்கப்படும் எனக்கொள்க.

**“விதப்புக் கிளவி வேண்டியது விளைக்கும்.”**

**12. உயிர்மெய்யாவன** : உயிரும் மெய்யும் கூட்டி உச்சரிக்கப்படா நின்ற பன்னிரு பதினெட்டு இருநூற்று ஒருபத்தாறு எழுத்தும் எனக் கொள்க.

**“உயிர்ஈர் ஆறே மெய்ம்மு வாறே**

**அம்மு வாறும் உயிரொடு உயிர்ப்ப**

**இருநூற்(று) ஒருபத்(து) ஆறுஉயிர் மெய்யே.”** **(தொல் 18)**

மைதீர் உயிர்மெய் என்று சிறப்பித்த அதனால் ஏறிய உயிரின் அளவே உயிர்மெய்க்கும் அளவெனக் கொள்க.

**வெண்பா**

**“இடம்பட மெய்ஞ்ஞானம் கற்பினும் என்றும்**

**அடங்காதார் என்றும் அடங்கார் - தடங்கண்ணாய்!**

**உப்பொடு நெய்யால் தயிர்காயம் பெய்தடினும்**

**கைப்பறா பேய்ச்சுரையின் காய்.”** **(நாலடியார் -116)**

எனப்பிறரும் தடங்கண்ணாய் என்று மகடூஉ முன்னிலை சொன்னார் உளர் எனக் கொள்க. மதி என்பது ஈண்டுப் பிறை.

**13.அளபெடை** : அறிஞர் உரைத்த அளபும் என்பது' புலவரால் சொல்லப்பட்ட அளபெடைகளும் எ-று. அளபு எனினும் அளபெடை எனினும் புலுதம் எனினும் ஒக்கும். என்னை?

**“அளபே புலுதம் ஆயிரு பெயரும்**

**அளபெடை என்ப அறிந்திசி னோரே.”**

என்றார் ஆகலின். அவை போக்கிச் சொல்லுதும்.

அசைக்குறுப்பாவன என்பது இப்பதின்மூன்று திறத்தெழுத்தும் அசைக்குறுப்பாம் (எகா)

**“குறில்நெடில் அளபெடை உயிர்உறுப்பு உயிர்மெய்**

**வலிய மெலிய இடைமையோடு ஆய்தம்**

**இ உ ஐஎன் மூன்றன் குறுக்கமோ(டு)**

**அப்பதின் மூன்றும் அசைக்குஉறுப்(பு) ஆகும்.”**

என்றார் காக்கைபாடினியாரும் எனக் கொள்க. ஏகாரம் ஈற்றசை ’ தேற்றம் எனினும் அமையும்.

**“தேற்றம் வினாவே பிரிநிலை எண்ணே**

**ஈற்றசை இவ்ஐந்து ஏகா ரம்மே.” (தொல்.742)**

இனி, மூவுயிர்க் குறுக்கமும் அளபெடைகளும் ஆமாறு சொல்லுதும். அவற்றுள் குற்றியலுகரம் வருமாறு:

**குற்றியலுகரம்**

நெடில் கீழும், நெடில் ஒற்றின் கீழும், குறில் இணைக் கீழும், குறில் இணை ஒற்றின் கீழும், குறில் நெடில் கீழும், குறில் நெடில் ஒற்றின் கீழும், குறில் ஒற்றின் கீழும் என்று இவ்ஏழிடத்தும் ஆறு வல்லெழுத்தினையும் ஊர்ந்து உகரம் வந்தால், அது குற்றியலுகரம் என்று வழங்கப்படும் எனக் கொள்க.

**“நெடிலே குறில்இணை குறில்நெடில் என்றுஇவை**

**ஒற்றொடு வருதலொடு குற்றொற்று இறுதிஎன்(று)**

**ஏழ்குற்று உகரக்கு இடன்என மொழிய.”**

**“எழுவகை இடத்தும் குற்றிய லுகரம்**

**வழுவின்றி வருஉம் வல்லா(று) ஊர்ந்தே.”.**

வருமாறு: நாகு, காசு, காடு, காது. காபு.காறு என நெடிற்கீழ் ஆறு வல்லெழுத்தினையும் ஊர்ந்து குற்றியலுகரம் வந்தவாறு.

நாக்கு, காச்சு, காட்டு, காத்து, காப்பு, காற்று என நெடில் ஒற்றின் கீழ் ஆறு வல்லெழுத்தினையும் ஊர்ந்து குற்றியலுகரம் வந்தவாறு.

வரகு, முரசு, முருடு, மருது, துரபு, கவறு எனக் குறில் இணைக்கீழ் ஆறு வல்லெழுத்தினையும் ஊர்ந்து குற்றியலுகரம் வந்தவாறு.

அரக்கு, பொரிச்சு, தெருட்டு,குருத்து, பொருப்பு, சிரற்று எனக் குறிலிணை ஒற்றின்கீழ் ஆறு வல்லெழுத்தினையும் ஊர்ந்து குற்றியலுகரம் வந்தவாறு.

அசோகு, பலாசு, மலாடு, கெடாது, புதாபு, விராறு எனக் குறில் நெடில் கீழ் ஆறு வல்லெழுத்தினையும் ஊர்ந்து குற்றியலுகரம் வந்தவாறு.

தமாக்கு, தடாச்சு, பனாட்டு, கடாத்து, புதாப்பு, விராற்று எனக் குறில் நெடில் ஒற்றின் கீழ் ஆறு வல்லெழுத்தினையும் ஊர்ந்து குற்றியலுகரம் வந்தவாறு.

அக்கு, கச்சு, கட்டு, கத்து, கப்பு, கற்று எனக் குறில் ஒற்றின் கீழ் ஆறு வல்லெழுத்தினையும் ஊர்ந்து குற்றியலுகரம் வந்தவாறு காண்க.

இனிக் குற்றியலுகரம் அறுவகைப்படும் என்பாரும் உளர். அவையாவன, ஈரெழுத்தொரு மொழி, உயிர்த்தொடர் மொழி. இடைத்தொடர்மொழி, ஆய்தத்தொடர் மொழி, வன்றொடர் மொழி, மென்றொடர் மொழி என்று இவை.

### குற்றியலிகரம்

இனிக் குற்றியலிகரம் வருமாறு:- உகரம் திரிந்தும் திரியாதும் யகரமோடு இயைபின்கண் வந்த இகரம் குற்றியலிகரம் என்று வழங்கப்படும்.

**“வல்லெழுத்து ஆறோடு எழுவகை இடத்தும்**

**உகரம் அரையாம் யகரமோடு இயையின்**

**இகரமும் குறுகும் என்மனார் புலவர்.” (யா.வி.உரை)**

**“யகரம் வருவழி இகரம் குறுகும்**

**உகரக் கிளவி துவரத் தோன்றாது.” (தொல்.410)**

நாகியாது. காசியாது, காடியாது. காதியாது, காபியாது. காறியாது என வரும். ஒழிந்தனவும் இவ்வாறே ஒட்டிக் கொள்க. இனித் திரியாது வந்த குற்றியலிகரம் வருமாறு. கேண்மியா, சென்மியா எனக்கொள்க.

### ஐகாரக் குறுக்கம்

இனி ஐகாரக் குறுக்கம் வருமாறு

அளபெடுத்தற் கண்ணும் தனியே சொல்லுதற்கண்ணும் அன்றி அல்லாத வழி வந்த ஐகாரம் தன்னளவில் சுருங்கி ஒன்றரை மாத்திரையும், ஒரு மாத்திரையுமாகக் குறுகும் எனக்கொள்க. ஐகாரம் குறுகுமிடத்து மொழி முதல், இடை, கடை என மூன்றிடத்தும் குறுகும்.

**"அளபெடை தனிஇரண்(டு) அல்வழி ஐஔ**

**உளதாம் ஒன்றரை தனிமையும் ஆகும்."** **(யா. வி. 2. நூ. உரை)**

ஐப்பசி -மைப்புறம்: மடையன் - இடையன்' குவளை - தவளை' தினை -பனை என முதலும் இடையும் கடையும் குறுகியவாறு கண்டு கொள்க.

**அளபெடை**

இனி, அளபெடை வருமாறு - அளபெடை இரண்டு வகைப்படும். உயிரளபெடையும் ஒற்றளபெடையும் என.

**"உயிரள பெடையும் ஒற்றள பெடையும் என்று**

**ஆயிரண்டு என்ப அளபெடை தானே."**

**உயிரளபெடை**

அவற்றுள், உயிரளபெடைக்குச் சொல்லுமாறு : உயிருள் நெட்டெழுத்து ஏழும் அளபெடுக்கும். அவை அளபெடுக்குமிடத்து ஐகாரம் இகரத்தோடும் ஔகாரம் உகரத்தோடும் அளபெடுக்கும். ஒழிந்தனவும் தமக்கு இனமாகிய குற்றெழுத்தோடு அளபெடுக்கும் எனக்கொள்க.

**"குன்றிசை மொழிவயின் நின்றுஇசை நிறைக்கும்**

**நெட்டெழுத்(து) இம்பர் ஒத்தகுற் றெழுத்தே."** **(தொல். 41)**

**"ஐஔ என்னும் ஆயிர் எழுத்திற்கு**

**இகர உகரம் இசைடுநறைவு ஆகும்."** **(தொல். 42)**

என்றார் தொல்காப்பியனார்.

அவை நான்கிடத்தும் வந்து அளபெடுக்கும். நான்கு இடமாவன ' தனிநிலையும், ஒருசொல்லின் முதனிலையும், இடைநிலையும், இறுதி நிலையும் என இவை.

**"தனிநிலை முதனிலை இடைநிலை ஈறுஎன**

**நால்வகைப் பகுஉம்அள பாய்வரும் இடனே."**

ஆ அ, ஈ இ, ஊ உ, ஏ எ, ஐ இ, ஓஒ, ஔ உ என இவை ஏழும் தனிநிலை அளபெடை

ஆஅரிடம், ஈ இரிலை, ஊ உரிடம், ஏஎரிகள், ஐஇயவி, ஓஒரிகள், ஔஉவியம் என இவை ஏழும் முதனிலை அளபெடை

படாஅகை, பரீஇயம், கழூஉமணி, பரேஎரம், வளைஇயம், புரோஒசை, அநௌஉகம் என இவை ஏழும் இடைநிலை அளபெடை.

கடாஅ, குரீஇ, கழூஉ, மிலோ, கடைஇ, அரோஒ, அநௌஉ என இவை ஏழும் இறுதிநிலை அளபெடை.

உயிரளபெடை எழுத்து நோக்க ஏழாம்' இடம் நோக்க நான்காம்' எழுத்தும் இடமும் உறழ்ந்து நோக்க இருபத்து எட்டாம் எனக்கொள்க.

**ஒற்றளபெடை**

இனி, ஒற்றளபெடைக்குச் சொல்லுமாறு: ஒற்றுக்களுள் ங, ஞ, ண, ந, ம, ன' வ, ய, ல, ள' ஆய்தம்(∴) என்னும் பதினோர் ஒற்றும் குறிற்கீழும் குறில்இணைக் கீழும் வந்து அளபெடுக்கும் எனக் கொள்க.

**"ஙஞண நமன வயலள ஆய்தம்**

**எனும்இவை ஈரிடத்து அளபெழும் ஒரோவழி."** **(யாப்பு விருத்தி மேற்.)**

**"வன்மையொடு ர.்.கான் ழ.்.கான் ஒழித்தாங்(கு)**

**அன்மெய் ஆய்தமோடு அளபெழும் ஒரோவழி."**

மங்ங்கலம், மஞ்ஞ்சு, மண்ண்ணு, பந்ந்து, அம்ம்பு, மின்ன்னு, தெவ்வ்வர். வெய்ய்யர், செல்லக, கொள்ள்க, எ.்..்.கு எனக் குறில்கீழ்ப் பதினோர் ஒற்றும் அளபெழுந்தவாறு சுண்டு கொள்க.

அரங்ங்கம், முரஞ்ஞ்சு, முரண்ண்டு, பருந்ந்து, அரும்ம்பு, முரன்ன்று. குரவ்வ்வை, அரைய்ய்யர், குரல்ல்கள், திரள்ள்கள், வர.்..்.கு எனக் குறிலிணைக்கீழ்ப் பதினோர் ஒற்றும் அளபெழுந்தவாறு கண்டு கொள்க.

இவ்இருபத்திரண்டு புள்ளி அளபெடையும் செய்யுளகத்து அல்லது பரவை வழக்கினுள் வாரா எனக் கொள்க.

**மாத்திரை**

அறிஞர் உரைத்த அளபும் என்று சிறப்பித்த அதனால் குற்றெழுத்தும் ஒற்றளபெடையும் ஒரோஒன்று ஒரு மாத்திரை: நெட்டெழுத்து இரண்டு மாத்திரை: உயிரளபெடை மூன்று மாத்திரை' ஆய்தமும், மெய்யும், குற்றியலிகரமும், குற்றியலுகரமும் ஒரோஒன்று அரை மாத்திரை: ஐகாரக்குறுக்கம் ஒன்றரை மாத்திரை: மகரக்குறுக்கமும், ஆய்தக்குறுக்கமும் ஒரோஒன்று கால் மாத்திரை.

**2.அசை பற்றிய கருத்துக்கள்**

எழுத்துக்களுள் ஒன்றினை மற்றொன்றனோடு சேர்த்து (ஒலித்து) இசை கொள்வதே அசை ஆகும். இது காரணப்பெயர். இதனை அவ்எழுத்து அசைத்து இசைகோடலின் அசையே என்பதால் அறியலாம். எழுத்துக்களால் அமையும் அசை 1. நேரசை 2. நிரையசை என இருவகைப்படும். அவற்றுள் நேரசை,

குற்றெழுத்துத் தனித்து வருதல் - க

நெட்டெழுத்துத் தனித்து வருதல் - கா

குற்றெழுத்து ஒற்றுப்பெற்று வருதல் - கல்

நெட்டெழுத்து ஒற்றுப்பெற்று வருதல் - கால்

என்னும் நான்கு தன்மையால் அமையும். நிரையசை,

குறில் இணைந்து வருதல் குறில் நெடில் இணைந்து வருதல் - பல

குறில் இணைந்து ஒற்றுப்பெற்று வருதல் - படம்

குறில் நெடில் இணைந்து ஒற்றுப்பெற்று வருதல் - படாம்

என்னும் நான்கு தன்மையால் அமையும்.

ஓரெழுத்தால் அமைவது நேரசை (தனியசை). ஓர் எழுத்தோடு மற்றோர் எழுத்தை நிறைத்து - இணைத்து அமைத்துக் கொள்வது நிரையசை (இணையசை ) ஆகும். அசைகளில் ஒற்றெழுத்துக்குச் சிறப்பில்லை. நேரசை ஓர் அலகு பெறும்' நிரையசை ஈர்அலகு பெறும். அசை பற்றிய கருத்துக்களை ஒரு காரிகை (5) எடுத்துரைக்கிறது.

**அசை இலக்கணம்**

**5. குறிலே நெடிலே குறிலிணை யேனைக் குறினெடிலே**

**நெறியே வரினு நிரைந்தொற் றடுப்பினும் நேர்நிரையென்**

**றறிவேய் புரையுமென் றோளி யுதாரண மாழிவெள்வேல்**

**வெறியே சுறாநிறம் விண்டோய் விளாமென்று வேண்டுவரே.**

மூங்கிலைப் போன்ற வடிவத்தைக் கொண்ட மென்மையான தோளை உடையவளே ! குறில், குறில் ஒற்று: நெடில், நெடில் ஒற்று நேரசை. குறில் இணை, குறில் இணை ஒற்று' குறில் நெடில், குறில் நெடில் ஒற்று நிரையசை என்று அறிவாயாக. இவற்றிற்கு முறையே ஆ, ழி, வெள், வேல், வெறி, சுறா, நிறம், விண்ணைத் தொடுகின்ற விளாம் என்னும் எட்டையும் எடுத்துக்காட்டுக்களாகக் கூறுவர் புலவர்.

நிரல்நிறைப் பொருள்கோள் வகையால் நேரசையும் நிரையசையும் ஆமாறும் அவற்றிற்கு உதாரணம் ஆமாறும் உணர்த்துதல் நுதலிற்று.

குறிலே நெடிலே குறிலிணை ஏனைக் குறில் நெடிலே நெறியே வரினும் நிரைந்து ஒற்றடுப்பினும் நேர்நிரை என்று அறி. என்பது குற்றெழுத்துத் தனியே வரினும், நெட்டெழுத்துத் தனியே வரினும், குற்றெழுத்து ஒற்றடுத்து வரினும், நெட்டெழுத்து ஒற்றடுத்து வரினும் நேரசையாம். குறில் இணைந்து வரினும், குறில் நெடில் இணைந்து வரினும், குறில் இணைந்து ஒற்றடுத்து வரினும், குறில் நெடில் இணைந்து ஒற்றடுத்து வரினும் நிரையசையாம்.

**நேரிசை ஆசிரியப்பா**

**“அணிநிழ லசோகமர்ந்(து) அருள்நெறி நடாத்தியஜஅணி- குறில் இணை**

**மணிதிகழ் அவிர்ஒளி வரதனைப் லசோ - குறில் நெடில்**

**பணியவர் பவநனி பரிசறுப் பவரே.” கமர் - குறிலிணை ஒற்று**

நீலமணி போலும் ஒளிவீசும் திருமேனியை உடையவன் அருகதேவன், அவன் அசோக மரத்தின் அழகிய நிழலின் கீழிருந்து நன்னெறியை அருளியவன். அவனுடைய திருவடிகளை வணங்குபவர் மீண்டும் பிறவாப் பெருநெறியாகிய முத்தி உலகைச் சேர்வர்.

இது நிரையசை நான்கும் வந்த செய்யுள்.

**சீர் பற்றிய கருத்துக்கள்**

நேர், நிரை என்னும் இருவகை அசைகளும் தனித்தோ தொடர்ந்தோ அளவுற அமைவது சீர். இச்சீரே இசைக்கு உதவுவதாகும். சீர் என்பதற்கு ஓசை என்பது பொருளாகும். அசைகள் பொருந்தி ஓசை புலப்பட நிற்பதால் சீர் என்பது சாரணப்பெயர் ஆகும். இதனை, அசை இயைந்து சீர் கொள நிற்றலின் சீர் என்னும் கூற்று எடுத்துரைக்கிறது. இச்சீர்களைப் பற்றிய விளக்கங்கள் மூன்று காரிகைகளில் (6,7,8) எடுத்துரைக்கப் படுகின்றன.அச்சீர்கள் 30 வகைப்படும்.

ஒரு சீரில் (சொல்லில் ) எத்தனை அசை இடம்பெற்றுள்ளதோ அதன் அடிப்படையில் சீர்கள் பெயர் பெறுகின்றன. அவை ஈரசைச்சீர், மூவசைச்சீர், நாலசைச்சீர் அல்லது பொதுச்சீர்,ஓரசைச்சீர் என்பவை ஆகும். நான்குக்கு மேற்பட்டுத் தமிழ் மொமியில் சீர்ப்பகுப்பு இல்லை.

**ஈரசைச்சீர் (4)**

நேர். நிரை என்னும் இவ்விரு அசைகளையும் பெருக்க நால்வகை ஈரசைச்சீர்கள் பிறக்கும். அவை தேமா, புளிமா, கருவிளம். கூவிளம் என்னும் நான்கு வாய்பாடுகளைப் பெறும். இந்நான்கும் இயல்பாக அமைவன ஆதலால் இயற்சீர் எனப்பெயர் பெற்றன. ஆசிரியப்பாவிற்கு உரியதால் ஆசிரிய உரிச்சீர் என அழைக்கப்படுகிறது. ஆசிரியப்பாவை அகவற்பா என்னும் வேறுபெயராலும் வழங்குவர். ஆகையால் இது அகவல் உரிச்சீர் ஆயிற்று. ஈற்றை அடிப்படையாகக் கொண்டு தேமா, புளிமா என்பன மாச்சீர் எனப்பட்டன. இவற்றை நேரீற்று ஈரசைச்சீர் எனவும் கூறுவர். கருவிளம், கூவிளம் என்பன விளச்சீர் எனக் குறிக்கப்படுகின்றன. இச்சீர்களை நிரையீற்று ஈரசைச்சீர் எனவும் அழைப்பர்.

| | | | |
|---|---|---|---|
| நேர் நேர் - தேமா மாச்சீர் | | | ஆசிரிய உரிச்சீர் (அல்லது) |
| நிரை நேர் - புளிமா நேரிற்று | (ஈரசைச்சீர் | | அகவல் உரிச்சீர்) |
| நிரை நிரை - கருவிளம் விளச்சீர் | (அல்லது) | | |
| நேர் நிரை - கூவிளம் நிரையீற்று | ஈரசைச்சீர்,) | | |

காய்ச்சீர் ஈரசைச்சீர்களோடு நேர் என்னும் அசையைச் சேர்க்க அவை தேமாங்காய், புளிமாங்காய், கருவிளங்காய், கூவிளங்காய் என்னும் வாய்பாடுகளைப் பெறும். இச்சீர்களின் ஈற்றில் காய் என்பது இடம் பெறுவதால் இவை காய்ச்சீர் ஆயின. நேர் என்பது ஈற்றசையாக முடிவதால் நேரீற்று மூவசைச்சீர் ஆயிற்று. வெண்பாவிற்குரிய சீர்கள் ஆகையால் வெண்பா உரிச்சீர் எனவும் கூறுவர்.

நேர் நேர் நேர் - தேமாங்காய்

நிரை நேர் நேர் - புளிமாங்காய்

நிரை நிரை நேர் -கருவிளங்காய்

நேர் நிரை நேர் கூவிளங்காய்

கனிச்சீர் தேமா முதலிய ஈரசைச் சீர்களோடு நிரை என்னும் அசையைச் சேர்க்க அவை தேமாங்கனி, புளிமாங்கனி, கருவிளங்கனி, கூவிளங்கனி என்னும் வாய்பாடுகளைப் பெறும். இவற்றைக் கனிச்சீர் என ஈறுபற்றிக் கூறுவர். நிரையை ஈற்றில் பெறுவதால் நிரையீற்று மூவசைச்சீர் ஆயின. வஞ்சிப்பாவிற்குரியன ஆதலால் வஞ்சியுரிச்சீர் எனச் சிறப்பிக்கப் பெறுகிறது.

நேர் நேர் நிரை -தேமாங்கனி

நிரை நேர் நிரை - புளிமாங்கனி

நிரை நிரை நிரை - கருவிளங்கனி

நேர் நிரை நிரை - கூவிளங்கனி

நான்கு அசையால் அமையும் சீர்கள் சிறப்பற்றவை. ஆகவே இச்சீர்களைப் பொதுச்சீர் எனக்குறிப்பர். இவை பெரும்பாலும் பாடல்களில் இடம் பெறுவதில்லை. இச்சீரால் அமைந்த பாடல்கள் மிகவும் குறைவு.

தேமா, புளிமா, கருவிளம். கூவிளம் என்னும் இயற்சீர்களோடு தண்பூ, நறும்பூ, நறுநிழல், தண்ணிழல் என்கின்ற நான்கு சீர்களையும் பெருக்க அவை 16 சீர்களாக அமையும். இங்குக் கூறப்பட்ட தண்பூ முதலானவற்றைப் பிரித்துப் பார்க்க அவையும் தேமா முதலான வாய்பாடுகளைப் பெறும்.

**பூச்சீர்கள் (8)**

தேமா முதலான நான்கனோடு தண்பூ. நறும்பூ ஆகிய இரண்டையும் உறழ எட்டுச்சீர்கள் தோன்றும். அவை ஈற்றில் பூ என முடிவதால் பூச்சீர் என வழங்கப் பெறும். நேர் என்பது ஈற்றசையாக அமைவதால் நேரீற்று நாலசைச்சீர் எனவும் குறிக்கப்பெறும்.

நேர் நேர் நேர் நேர் - தேமாந்தண்பூ

நிரை நேர் நேர் நேர் - புளிமாந்தண்பூ

நிரை நிரை நேர் நேர் - கருவிளந்தண்பூ

நேர் நிரை நேர் நேர் - கூவிளந்தண்பூ

நேர் நேர் நிரை நேர் - தேமா நறும்பூ

நிரை நேர் நிரை நேர் - புளிமா நறும்பூ

நிரை நிரை நிரை நேர் - கருவிள நறும்பூ

நேர் நிரை நிரை நேர் - கூவிள நறும்பூ

பூச்சீர் (அல்லது) நேரீற்று நாலசைச்சீர்

**நிழற்சீர்கள் (8)**

தேமா முதலான நான்கு சீர்களோடு நறு நிழல், தண்ணிழல் ஆகிய இரண்டையும் உறழ எட்டுச் சீர்கள் தோன்றும், அவை ஈற்றில் நிழல் என முடிவதால் நிழற்சீர் எனக் குறிக்கப்பெறும். நிரை என்பது ஈற்றசையாக அமைவதால் நிரையீற்று நாலசைச்சீர் எனவும் அழைப்பர்.

நேர் நேர் நிரை நிரை - தேமா நறுநிழல்

நிரை நேர் நிரை நிரை - புளிமா நறுநிழல்

நிரை நிரை நிரை நிரை - கருவிள நறுநிழல்

நேர் நிரை நிரை நிரை - கூவிள நறுநிழல்

நேர் நேர் நேர் நிரை - தேமாந்தண்ணிழல்

நிரை நேர் நேர் நிரை - புளிமாந்தண்ணிழல்

நிரை நிரை நேர் நிரை - கருவிளந்தண்ணிழல்

நேர் நிரை நேர் நிரை - கூவிளந்தண்ணிழல்

நிழற்சீர் (அல்லது) நிரையீற்று நாலசைச்சீர்

**ஓரசைச் சீர் (2)**

நேர், நிரை என்னும் அசைகள் செய்யுளில் சீராக வருவதுண்டு. அவை பெரும்பாலும் வெண்பாவின் ஈற்றசையாக வரும். இவ்வாறு வரும் சீரை அசைச்சீர் எனவும் ஓரசைச்சீர் எனவும் கூறுவர். நேர் என்பது நாள் என்னும் வாய்பாட்டால் காட்டப் படுவதால் நாட்சீர் ஆயிற்று. நிரை என்னும் அசை மலர் என்னும் வாய்பாட்டைப் பெறுவதால் மலர்ச்சீர் எனச் சுட்டப்பெறுகிறது.

**சீர்களின் பெயரும் வகையும்**

6. **ஈரசை நாற்சீ ரகவற் குரியவெண் பாவினவாம்**

**நேரசை யாலிற்ற மூவசைச் சீர்நிரை யானிறுப**

**வாரசை மென்முலை மாதே வகுத்தவஞ் சிக்குரிச்சீர்**

**ஓரசை யேநின்றுஞ் சீராம் பொதுவொரு நாலசையே.**

கச்சினால் கட்டப்பட்ட மென்மையான மார்பினை உடைய பெண்ணே ! 1. இரண்டசையினால் ஆகிய (தேமா முதலான) சீர்கள் நான்கும் ஆசிரியப்பாவிற்கு உரியனவாம் 2. அவற்றுடன் நேர் என்பதை ஈற்றில் பெற்ற சீர்கள் நான்கும் வெண்பாவிற்குரியன 3.ஈரசைச் சீருடன் நிரை என்பதை ஈற்றில் பெற்ற (தேமாங்கனி முதலான) சீர்கள் நான்கும் வஞ்சிப்பாவிற்குரிய சீர்களாம் 4. சில இடங்களில் நேரசை, நிரையசை ஆகியவை சீராகவும் கருதப் பெறும் 5. நாலசையால் ஆகிய சீர் பொதுச்சீராகும்.)

அவ்வசைகளால் ஆகிய சீர்களது பெயர் வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

ஈரசை நாற்சீர் அகவற்குரிய என்பது : இரண்டசையினால் ஆகிய நான்கு சீரும் ஆசிரிய உரிச்சீர் எனப்படும்

ஆம் என்பதனை எல்லாவற்றோடும் கூட்டி மத்திம தீபமாகப் பொருளுரைத்துக் கொள்க.

**சீர்களுக்குரிய வாய்ப்பாடு**

7. **தேமா புளிமா கருவிளங் கூவிளஞ் சீரகவற்**

**காமாங் கடைகா யடையின்வெண் பாவிற்கந் தங்கனியா**

**வாமாண் கலையல்குன் மாதே வகுத்தவஞ் சிக்குரிச்சீர்**

**நாமாண் புரைத்த வசைச்சீர்க் குதாரண நாண்மலரே**

தாவுகின்ற மாண்பினை உடைய ஆடை அணிந்த அரையினை உடைய பெண்ணே! 1. தேமா (நேர்நேர்), புளிமா (நிரை நேர்), கருவிளம் (நிரை நிரை), கூவிளம் (நேர் நிரை) என்னும் நான்கு சீர்களும் ஆசிரிய உரிச்சீர்க்கு உரிய வாய்பாடுகளாம் 2. தேமாங்காய் நேர் நேர் நேரி, புளிமாங்காய் (நிரை நேர் நேர்), கருவிளங்காய் (நிரை நிரை நேர்) கூவிளங்காய் நேர் நிரை நேர்) எனக் காய் என்பதனை ஈறாகப் பெற்ற சீர்கள் நான்கும் வெண்பாவிற்கு உரிய வாய்பாடுகள் 3. தேமாங்கனி நேர்நேர் நிறை), புளிமாங்கனி (நிரை நேர் நிரை), கருவிளங்கனி (நிரை நிரை நிரை), கூவிளங்கனி (நேர் நிரை நிரை) எனக் கனி என்பதனை ஈறாகட் பெற்ற சீர்கள் நான்கும் வஞ்சியுரிச்சீருக்குரிய வாய்பாடுகளாகும் 4. நாவினால் உரைக்கப்பெறும் மாண்பினை உடைய நேர், நிரை என்னும் அசைக்கு முறையே நாள், மலர் என்பன வாய்பாடுகளாகும்.

முறையானே முதல் நான்கு சீருக்கும் உதாரணம் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

**தேமா புளிமா கருவிளம் கூவிளம் சீரகவற்காம் என்பது**' நேர் நேர். நிரை நேர், நிரை நிரை, நேர் நிரையாகிய தேமா, புளிமா, கருவிளம், கூவிளம் என்னும் நான்கு சீரும் ஆசிரிய உரிச்சீருக்கு உதாரணமாம்.

**ஆம் கடைகாய் அடையின் வெண்பாவிற்கு என்பது**' அவை, கடையில் காய் என்னும் சொல் பெற்றுத் தேமாங்காய், புளிமாங்காய், கருவிளங்காய், கூவிளங்காய் எனவரும் நான்கு சீரும் வெண்பா உரிச்சீருக்கு உதாரணமாம்.

**அந்தம் கனியா வகுத்த வஞ்சிக்கு உரிச்சீர் என்பது :** அவ் ஈரசைச்சீரின் இறுதிக்கண் கனி என்னும் சொல்பெற்றுத் தேமாங்கனி, புளிமாங்கனி, கருவிளங்கனி, கூவிளங்கனி எனவரும் நான்கு சீரும் வஞ்சி உரிச்சீருக்கு உதாரணமாம்.

**வாமாண் கலையல்குல் மாதே என்பது :** மகடூஉ முன்னிலை.

**நாமாண் புரைத்த அசைச்சீர்க்கு உதாரணம் நாள்மலரே என்பது :** ஒரோவிடத்தாம் என்று உரைக்கப்பட்ட ஓரசைச் சீருக்கு உதாரணம் நாள் என்பதூஉம், மலர் என்பதூஉம் ஆம் என்றவாறு.

**நாள் என்பது நேரசைச் சீர்க்கும், மலர் என்பது** நிரையசைச் சீர்க்கும் உதாரணம்.

**இன்னிசை வெண்பா**

**"அம்ம் பவள்ள் வரிநெடுங்கண் ணாய்வஞ்சிக்**

**கொம்ம் பவள்ள் கொடிமருங்குல் கோங்கின்**

**அரும்ம் பவள்முலை ஒக்குமே ஒக்கும்**

**கரும்ம் பவள்வாயிற் சொல்."**

பொருள்: அழகிய தலைவியின் செவ்வரி படர்ந்த கண்கள் அம்பினை ஒப்பன. ஆராய்ந்து எடுக்கப்பட்ட வஞ்சிக் கொடியை அவளுடைய இடை ஒத்திருந்தது. இலவ மரத்தின் அரும்பை அவளுடைய மார்பு ஒத்திருந்தது. அவளுடைய சொல்லோ கரும்பை ஒத்திருந்தது.

என்னும் இப்பொய்கையார் வாக்கினுள், ஒக்கும் என்பதனை எல்லாவற்றோடும் கூட்டிப் பொருளுரைத்துக் கொண்டாற் போலக் கொள்சு.

**பொதுச்சீர்க்குரிய வாய்பாடு**

8. **தண்ணிழ றண்பூ நறும்பூ நறுநிழ றந்துறழ்ந்தால்**

**எண்ணிரு நாலசைச் சீர்வந் தருகு மினியவற்றுட்**

**கண்ணிய பூவினங் காய்ச்சீ ரனைய கனியொடொக்கும்**

**ஒண்ணிழற் சீரசைச் சீரியற் சீரொக்கு மொண்டளைக்கே.**

1. தேமா முதலிய இயற்சீர் நான்கனோடு தண்பூ, நறும்பூ, நறுநிழல், தண்நிழல் ஆகிய நான்கையும் சேர்த்துப் பெருக்கப் பதினாறு நாலசைச்சீர்க்கும் உதாரணமாம். இவை செய்யுளில் மிகக் குறைவாகவே இடம்பெறும் 2. பூ என முடிபவை காய்ச்சீர் போலத் தளை கொள்ளும் 3. நிழல் என முடிபவை கனிச்சீர் போலத் தளைகொள்ளும் 4.ஓரசைச்சீர், ஈரசைச்சீர் போலத் தளைகொள்ளும்.) நாலசைச் சீர்களில்,

பூ முன் நேர்' நிழல் முன் நிரை - ஒன்றிய தளை

பூ முன் நிரை' நிழல் முன் நேர் - ஒன்றாத தளை

ஓரசைச் சீர்களை ஈரசையாகக் கருத,

நேர் முன் நேர்' நிரை முன் நிரை - ஒன்றிய தளை.

நேர் முன் நிரை: நிரை முன் நேர் - ஒன்றாத தளையாம்.

பொதுச்சீருக்கு உதாரணம் ஆமாறும், அவற்றது எண்ணும் பொதுச்சீரும் அசைச்சீரும் செய்யுளகத்து வருங்கால் தளை வழங்கும் முறைமையும் உணர்த்துதல் நுதலிற்று.

ஒண்தளை என்பதனை இறுதி விளக்காகப் பொருளுரைத்துக் கொள்க கண்ணிய பூவினம் என்று சிறப்பித்த அதனால் வெண்பாவினுள் நாலசைச்சீர் வாரா' ஆசிரியத்துள்ளும் குற்றுகரம் வந்துழி அன்றி வாரா' கலியினுள்ளும் பெரும்பான்மையும் குற்றுகரம் வந்துழியன்றி வாரா' வஞ்சியுள் குற்றுகரம் வாராதேயும் வரப்பெறும்' வஞ்சியுள் இரண்டு நாலசைச்சீர் ஓரடியுள் அருகிக் கண்ணுற்று நிற்கவும் பெறும். (8)

**உதாரண இலக்கிய முதல் நினைப்புக் காரிகை**

**9. குன்றக் குறவ னகவல்பொன் னாரம்வெண் பாட்டுவஞ்சிக்**

**கொன்று முதாரணம் பூந்தா மரையென்ப வோரசைச்சீர்**

**நன்றறி வாரிற் கயவரும் பாலொடு நாலசைச்சீர்க்**

**கன்றதென் னாரள்ளற் பள்ளத்தி னோடங்கண் வானத்துமே.**

1.குன்றக் குறவன் எனத் தொடங்கும் பாடல் ஆசிரிய உரிச்சீர் நான்கும் வந்துள்ளதற்கு எடுத்துக் காட்டாகும் 2. வெண்பா உரிச்சீர் பொருந்திய பாடல் பொன்னாரம் என்பதாகும் 3. பூந்தாமரை எனத் தொடங்கும் பாடல் வஞ்சிப்பாவிற்குரிய சீர்கள் நான்கும் பொருந்தியதற்கு எடுத்துக் காட்டாகும் 4. ஓரசைச்சீருக்கு நன்றறிவாரில் எனவும் பாலொடு எனவும் தொடங்குகின்ற பாடல்கள் மேற்கோள்களாகும் 5. அள்ளற் பள்ளம், அங்கண் வானத்து என்பன நாலசைச்சீர் இடம்பெற்ற பாடல்களாகும்.

முறையானே ஐந்து வகைப்பட்ட சீரானும் வந்த இலக்கியங்கட்கு முதல்நினைப்பு உணர்த்துதல் நுதலிற்று.

**1. குன்றக் குறவன் அகவல்**

**"குன்றக் குறவன் காதல் மடமகள்**

**வரையர மகளிர் புரையும் சாயலள்**

**ஐயன் அரும்பிய முலையள்**

**"செய்ய வாயினள் மார்பினள் சுணங்கே."**

இந்நேரிசை ஆசிரியப் பாவினுள் ஆகிரிய உரிச்சீர் நான்கும் வந்தவாறு கண்டு கொள்க.

இதனுள், நேரீற்றுப் பொதுச்சீர் நின்று தன் வருஞ்சீர் முதலசையோடு ஒன்றுவது வெண்சீர் வெண்டளையாகவும், ஒன்றாதது கலித்தளையாகவும், நிரையீற்றுப் பொதுச்சீர் நின்று தன் வருஞ்சீர் முதலசையோடு ஒன்றினும், ஒன்றாவிடினும் வஞ்சித் தளையாகவும் கொண்டு வழங்கப்படும் எ-று. இவ்வாறு பிறரும்

**“குன்று கூதிர் பண்பு தோழி**

**விளியிசை முத்துனழ் என்றிவை எல்லாம்**

**தெளிய வந்த செந்துறைச் செந்துறை.”**

என்று உதாரணம் எடுத்து ஓதினார் எனக் கொள்க. அன்றதென்னார் என்பதை அன்ற வென்னார் எனக்கொள்க.

**தளை பற்றிய செய்திகள்**

தளை என்னும் சொல்லுக்குக் கட்டுவது அல்லது பொருந்துவது என்பது பொருளாகும். கட்டுதலைத் தளைதல் என்றும் உலக வழக்கில் கூறுவர். சீர்கள் ஒன்றையொன்று தொடரும் முறைக்கு யாப்பு நூலார் தளை எனப் பெயரிட்டனர். இசையைத் தோற்றுவிக்கின்ற சீர்கள் ஒன்றோடொன்று கூட்டப்பட்டு இசை தொடர்ச்சி தோன்ற அமைக்கப்படுவதே தளையின் பயனாகும். நின்ற சீரின் ஈற்றசையும் வருஞ்சீரின் முதலசையும் ஒன்றியோ ஒன்றாமலோ அமையினும் அது தளை என்றே வழங்கப்படும். நின்ற சீரின் ஈற்றசையும் வரும் சீரின் முதலசையும் ஒன்றாக அமைவது ஒன்றிய தளையாகும். மாறுபட்டு அமைவது ஒன்றாத தளையாகும். ஒன்றிய தளைகள் வருவதே பாடலுக்குச் சிறப்பைத் தரும். அவை 1.நேரொன்றாசிரியத்தளை 2.நிரையொன்றாசிரியத்தளை

3.வெண்சீர்வெண்டளை 4.ஒன்றிய வஞ்சித்தளை என நான்காகும். சிறப்பற்றதாகக் கருதப்படும் பொருந்தாத தளைகள் மூன்று. அவை 1.இயற்சீர் வெண்டளை 2.கலித்தளை 3. ஒன்றாத வஞ்சித்தளை என்பனவாகும். சீர்கள் தளை கொள்ளும் நிலையை,

1. மா முன் நேர் - நேரொன்றாசிரியத்தளை
2. விளம் முன் நிரை - நிரையொன்றாசிரியத்தளை **ஒன்றிய தளை**
3. காய் முன் நேர் - வெண்சீர் வெண்டளை
4. கனி முன் நிரை - ஒன்றிய வஞ்சித்தளை

5. மாமுன் நிரை விளம் முன் - நேர் இயற்சீர் வெண்டளை
6. காய் முன் நிரை - கலித்தளை **ஒன்றாத தளை**
7.கனி முன் நேர் - ஒன்றாத வஞ்சித்தளை

எனக் கொள்ளலாம். தளைகளைப் பற்றிய செய்திகளை ஆசிரியர் ஒரு காரிகையில் (10) எடுத்துரைக்கிறார்.

## தளைகளின் வகைகள்

**10. தண்சீர் தனதொன்றிற் றன்றளை யாந்தண வாதவஞ்சி**

**வண்சீர் விகற்பமும் வஞ்சிக் குரித்துவல் லோர்வகுத்த**

**வெண்சீர் விகற்பங் கலித்தளை யாய்விடும் வெண்டளையாம்**

**ஒண்சீ ரகவ லுரிச்சீர் விகற்பமு மொண்ணுதலே.**

ஒளி பொருந்திய நெற்றியை உடைய பெண்ணே! 1. நின்ற சீரின் ஈற்றசையும் வருஞ்சீரின் முதலசையும் ஒன்றாய்ப் பொருந்துவதே சிறப்புடைய தளை என்று கூறப்படும் தன்தளையாகும் 2. தேமாங்கனி முதலாகிய வஞ்சியுரிச்சீர் நின்று வருஞ்சீரின் முதலசை நேராய் அமைவது சிறப்பில்லாத ஒன்றாத வஞ்சித்தளையாகும் 3. வல்லோரால் வகுத்துக் கூறப்பட்ட வெண்பாவிற்குரிய தேமாங்காய் முதலாயின சீர்கள் நிற்க வருஞ்சீரின் முதலசை நிரையெனப் பொருந்தாமல் நிற்பது கலித்தளை ஆகும் 4. தேமா முதலாகிய ஆசிரிய உரிச்சீர் நின்று மாமுன் நிரையும் விளமுன் நேரும் என மாறி நிற்பதும் வெண்பாவிற்குரிய இயற்சீர் வெண்டளையாம்.

நின்ற சீரின் ஈற்றசையும் வருஞ்சீரின் முதலசையும் தம்முள் ஒன்றுவதும் ஒன்றாததுமாகிய ஏழ்தளையும் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

**'தண்சீர் தனதொன்றில் தன்தளையாம் என்பது'** தன் சீர் நின்று தன் வருஞ்சீர் முதலசையோடு ஒன்றுவது தன்தளையாம் எ-று. எனவே, ஆசிரிய உரிச்சீர் நின்று தன் வருஞ்சீர் முதலசையோடு நேராய் ஒன்றுவது நேரொன்றாசிரியத் தளையாம்' நிரையாய் ஒன்றுவது நிரையொன்றாசிரியத் தளையாம். வெண்பா உரிச்சீர் நின்று தன் வரும் சீர் முதலசையோடு ஒன்றுவது வெண்சீர் வெண்தளையாம். வஞ்சி உரிச்சீர் நின்று தன் வரும் சீர் முதலசையோடு ஒன்றுவது ஒன்றிய வஞ்சித்தளையாம்

**தணவாத** என்று மிகுத்துச் சொல்லிய அதனால் தன் சீர் நின்று பிறிதாகி வருஞ்சீர் முதலசையோடு ஒன்றுவதூஉம் தன் தளையே சிறப்பின்று ஆயினும் எனக் கொள்க.

வஞ்சிவண்சீர் விகற்பமும் வஞ்சிக்கு உரித்து என்பது' வஞ்சி உரிச்சீர் நின்று தன்வரும் சீர் முதலசையோடு ஒன்றாததூஉம் ஒன்றாத வஞ்சித் தளையாம் எ-று.

வண்சீர் என்று சிறப்பித்த அதனால் வஞ்சி உரிச்சீர் நின்று பிறிதாகி வருஞ்சீர் முதலசையோடு ஒன்றாததூஉம் ஒன்றாத வஞ்சித்தளையே சிறப்பின்று ஆயினும் எனக் கொள்க.

வல்லோர் வகுத்த வெண்சீர் விகற்பம் கலித்தளையாய் விடும் என்பது' வெண்பா உரிச்சீர் நின்று தன் வரும் சீர் முதலசையோடு ஒன்றாதது கலித்தளையாம் எ-று.

வல்லோர் வகுத்த என்று சிறப்பித்த அதனால் வெண்பா உரிச்சீர் நின்று பிறிதாகி வரும் சீர் முதலசையோடு கலித்தளையே சிறப்பின்று ஆயினும் எனக் கொள்க. ஒன்றாததூஉம்

வெண்தளையாம் ஒண்சீரகவல் உரிச்சீர் விகற்பமும் என்பது' ஆசிரிய உரிச்சீர் நின்று தன் வரும்சீர் முதலசையோடு ஒன்றாதது இயற்சீர் வெண்தளையாம் எ-று.

ஒண்சீர் என்று சிறப்பித்த அதனால் ஆசிரிய உரிச்சீர் நின்று பிறிதாகி வருஞ்சீர் முதலசையோடு ஒன்றாததூஉம் இயற்சீர் வெண்தளையே சிறப்பின்று ஆயினும் எனக்கொள்க.

**உதாரண இலக்கிய முதல் நினைப்புக் காரிகை**

11. **திருமழை யுள்ளா ரகவல் சிலைவிலங் காகும்வெள்ளை**

**மருளறு வஞ்சிமந் தாநில மென்பமை தீர்கலியின்**

**தெரிவுறு பந்தநல் லாய்செல்வப் போர்க்கதக் கண்ணனென்ப**

**துரிமையின் கண்ணின்மை யோரசைச் சீருக் குதாரணமே.**

நல்ல பெண்ணே! 1. திருமழை எனத் தொடங்கும் பாடல் நிரையொன்றாசிரியத் தளையால் அமைந்தது 2. உள்ளார் என்பது நேரொன்றாசிரியத் தளை பொருந்தியது 3.சிலை விலங்கு என்னும் பாடல் இயற்சீர், வெண்சீர் வெண்டளைகள் இடம்பெற்ற பாடலாகும் 4.குற்றமற்ற ஒன்றிய, ஒன்றாத வஞ்சித்தளை வந்ததற்கு மந்தாநிலம் எனத் தொடங்கும் பாடல் எடுத்துக் காட்டாகும் 5.மயக்கம் தீர்ந்த கலிப்பாவிற்கு உரிய கலித்தளை அமைந்ததற்கு உரிய செய்யுள் செல்வப்போர்க் கதக்கண்ணன் என்பதாகும் 6.உரிமையின் கண்ணின்மை எனத் தொடங்கும் பாடல் ஓரசைச்சீர் பயின்று வந்ததற்குரிய எடுத்துக்காட்டாகும்.ஸ

அத்தளைகளான் வந்த இலக்கியங்கட்கு முதல் நினைப்பு உணர்த்துதல் நுதலிற்று.

**திருமழை உள்ளார் அகவல்**

**ஆசிரியப்பா**

1. ‘‘திருமழை தலைஇய இருணிற விசும்பின் (திரு மழை - நி.ஃ.நி கருவிளம் தலை - நிரை விளம் முன்நிரை நிரையொன்றாசிரியத்தளை)

விண்ணதிர் இமிழிசை கடுப்பம்

பண்ணமைந் தவர்தேர் சென்ற வாறே.“

மழையைத் தருகின்ற கார்முகில் விண்ணிடத்தே இடியோசையைத் தோற்றுவிக்கும்.அவ்விடியோசையை ஒத்த ஒசைப்புலப்படும்படி ஒப்பனை செய்யப்பட்ட தலைவரின் தேர் விரைந்து சென்றது.

இது நிரையொன்றாசிரியத் தளையான் வந்த செய்யுள்.

**வெண்பா**

3. **“சிலைவிலங்கு நீள்புருவம் சென்றொசிய நோக்கி**

**முலைவிலங்கிற் றென்று முனிவாள் - மலைவிலங்கு**

**தார்மாலை மார்ப! தனிமை பொறுக்குமோ**

**கார்மாலை கண்கூடும் போது”**

பலவகை மலர்களைக் கொண்டு தொடுக்கப்பட்ட தாரினையும் மாலையினையும் அணிந்த தலைவனே! மலை போலும் மார்பினை உடையவனே! தலைவி நின்னோடு கூடி முயங்குவாள். அக்காலத்து அவளுடைய பருத்த கொங்கை உங்கள் இருவருக்குள் இடைவெளியை ஏற்படுத்துவதாக எண்ணுவாள். அதனால் பொறுத்துக் கொள்ளாதவளாய் வில் போல் வளைந்த புருவம் நெற்றி மீது ஏறி ஓடியும்படியாக அதனைச் சினந்து பார்ப்பாள். அத்தகு தன்மை கொண்ட தலைவியை விடுத்து நீ பிரிந்து செல்லப் போகின்றாய். இனிவரும் இருளொடு கூடிய மாலைக் காலத்துத் தலைவி அடையும் தனிமைத் துயரத்தைப் பொறுத்துக் கொள்வாளோ ? கூறுக.ஸ

இது வெண்சீர் வெண்டளையானும் வெண்டளையானும் வந்த செய்யுள். இயற்சீர

**கலிப்பா**

**“செல்வப்போர்க் கதக்கண்ணன் செயிர்த்தெறிந்த சினவாழி**

**முல்லைத்தார் மறமன்னர் முடிந்தலையை முருக்கிப்போய்**

**எல்லைநீர் வியன்கொண்மு இடைநுழையு மதியம்போல்**

**மல்லலோங் கெழில்யானை மருமம்பாய்டு தொளித்ததே”**

பொருள் : போர்க்களத்தின் கண்ணே கதக்கண்ணன் என்னும் அரசன்

தன் பகைவர் மீது வெகுண்டு சக்கரப்படையை எறிந்தான். அரசனின் சினத்தைத் தாங்கிய அப்படை வெற்றி மாலை அணிந்த வீரம் செறிந்த மன்னரின் மணிமுடியுடன் கூடிய தலையை வெட்டி வீழ்த்தியது. அத்துடன் வளப்பம் செறிந்த பெரிய யானையின் மார்பினை அறுத்துக்கொண்டு உள்ளே சென்றது. இக்காட்சி எல்லையற்ற கடலின்கண் நீரை உண்ணவந்த சுரிய மேகத்தின் இடையில் நுழைந்த முழுநிலாவை ஒத்திருந்தது.ஸ

இது மயக்கமில்லாக் கலித்தளையான் வந்த செய்யுள். நல்லாய்! என்பது: மகடூஉ முன்னிலை.

**உரிமையின் கண்ணின்மை ஓரசைச் சீருக்கு உதாரணம்**

**6. “உரிமை யின்கண் மின்மையால்**

**அரிமதர் மழைக் கண்ணாள்**

**செருமதி செய் தீமையால்**

**பெருமை கொன்ற என்பவே.”**

**பொருள்:** தலைவியின் கடைக்கண் பார்வை என்மீது விருப்பம் கொண்டதாக அமையவில்லை. குளிர்ச்சி பொருந்திய அக்கண்கள் செவ்வரி படர்ந்து மதர்த்துத் திரிவன. அவற்றைத் தாங்கிய நிலவு போன்ற முகமும் எனக்குத் தீமையைத் தருகிறது. இவை அனைத்தும் என் பெருமையைக் கெடுத்தன.

இம்முச்சீரடி வஞ்சி விருத்தத்துள் மழை என்னும் நிரையசைச்சீர் இயற்சீரே போல நின்று வரும்சீர் முதலசையோடு ஒன்றாமையின் இயற்சீர் வெண்தளையாயிற்று. செய்யென்னும் நேரசைச்சீர் இயற்சிரே போல நின்று வருஞ்சீர் முதலசையோடு ஒன்றினமையின் ஆசிரியத்தளை ஆயிற்று.

### அடி பற்றிய கருத்துக்கள்

இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட சீர்கள் தொடர்ந்து நிற்பது அடி எனக் கூறப்படுகிறது. சீர்கள் இணைந்த தளைகள் பொருந்தி நின்று அடுத்து நடப்பதால் அடி அவ்வாறு அழைக்கப்படுகிறது. அடி என்பது காரணப் பெயராவதை அத்தளை அடுத்து நடத்தலின் அடியே என்னும் தொடர் எடுத்துரைக்கிறது. ஓரடியில் அமையும் சீர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப அடிகள் பல பெயர்களைப் பெறுகின்றன. அவற்றை ஐந்து வகையாகப் பாகுபடுத்தலாம்.

1. இரண்டு சீர்களைக் கொண்டது - குறளடி
2. மூன்று சீர்களைக் கொண்டது - சிந்தடி
3. நான்கு சீர்களால் அமைவது - அளவடி (அ) நேரடி
4. ஐந்து சீர்களைப் பெற்றது - நெடிலடி
5. ஆறும் அதற்கு மேலும் சீர்களைப் பெறுவது - கழிநெடிலடி

இவ்வைந்து அடிகளுள் கழிநெடிலடியைத் தனியே குறிக்காமல் அவை பெறும் சீர்களுக்கு ஏற்ப அறுசீர்க் கழிநெடிலடி, எழுசீர்க் கழி நெடிலடி, எண்சீர்க் கழிநெடிலடி என அடை கொடுத்துக் கூறுவர். இவ்வடிகளுக்குரிய விளக்கத்தை ஆசிரியர் ஒரு காரிகையில் (12) விளக்குகிறார்.

### அடிவரையறை

வெண்பா முதலான பாக்களை இத்துணை அடிகளில் பாடவேண்டும் என வரையறுத்துக் கூறுவதே அடிவரையறையாகும்.

### சிற்றெல்லை

வெண்பா - இரண்டடி

வஞ்சிப்பா - மூன்றடி

ஆசிரியப்பா - மூன்றடி

கலிப்பா - நான்கடி

### பேரெல்லை

நால்வகைப் பாக்களுக்கும் பேரெல்லை இத்துணை அடி என்ற வரையறை இல்லை. அவை பாடுவோனின் பொருளுக்கு ஏற்ப எத்துணை அடிகளில் வேண்டுமென்றாலும் பாடலாம். இக்கருத்துக்களை ஆசிரியர் ஒரு காரிகையில் (14) குறிப்பிடுகின்றார்.

### அடிகளும் அவற்றின் பெயர்களும்

**12.** **குறளிரு சீரடி சிந்துமுச் சீரடி நாலொருசீர்**

**அறைதரு காலை யளவொடு நேரடி யையொருசீர்**

**நிறைதரு பாத நெடிலடி யாநெடு மென்பணைத்தோட்**

**கறைகெழு வேற்கணல் லாய்மிக்க பாதங் கழிநெடிலே.**

நீண்ட மென்மையான மூங்கிலை ஒத்த தோளையும் குருதிக் கறை படிந்த வேலினைப் போன்று பக்கம் சிவந்த கண்ணையும் கொண்டு நன்மை செய்யும் பெண்ணே! 1.இரண்டு சீரால் அமைவது குறளடி 2. மூன்று சீரால் அமைவது சிந்தடி 3. நான்கு சீரால் அமைவது அளவடி அல்லது நேரடியாம் 4.ஐந்து சீரால் அமைவது நெடிலடி 5.ஐந்துக்கும் மேற்பட்ட சீர்களால் அமைவது கழிநெடிலடியாகும்.

அத்தளைகளான் வந்த அடிகளது பெயர் வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

குறளிரு சீரடி என்பது இருசீரான் வந்த அடி குறளடி எனப்படும் எ-று. சிந்து முச்சீரடி என்பது : முச்சீரான் வந்த அடி சிந்தடி எனப்படும்.

நாலொரு சீர் அறைதரு காலை அளவோடு நேரடி என்பது'

நாற்சீரான் வந்த அடி அளவடி என்றும் நேரடி என்றும் சொல்லப்படும் எ-று. ஐயொருசீர் நிறைதரு பாத நெடிலடியாம் என்பது' ஐஞ்சீரான் வந்த அடி நெடிலடி எனப்படும் எ-று.

நெடுமென் பணைத்தோள் கறைகெழு வேற்கண் நல்லாய் என்பது' மகடூஉ முன்னிலை.

மிக்க பாதம் கழிநெடில் என்பது' ஐஞ்சீரின் மிக்க சீரான் வரும் அடி எல்லாம் கழிநெடிலடி எனப்படும் எ-று.

அசுலம் உரையில் கொள்க.

**"குறளடி சிந்தடி இருசீர் முச்சீர்**

**அளவடி நெடிலடி நாற்சீர் ஐஞ்சீர்**

**நிரனிறை வகையான் நிறுத்தனர் கொளலே."** **(யாப்பருங்கலம் -24 )**

**"கழிநெடில் அடியே கசடறக் கிளப்பின்**

**அறுசீர் முதலா ஐயிரண்டு ஈறா**

**வருவன பிறவும் வகுத்தனர் கொளலே."** **(யாப்பருங்கலம் -25)**

**உதாரண இலக்கிய முதல் நினைப்புக் காரிகை**

13. **திரைத்த விருது குறள்சிந் தளவடி தேம்பழுத்து**

**விரிக்கு நெடிலடி வேனெடுங் கண்ணிவென் றான்வினையின்**

**இரைக்குங் கனிகொண்ட மூவடிவோடிடங் கொங்குமற்றுங்**

**கரிக்கைக் கவான்மருப் பேர்முலை மாதர் கழிநெடிலே.**

வல்போன்ற நீண்ட கண்ணைக் கொண்டவளே ! யானையின் துதிக்கை போன்ற தொடையையும் அவ்யானையின் தந்தத்தைப் போன்று ஏந்திய அழகினைப் பெற்ற மார்பையும் உடைய பெண்ணே! 1. திரைத்த எனத் தொடங்கும் பாடல் குறளடிக்கு எடுத்துக்காட்டாகும் 2. இருது என்பது சிந்தடியான் அமைந்த செய்யுளாகும் 3.அளவடியான் அமைந்த பாடல் தேம்பழுத்து எனத் தொடங்குவதாகும் 4.வென்றான் வினையின் எனத் தொடங்கும் பாடல் விரித்துக் கூறப்படும் நெடிலடியான் அமைந்ததாகும் 5.இரைக்கும் எனத் தொடங்கும் பாடல் அறுசீர்க் கழிநெடிலடிக்கு உரியது 6.எழுசீர்க் கழிநெடிலடிக்குக் கணி கொண்ட என்பது எடுத்துக்காட்டாகும் 7.மூவடி எனத்தொடங்கும் பாடல் எண்சீர்க் கழிநெடிலடியைப் பொருந்தியதாகும் 8.இடம் என்னும் பாடல் ஒன்பதின்சீர்க் கழிநெடிலடிக்கு உரியது 9.கொங்கு எனத் தொடங்கும் பாடல் பதின்சீர்க் கழிநெடிலடியான் அமைந்த செய்யுள் ஆகும். அவ்அடிகளான் வந்த இலக்கியங்கட்கு முதல் நினைப்பு உணர்த்துதல் நுதலிற்று.

**திரைத்த குறள்**

வஞ்சித்துறை

1. “திரைத்த சாலிகை

நிரைத்த போனிரம்

திரைப்ப தேன்களே

விரைக்கொள் மாலையாய். ” (சூளாமணி. சீயவதை. பா.172)

இது குறளடியான் வந்த செய்யுள்.

நான்கு பாக்களுக்கும் உரிய அடி

14. **வெள்ளைக் கிரண்டடி வஞ்சிக்கு மூன்றடி மூன்றகவற்**

**கெள்ளப் படாக்கலிக் கீரிரண் டாகு மிழிபுரைப்போர்**

**உள்ளக் கருத்தி னளவே பெருமையொண் போதலைத்த**

**கள்ளக் கருநெடுங் கட்கரி மென்குழற் காரிகையே.**

ஒளிவிக்கின்ற தாமரை மலர்களை வருத்துவதோடு மனத்தைக் கொள்ளைக் கொள்ளும் கரிய நீண்ட கண்களையும் சுருண்ட மென்மையான கூந்தலையும் உடைய பெண்ணே! 1.வெண்பாவிற்கு இரண்டடியும் 2.வஞ்சிப்பாவிற்கு மூன்றடியும் 3.ஆசிரியப்பாவிற்கு மூன்றடியும் 4. நீக்கப்படாத தன்மை கொண்ட கலிப்பாவிற்கு நான்கடியும் சிற்றெல்லைகளாக அமையும் 5. நான்கு பாவிற்கும் பேரெல்லை பாடுவோரின் பொருள் முடிபைக் குறித்து அமைவதாகும்.(எனவே பொருளுக்கேற்ப அளவு வரையறையின்றி எத்துணை அடியிலும் பாடலாம்.

அவ்வடி வரையறையான் வந்த நான்கு பாவிற்கும் சிறுமை பெருமை உணர்த்துதல் நுதலிற்று.

**வெள்ளைக்கு இரண்டடி இழிபு என்பது:** வெண்பாவிற்கு இரண்டடியே சிறுமை எ-று, வஞ்சிக்கு மூன்றடி இழிபு என்பது' வஞ்சிப்பாவிற்கு மூன்றடியே சிறுமை

**மூன்று அகவற்கு இழிபு என்பது**: ஆசிரியப்பாவிற்கு மூன்றடியே சிறுமை எ-று, எள்ளப்படாக் கலிக்கு ஈர்இரண்டாகும் இழிபு என்பது. கலிப்பாவிற்கு நான்கடியே சிறுமை.

**உரைப்போர் உள்ளக் கருத்தின் அளவே பெருமை என்பது** நான்கு பாவிற்கும் பெருமைக்கு எல்லை பாடுவோனது பொருள் முடிவுக் குறிப்பே வரையறை இல்லை.

**ஒண்போதலைத்த... காரிகையே என்பது** மகடூஉ முன்னிலை.

எள்ளப் படாக் கவிக்கு என்று சிறப்பித்த அதனால் துள்ளல் ஓசையில் சிறிதும் வழுவாது நாற்சீர் நாலடியான் வருவது தரவு கொச்சகக் கவிப்பா என்றும் துள்ளல் ஓசையில் சிறிது வழுவி நாற்சீர் நாலடியான் வருவது கலி விருத்தம் என்றும் தெரிந்து உணரப்படும் எனக் கொள்க.

வெள்ளைக்கு இரண்டாம் அகவற்கு மூன்று கலிக்கடி நான்கு எள்ளப்படா வஞ்சிப்பாவிற்கு மூன்றாம் இழிபு என்று பாக்களை முறையிற் கூறாது தலைதடுமாற்றமாகக் காரிகை சொல்ல வேண்டியது என்னையோ எனின், தலை தடுமாற்றம் தந்து புணர்ந்து உரைத்தல் என்பது தந்திர உத்தி ஆகலின், அன்றியும் மயேச்சுரர் முதலாகிய ஒருசார் ஆசிரியர்.

**உதாரண இலக்கிய முதல் நினைப்புக் காரிகை**

15. **அறத்தா றிதுவென வெள்ளைக் கிழிபசு வற்கிழிபு**

**குறித்தாங் குரைப்பின் முதுக்குறைந் தாங்குறை யாக்கலியின்**

**திறத்தா றிதுசெல்வப் போர்ச்செங்கண் மேதிவஞ் சிச்சிறுமை**

**புறத்தாழ் கருமென் குழற்றிரு வேயன்ன பூங்கொடியே.**

முதுகுப் புறத்தில் நீண்டு தொங்கும் கரிய மென்மையான கூந்தலை உடையவளே! திருமகளை ஒத்துக் காணப்படும் பூவினை உடைய கொடி போன்றவளே! 1. அறத்தாறு எனத் தொடங்கும் பாடல் வெண்பாவின் சிற்றெல்லைக்கு உரியது 2. அகவற் பாவிற்குரிய சிற்றெல்லையைக் காட்டுவது முதுக்குறைந்தனளே என்பதாம் 3.குறைவு படாத கலிப்பாவின் சிற்றெல்லைக்குச் செல்வப்போர் எனத் தொடங்குவது எடுத்துக் காட்டாகும் 4. செங்கண்மேதி எனத் தொடங்கும் பாடல் வஞ்சிப்பாவிற்குரிய சிற்றெல்லைக்கு எடுத்துக் காட்டாகும்.ஸ

அவ்வடி வரையறையான் வந்த இலக்கியங்கட்கு முதல் நினைப்பு உணர்த்துதல் நுதலிற்று.

**அறத்தாறு இதுவென வெள்ளைக்கு இழிபு**

1. "அறத்தா றிதுவென வேண்டா சிவிகை

பொறுத்தானோ டூர்ந்தா னிடை." (திருக்குறள் - 37)

இ∴து இரண்டடியான் வெண்பாவிற்குச் சிறுமை வந்தவாறு. அகவற்கு இழிபு குறித்தாங்கு உரைப்பின் முதுக்குறைந்தாம்.

2. "முதுக்குறைந் தனளே முதுக்குறைந் தனளே

மலையன் ஒள்வேற் கண்ணி

முலையும் வாரா முதுக்குறைந் தனளே."

பொருள்' மலையமானின் ஒளிவீசுகின்ற வேலை ஒத்த கண்களை உடையவள் தலைவி. அவளோ மார்பு தோன்றாத இளைய பருவத்தினள். ஆயினும் மிகுந்த அறிவுடையவளாகக் காணப்படுகிறாள். இது மூன்றடியான் ஆசிரியப்பாவிற்குச் சிறுமை வந்தவாறு.

**தொடை பற்றிய கருத்துக்கள்**

ஒரு செய்யுளில் அமைந்த அடிகளும் அவ்வடிகளில் இடம்பெற்ற சீர்களும் ஒன்றோடு ஒன்று பொருத்தமுறத் தொடுக்கப் படுவது தொடையாகும். தொடை என்பது காரணப் பெயராவதை அடியிரண்டு தொடுத்தல் முதலாயின தொடையே என்னும் கூற்று எடுத்துரைக்கிறது. மலர்களால் தொடுக்கப்படும் மாலையைப் போல அடிகளால் தொடுக்கப்படுவதால் தொடை என்பது உவமையால் அமைந்த பெயராகும். ஓரடிக்கும் மற்றோர் அடிக்கும் உள்ள பொருத்தத்தை விளக்குவது முதற்றொடை அல்லது தலைமைத் தொடையாகும். இவ்வாறன்றி ஓர் அடியின்கண் அமைந்த சீர்களில் காணும் பொருத்தத்தைத் தொடை விகற்பம் எனக் கூறுவர். இவ்விருவகைத் தொடைகளும் செய்யுளின் சிறப்பிற்கும் ஓசை நயத்திற்கும் அடிப்படையாய் விளங்குகின்றன. இக்கருத்துப் பற்றியே தொடையற்ற பாட்டு நடையற்றுப் போகும் என்னும் பழமொழியும் அமைந்துள்ளது.

**முதற்றொடை (8)**

தொடைகள் 1.மோனை 2. எதுகை 3. இயைபு 4. முரண் 5.அளபெடை 6. அந்தாதி 7. இரட்டை 8. செந்தொடை என எட்டு வகைப்படும். அடிதோறும் முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது மோனை. முதலெழுத்து அளவொத்து நிற்க இரண்டாமெழுத்து ஒன்றி வரத் தொடுப்பது எதுகை. அடிதோறும் ஈற்றெழுத்தோ அசையோ சீரோ ஒன்றி வருவது இயைபு. அடிதோறும் முதற்சீர் சொல்லாலோ பொருளாலோ மாறுபட்டு நிற்பது முரண் தொடையாகும். அடிதோறும் முதற்கண் அமைந்த எழுத்து அளபெடுத்து வருவது அளபெடை. ஓரடியின் ஈற்றில் நிற்கும் எழுத்தோ அசையோ சீரோ அடியோ அடுத்த அடிக்கு முதலாய் வருவது அந்தாதி. ஓர் அடியில் முதலில் வந்த சொல் அடிமுழுதும் வருவது இரட்டை மோனை முதலான தொடைகளின்றி அமைவது செந்தொடை.

**தொடை விகற்பம் (7)**

ஓரடியின்கண் அமைந்த சீர்களின் பொருத்தத்தை எடுத்துரைப்பது தொடை விகற்பமாகும். இது சீர்களை வைத்து எடுத்துரைக்கப்படுவதால் சீர்வகைத் தொடை எனவும் குறிக்கப்படுகிறது. இத்தொடை விகற்பம் நான்கு சீர்களைக் கொண்ட அளவடிகளில் மட்டுமே பொருந்தி வருவதாகும். இது 1. இணை 2. பொழிப்பு 3. ஒரூஉ 4. கூழை 5. மேற்கதுவாய் 6. கீழ்க்கதுவாய் 7. முற்று என ஏழ் வகைப்படும். அடிதோறும் முதற்சீரிலும் இரண்டாம் சீரிலும் மோனை முதலாயின பொருந்தி வருவது இணையாகும். ஒன்றிலும் மூன்றிலும் வருவது பொழிப்பு. ஒன்றிலும் நான்கிலும் அமைவது ஒரூஉ. ஈற்றுச்சீர் நீங்கலாக முதல் மூன்று சீரிலும் அமைவது கூழை.

ஒன்று, மூன்று, நான்கு ஆகிய சீர்களில் அமைவது மேற்கதுவாய். ஒன்று, இரண்டு, நான்கு ஆகிய சீர்களில் அமைவது கீழ்க்கதுவாய். நான்கு சீர்களிலும் அமைவது முற்று.

இவ்வேழ் தொடை விகற்பங்களுடன் எதுகை முதலான ஐந்தையும் பெருக்க உண்டாகும் தொடைகள் முப்பத்தைந்து. அவற்றுடன் முதற்தொடைகள் எட்டையும் கூட்டத் தொடைகள் 43 ஆகும். தொடை பற்றிய கருத்துக்கள் மூன்று காரிகைகளில் (16,17,19) எடுத்துரைக்கப்படுகின்றன.

**தொடையும் அவற்றின் பெயர்களும்**

16. **எழுவா யெழுத்தொன்றின் மோனை யிறுதி யியைபிரண்டாம்**

**வழுவா வெழுத்தொன்றின் மாதே யெதுகை மறுதலைத்த**

**மொழியான் வரினு முரணடிதோறு மொழிமுதற்கண்**

**அழியா தளபெடுத் தொன்றுவ தாகு மளபெடையே.**

1. அடிதோறும் முதலெழுத்து ஒன்றிவரத்தொடுப்பது மோனை 2. அடியின் ஈற்றெழுத்துப் பொருந்தி வரத் தொடுப்பது இயைபாகும் 3. அளவொத்த முதலெழுத்து நிற்க இரண்டாம் எழுத்துப் பொருந்தி வருவது எதுகையாகும் 4.மாறுபட்ட மொழியால் வருவது முரணாகும் 5. அடிதோறும் மொழி முதலில் அளபெடுத்துத் தம்முள் ஒன்றி வருவது அளபெடைத் தொடையாகும்.

**அந்தாதி, இரட்டை, செந்தொடைகள்**

17. **அந்த முதலாத் தொடுப்பதந் தாதி யடிமுழுதும்**

**வந்த மொழியே வருவ திரட்டை வரன்முறையான்**

**முந்திய மோனை முதலா முழுதுமொவ் வாதுவிட்டாற்**

**செந்தொடை நாமம் பெறுநறு மென்குழற் றேமொழியே.**

நறுமணம் கமழும் மென்மையான கூந்தலையும் தேன்போன்ற இனிய மொழியினையும் உடைய பெண்ணே!6.ஓரடியின் இறுதி அடுத்த அடிக்கு முதலாகி வருவது அந்தாதித் தொடையாகும் 7. ஓரடியின் முதலில் வந்த சொல் அடி முழுவதும் வரத் தொடுப்பது இரட்டைத் தொடையாகும் 8. மோனை முதலாகிய தொடையின்றி மாறுபட அமைவது செந்தொடை எனப்பெயர் பெறும்.

அந்தாதித்தொடையும், இரட்டைத்தொடையும் செந்தொடையும் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

**அந்தம் முதலாத் தொடுப்பது அந்தாதி என்பது** அடிதோறும் இறுதிக் கண் நின்ற எழுத்தானும், அசையானும், சீரானும், அடியானும் மற்றை அடிக்கு ஆதியாகத் தொடுப்பது அந்தாதித் தொடை எனப்படும்.

**அடிமுழுதும் வந்த மொழியே வருவது இரட்டை வரன்முறையான என்பது** ஓரடி முழுதும் ஒரு சொல்லே வரத் தொடுப்பது இரட்டைத் தொடை எனப்படும் எ-று. வரன் முறையான் என்று

மிகுத்துச் சொல்லிய அதனால், ஈற்றெழுத்து ஒன்று குறையினும் இழுக்காது' நாற்சீரின் மிக்கு வரப்பெறாது எனக் கொள்க.

**முந்திய மோனை முதலா முழுதும் ஒவ்வாது விட்டால் செந்தொடை நாமம் பெறும் என்பது**மேற்சொல்லப் பட்ட மோனை முதலாகிய தொடையும், தொடை விகற்பமும் போலாது வேறுபடத் தொடுப்பது செந்தொடை எனப்படும்.

**முந்திய மோனை** என்று சிறப்பித்த அதனால் அசையும், சீரும் தம்முள் மறுதலைப்படத் தொடுப்பது சிறப்புடைத்து எனக் கொள்க.

**உதாரண இலக்கிய முதல் நினைப்புக் காரிகை**

18. **மாவும்புண் மோனை யியைபின் னகைவடி யேரெதுகைக்**

**கேவின் முரணு மிருள்பரந் தீண்டள பாஅவளிய**

**ஓவிலந் தாதி யுலகுட னாமொக்கு மேயிரட்டை**

**பாவருஞ் செந்தொடை பூத்தவென் றாகும் பணிமொழியே.**

பணிந்த மொழியைப் பேசுகின்ற பெண்ணே! 1. மாவும்புள்ளும் எனத் தொடங்கும் பாடல் மோனைத் தொடைக்கு எடுத்துக்காட்டாகும் 2. இயைபிற்கு உரியது இன்னகை எனத் தொடங்கும் பாடலாகும் 3. வடியேர் என்பது எதுகைக்குரிய பாடலாகும் 4. சொல்லாலும் பொருளாலும் அமைந்த முரணுக்கு இருள்பரந்து என்னும் பாடல் உரியதாகும் 5. இவ்விடத்து அளபெடைக்கு ஆஅஅளிய என்னும் பாடலாகும் 6. ஒழிதலின்றி எல்லா வகையான அந்தாதிக்கும் உலகுடன் என்பது எடுத்துக்காட்டுப் பாடலாகும் 7. ஒக்குமே எனத் தொடங்கும் பாடல் இரட்டைத் தொடைக்கு மேற்கோளாகும் 8. பரந்துபட்டு வருகின்ற செந்தொடைக்குப் பூத்த எனத் தொடங்கும் பாடல் எடுத்துக் காட்டாம்.

அடிமோனை முதலாகிய முதற்தொடை எட்டினாலும் வந்த இலக்கியங்கட்கு முதல் நினைப்பு உணர்த்துதல் நுதலிற்று.

**தொடை விகற்பம்**

19. **இருசீர் மிசையிணை யாகும் பொழிப்பிடை யிட்டொரூஉவாம்**

**இருசீரிடையிட்ட தீறிலி கூழை முதலிறுவாய்**

**வருசீ ரயலில மேல்கீழ் வகுத்தமை தீர்கதுவாய்**

**வருசீர் முழுவது மொன்றின்முற் றாமென்ப மற்றவையே.**

1.ஒரு பாடலில் அமைந்த ஓர் அடியின் நான்கு சீர்களுள் முதலிரு சீர்களில் மோனை முதலான ஐந்தும் அமைந்திருப்பது இணை 2.ஒன்று இடைவிட்டு முதற்சீரிலும் மூன்றாம் சீரிலும் அமைந்திருப்பது பொழிப்பு 3. இருசீர் விட்டு முதற் சீரிலும் நான்காம் சீரிலும் அமைவது ஒரூஉ 4. ஈற்றுச்சீர் ஒழிய எஞ்சிய மூன்று சீர்களிலும் அமைவது கூழை 5. இரண்டாம் சீர் நீங்கலாக எஞ்சிய மூன்று சீர்களில் அமைவது மேற்கதுவாய் 6. மூன்றாம் சீர் நீங்கலாக எஞ்சிய மூன்று சீர்களில் அமைவது கீழ்க்கதுவாய் 7. நான்கு சீர்களிலும் அமைவது முற்று ஆகும்.

**உதாரண இலக்கிய முதல் நினைப்புக் காரிகை**

20. **மோனை விகற்ப மணிமலர் மொய்த்துட னாமியைபிற்**

**கேனை யெதுகைக் கினம்பொன்னி னன்ன இனிமுரணிற்**

**கான விகற்பமுஞ் சீறடிப் பேர தளபெடையின்**

**தான விகற்பமுந் தாஅட்டாஅ மரையென்ப தாழ்குழலே.**

நீண்டு தொங்கும் கூந்தலை உடைய பெண்ணே! 1. சீர் மோனைக்கு அணிமலர் எனத் தொடங்கும் பாடல் எடுத்துக் காட்டாகும் 2. மொய்த்துடன் என்பது சீர் இயைபிற்குரிய பாடலாகும் 3. மற்ற எதுகை விகற்பத்திற்கு இனமாவது பொன்னின் அன்ன எனத் தொடங்கும் பாடலாகும் 4. இனி முரண் விகற்பத் தொடைக்குச் சீறடிப்பேர் என்பதாகும் 5. அளபெடையின் விகற்பத்திற்கு தாஅள் தாமரை எனத் தொடங்கும் பாடல் உரியதாகும்.

இணைமோனை முதலாகிய முப்பத்தைந்து தொடை விகற்பங்களால் வந்த இலக்கியங்கட்கு முதல் நினைப்பு உணர்த்துதல் நுதலிற்று.

**உறுப்பியல் செய்யுட்களின் முதல் நினைப்புக் காரிகை**

**கந்தமுந் தேனுஞ் சுருக்கமுங் காதற் குறில் குறிலே**

**சந்தமுந் தீரசை தேமாந்தண் குன்றந்தண் சீர்திருவுங்**

**கொந்தவிழ் கோதாய் குறடிரை வெள்ளைக் கறத்தெழுவாய்**

**அந்தமு மாவு மிருசீரு மோனையு மாமுறுப்பே.**

கட்டவிழ்ந்து தேன் சொரியும் இனிய மாலையினை அணிந்த பெண்ணே! 1. கந்தம் 2. தேனார் 3. சுருக்கமில் 4.குறில்நெடில் 5. குறில்நெடிலே 6. ஈரசை 7. தேமா 8. தண்ணிழல் 9. குன்ற 10. தண்சீர் 11. திருமலை 12. குறள் இரு 13.திரைத்த 14.வெள்ளைக்கு 15. அறத்தாறு 16. எழுவாய் 17. அந்தம் 18.மாவும் 19, இருசீர்மிசை 20 மோனை எனத் தொடங்கும் காரிகை இருபதும் உறுப்பியலில் இடம் பெற்றவையாகும்.

## ஐஐ செய்யுளியல்

எழுவகைத் தாதுககளாகிய 1. தோல் 2. குருதி 3. த 4.நரம்பு 5. எலும்பு 6. மச்சை 7. நீர் ஆகியவற்றான அமைக்கப்படுவது உடம்பு. அதுபோல எழுத்து முதல் தொடை ஈறாக அமைந்த ஆறு உறுப்புக்களைக் கொண்டு செய்யப்படுவது செய்யுள் ஆகும். அச்செய்யுள் வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா வஞ்சிப்பா, மருட்பா என்னும் ஐவகைப் பாக்களாகவும் தாழிசை துறை, விருத்தம் என்னும் மூன்று இனங்களாகவும் பாகுபடுத்தப்பட்டுள்ளது. அவற்றின் இயல்புகளை எல்லாம் தொகுத்துக் கூறுவதால் இவ்வியல் செய்யுளியல் வழங்கப்படுகிறது. இதன்கண் அமைந்த காரிகை 15. புவுபு

**பாக்களின் அடிவரையறை - ஓசை பற்றிய கருத்துக்கள்**

பாக்களின் வகைகளையும் இனங்களையும் கூறவந்த ஆசிரியர் அப்பாக்களுக்குரிய அடிவரையறையையும் ஓசையையும் முதற்கண் ஒரு காரிகையில் (21) எடுத்துரைக்கிறார்.

பாக்களுக்குரிய அடிவரையறை

வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா என்னும் பாக்கள் மூன்றும் நான்கு சீர்களைக் கொண்ட அளவடியால் வரும். வஞ்சிப்பா இருசீரால் அமைந்த குறளடி, மூன்று சீரால் அமைந்த சிந்தடி ஆகியவற்றைப் பெற்று வரும்.

**பாக்களுக்குரிய ஓசை**

பழங்காலத்தில் பாடல்களை ஓசையைக் கொண்டே அறிந்தனர். நீண்ட தொலைவிலிருந்து சொல்லும் பொருளும் அறியாவகையில் ஒருவன் ஒரு பாடலைப் பாடிய வழி அவன் பாடுவது இன்னபா எனக் காதால் கேட்டு உணர்வதற்கு அடிப்படையாய் இருந்தது இவ்வோசையே ஆகும். ஒவ்வொரு பாவும் வேறுபட்ட ஓசையினை உடையது. அவ்வோசை,

1. செப்பல்

2.அகவல்

3. துள்ளல்

4.தூங்கல்

என நான்காகும்.

**1 செப்பலோசை**

ஒருவர் ஒன்றைக் கேட்க அதற்கு மற்றொருவர் விடை கூறும் உரையாடல் (கூற்றும் மாற்றமும்) போல அமைவது செப்பலோசை ஆகும். இது,

1. ஏந்திசைச் செப்பல் (உயர்ந்தொலிப்பது → வெண்சீர் வெண்டளை வர அமைவது)

2. தூங்கிசைச் செப்பல் (தாழ்ந்தொலிப்பது →இயற்சீர் வெண்டளை வர அமைவது)

3. ஒழுகிசைச் செப்பல் (கலந்தொலிப்பது → வெண்டளை இரண்டும் வர அமைவது)

என மூவகைப்படும்.

**2. அகவலோசை**

ஒருவர், பலரும் கேட்கும்படியாக அழைத்துக் கூறும் சொற்பொழிவைப் போன்று அமைவது அகவலோசை ஆகும். இது மயில் அகவுவது போல அடிதோறும் இடைவிட்டு ஒலிப்பதாலும் அகவல் எனப்பட்டது. இவ்வோசை,

1. ஏந்திசை அகவல் → (நேரொன்றாசிரியத் தளை வர அமைவது)

2. தூங்கிசை அகவல் → (நிரையொன்றாசிரியத்தளை வர அமைவது)

3. ஒழுகிசை அகவல்˙ → (ஆசிரியத் தளை இரண்டும் வர அமைவது)

என மூவகைப்படும்.

**3.துள்ளலோசை**

ஓர் ஒழுங்குபட அமையாமல் இடையிடையே உயர்ந்து (கன்றின் துள்ளலைப் போல) வருவது துள்ளலோசை ஆகும். இது

1. ஏந்திசைத் துள்ளல்˙ → (கலித்தளை வர அமைவது)

2. அகவல் துள்ளல்˙ → (வெண்சீர் வெண்டளை, கலித்தளை விரவி வர அமைவது)

3. பிரிந்திசைத் துள்ளல்˙ → (பல தளைகளும் கலந்து வர அமைவது)

என மூன்று வகைப்படும்.

**4. தூங்கலோசை**

அடிதோறும் தொடர்ந்து செல்லாமல் சீர்தோறும் ஆங்காங்கே தொங்கும் ஓசை தூங்கலோசை ஆகும். தாழ்ந்து (மென்மையாக) ஒலிக்கின்ற காரணத்தாலும் தூங்கலோசை எனப் பெயர் பெற்றது. இது,

1. ஏந்திசைத் தூங்கல்˙ → (ஒன்றிய வஞ்சித்தளை வர அமைவது)

2. அகவல் தூங்கல்˙ → (ஒன்றாத வஞ்சித்தளை வர அமைவது)

3. பிரிந்திசைத் தூங்கல் → (பல தளையும் விரவி வர அமைவது)

என மூன்று வகைப்படும்.

**பாக்களுக்குரிய அடியும் (2) ஓசையும் (4)**

21. **வெண்பா வகவற் கலிப்பா வளவடி வஞ்சியென்னும்**

**ஒண்பா வடிகுறள் சிந்தென் றுரைப்ப வொலிமுறையே**

**திண்பா மலிசெப்பல் சீர்சா லகவற்சென் றோங்குதுள்ளல்**

**நண்பா வமைந்த நலமிகு தூங்க ன்றுநுதலே.**

மணம் வீசும் திலகத்தை அணிந்த நெற்றியை உடைய பெண்ணே! நால்வகைப் பாக்களுள் 1. வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா என்னும் மூன்றும் நான்கு சீர்களால் அமைந்த அளவடியைப் பெற்று வரும் 2. ஒழுங்குற அமைந்த வஞ்சிப்பாவிற்கு இருசீரால் அமைந்த குறளடியும் முச்சீரால் அமைந்த சிந்தடியும் உரியனவாம். 1. வெண்பாவிற்கு வளமை வாய்ந்த செப்பலோசை உரியதாகும் 2. ஆசிரியப்பா சிறப்புப் பொருந்திய அகவலோசையைப் பெற்று வரும் 3. இயல்பாய் ஒடித் துள்ளிச் செல்கின்ற ஓசை கலிப்பாவிற்கு உரியதாகும் 4. ஒழுங்குற அமைந்த உயர்வினை உடைய தூங்கலோசை வஞ்சிப்பாவிற்கு உரியது.

என்பது காரிகை. இவ்வியல் என்ன பெயர்த்தோ எனின். வெண்பா, வெண்தாழிசை, வெண்டுறை, வெளிவிருத்தம், ஆசிரியப்பா, ஆசிரியத் தாழிசை, ஆசிரியத் துறை, ஆசிரிய

விருத்தம்' கலிப்பா, கலித்தாழிசை, கலித்துறை, கலிவிருத்தம்' வஞ்சிப்பா, வஞ்சித்தாழிசை, வஞ்சித்துறை, வஞ்சி விருத்தம், மருட்பர் எனக் கிடந்த செய்யுட்கள் ஆமாறு உணர்த்திற்று ஆதலால் செய்யுளியல் என்னும் பெயர்த்து.

**"வெண்பா வெண்பா முதலா விளம்புநாற் பாவொலி**

**செப்பல் அகவல் சீர்கெழு துள்ளல்**

**தூங்கல் என்ப தொன்னூற் புலவர்."**

இவ்வியலுள் இக்காரிகை என் நுதலிற்றோ எனின், வெண்பா. ஆசிரியம், கலி, வஞ்சி என்னும் நான்கு பாவிற்கும் அடியும் ஓசையும் ஆமாறு உணர்த்துதல்.

வெண்பா அகவல் கலிப்பா அளவடி என்பது வெண்பாவும். ஆசிரியப்பாவும், கலிப்பாவும் நாற்சீரடியான் வரப்பெறும்.

## வெண்பா

### (வெண்பாவைப் பற்றிய கருத்துக்கள்)

நான்குவகைப் பாக்களுள் தலைமைத் தன்மை உடையதாகச் சிறப்புப் பெற்று விளங்குவது வெண்பா ஆகும். வேற்று நிறம் கலக்காமல் தூய்மைபெற்ற வெள்ளை நிறம் எல்லா நிறத்திலும் சிறப்புடையதாய்ப் போற்றப்பெறும். அதுபோல வேற்றுத்தளையும் அடியும் விரவாமல் அமைந்து மேம்பட்டு விளங்குவதால் வெண்பா எனப் பெயர் பெற்றது. இதற்கு வெள்ளைப்பா, அந்தணர்பா என்னும் வேறு பெயர்களும் உண்டு.

**பொதுவிலக்கணம்**

1.செப்பலோசை பெற்று வரும் 2. ஈற்றடி முச்சீராய் ஏனையடி நாற்சீராய் அமையும் 3. தேமா முதலான இயற்சீர் நான்கையும் தேமாங்காய் முதலான வெண்சீர் நான்கையும் சீராகப் பெறும் 4. வெண்சீர் வெண்டளை, இயற்சீர் வெண்டளை என்னும் இரண்டு தளைகளை மட்டுமே பொருந்தி வரும் 5. பிற தளைகளை ஏற்காது 6. நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்பாடுகளைப் பெற்ற சீர்கள் நான்கனுள் ஒன்றைக் கொண்டே முடிவுறும். இவையனைத்தும் வெண்பாவின் பொதுவிலக்கணம் ஆகும்.

**வகைகள்**

வெண்பாவானது,

1. குறள் வெண்பா - ஓரடி முக்கால
2. சிந்தியல் வெண்பா - ஈரடி முக்கால்
3. நேரிசை வெண்பா - மூவடி முக்கால்
4. இன்னிசை வெண்பா. - மூவடி முக்கால்
5. ப∴றொடை வெண்பா என ஐந்து வகைப்படும். - பலவடி முக்கால

**1. குறள் வெண்பா**

மிகக் குறைந்த அளவாகிய இரண்டடிகளைக் கொண்டு அமைக்கப்படுவதால் குறள் வெண்பாவாயிற்று. வெண்பாவின் பொதுவிலக்கணம் பொருந்த முதலடி நான்கு சீரையும் இரண்டாமடி மூன்று சீரையும் பெறுவது இவ்வகையாகும். இது எதுகைத்தொடை பெற்றோ பெறாமலோ அமையும்.

**2. சிந்தியல் வெண்பா**

வெண்பாவிற்குரிய பொதுவிலக்கணத்தைப் பெற்று மூன்றடியால் இயற்றப்படுவது சிந்தியல் வெண்பாவாகும். குறட்பாவை நோக்க அடியால் நீண்டது. ஆதலின் சிந்தியல் எனப் பெயர் பெற்றது. இது 1. நேரிசைச் சிந்தியல் வெண்பா 2.இன்னிசைச் சிந்தியல் வெண்பா என இரண்டு வகைப்படும்.

1. இரண்டாம் அடியின் இறுதியில் தனிச்சொல் பெற்று ஓர் எதுகையோ ஈர் எதுகையோ அமைய மூன்றடிகளால் வருவது நேரிசைச் சிந்தியல் வெண்பாவாகும் 2. தனிச்சொல் இன்றி ஒரு விகற்பமோ (ஓர் எதுகை) பல விகற்பமோ (பல எதுகை) பெற்று மூன்றடியான் வருவது இன்னிசைச் சிந்தியல் ஆகும்.

**3. நேரிசை வெண்பா**

புலவரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒழுங்கமைந்த ஓசையை உடைய பாடல் ஆகையால் நேரிசை என்பது காரணப் பெயராகும். நான்கு அடிகளைக் கொண்டதாய், இரண்டாம் அடியின் இறுதியில் தனிச்சொல் பெற்று வரும். நான்கடிகளும் ஓரெதுகை பெற்றும் வரும். முன்னிரண்டு அடிகளில் ஒரெதுகையும் பின்னிரண்டு அடிகளில் மற்றோர் எதுகையும் பெற்று அமைவதும் நேரிசை வெண்பாவாகும். முதலிரு அடிகளில் அமையும் எதுகைக்கு எற்பவே தனிச் சொல்லின் எதுகையும் அமையும். இவ்வெண்பாவிற்கு இருகுறள் நேரிசை வெண்பா, இணைக்குறள் நேரிசை வெண்பா என்னும் வேறுபெயர்களும் உள்ளன.

**ஆசிடை நேரிசை வெண்பா**

இரண்டு குறள் வெண்பாக்களைக் கொண்டு தனிச்சொல்லால் அடியை நிரப்பி அமைக்கப்படுவது நேரிசை வெண்பா. அவ்வாறு அமைக்கும் போது முதற்குறட்பாவின் ஈற்றுச்சீரும் தனிச்சொல்லும் தம்முள் தளைப்பொருத்தமின்றி வெண்பாவிற்குரிய செப்பலோசை மாறுபட்டொலிக்கும். அதனைப் போக்குவதற்கு முதற்குறட்பாவின் இறுதிச்சீரோடு ஒன்றோ இரண்டோ அசைகூட்டப் பெறும். இது ஒற்றுமைப்படாத உலோகங்களின் மூட்டு வாய்களின் இடையில் வைத்து இணைக்கும் ஆசுக்கு பொடிக்கு ஒப்பாகக் காட்டப்படும். ஆதலால் இத்தன்மை கொண்டமையும் வெண்பாக்கள் கூட்டப்பெறும் அசைகளுக்கு ஏற்ப ஓராசிடை, ஈராசிடை நேரிசை வெண்பா எனப் பெயர் பெறும். இவ்வகை வெண்பாக்களின் நான்கடியும் ஓரெதுகை பெற்றும் வரும். முன்னிரு அடிகள் ஓர் எதுகை, பின்னிரு அடிகள் மற்றோர் எதுகை பெற்றும் அமையும்.

**4. இன்னிசை வெண்பா**

நேரிசை வெண்பாவைப் போல நான்கடிகளைக் கொண்டு இயற்றப்பெறுவது இன்னிசை வெண்பாவாகும். இனிமை உடைய ஓசையையும் சொல்லையும் பெற்றதால் இன்னிசை என்பது காரணப் பெயராகும். ஒருவிகற்பமோ பலவிகற்பமோ பெற்றுத் தனிச்சொல் பெறாமல் வருவதே இன்னிசை வெண்பா. அது (1. இரண்டாம் அடியின் இறுதியில் தனிச்சொல் பெற்று மூன்று எதுகைபெற்றும் வரும் 2. மூன்றாம் அடியில் தனிச்சொல் பெற்று இரண்டு எதுகை பொருந்தியும் வரும் 3. அடிதோறும் ஒரூஉத் தொடை பெற்றும் வரும் 4. நேரிசை வெண்பாவில் சிறிது வேறுபட்டும் வரும். இவை அனைத்தும் இன்னிசை வெண்பாவாகவே கொள்ளப்படும்

## 5. ப∴றொடை வெண்பா

வெண்பாவிற்குரிய பொதுவிலக்கணத்தைப் பெற்று நான்கடிகளின் மிக்க அடிகளைக் கொண்டு அமைவது ப∴றொடை (பல் ு தொடை) ஆகும். 5 அடியைச் சிற்றெல்லையாகக் கொண்டு பல அடிகளால் பாடப் பெறுவதே ப∴றொடை வெண்பாவாகும். ஆயினும் ஏழடியைப் பெற்று வருவது சிறப்புடையதாகும். அதற்கு மேம்பட்ட அடிகளைக் கொண்டு வருவன தொடர்நிலைப் ப∴றொடை வெண்பா எனக் கூறப்பெறும். ப∴றொடை வெண்பாக்கள் ஒரெதுகை பெற்றும் பல எதுகை பெற்றும் வரும்.

### பாவினங்கள்

வெண்பா முதலாகக் கூறப்படும் பாக்கள் நான்கு. அவற்றிற்குரிய இலக்கணத்திலிருந்து வேறுபடும் பாடல்கள் ஒருவாறு தத்தம் பாக்களை அளவால் ஒத்துக் காணப்படும். இவ்வாறு அமைபவற்றைப் பாவினம் எனக் கூறுவர். இது காரணப் பெயராவதைப் பாவொத்து இனமாய் நடத்தலின் இனம் எனப்படுமே என்னும் தொடரால் அறியலாம்.

### வெண்பாக்களின் இனங்கள்

வெண்பா 1.குறள் வெண்பா எனவும் 2. வெண்பா எனவும் இரண்டு வகையாகப் பகுத்து அவற்றுக்குரிய இலக்கணம் எடுத்துரைக்கப்படுகிறது. 1. குறள் வெண்பா (அ) குறள் வெண் செந்துறை (ஆ) குறள் தாழிசை என்னும் இரண்டு இனங்களை உடையது.

2. வெண்பா (அ) வெளி விருத்தம் (ஆ) வெண்தாழிசை ( வெண்துறை என மூன்று இனங்களை உடையது.

## 1. குறள் வெண்பாவின் இனங்கள்

### அ. குறள் வெண்செந்துறை

இரண்டடிகளை உடையதாய்த் தம்முள் அளவொத்து வருதல்' உயர்ந்த (விழுமிய) பொருளைப் பேசுவதாய்த் தடையில்லாத நீரோட்டம் போன்ற சிறந்த (ஒழுகிய) ஓசை உடையதாய் அமைதல் ஆகிய விதிகளைக் கொண்டது குறள் வெண்செந்துறை ஆகும். இதற்கு வெள்ளைச் செந்துறை என்னும் வேறு பெயரும் உண்டு.

### ஆ. குறள் தாழிசை

1.அளவடியினும் மிக்க பல சீர்களைப் பெற்று இரண்டடிகளுள் ஈற்றடி சீர்குறைந்து வருவது தாழிசைக் குறள் அல்லது குறட்டாழிசை எனப்படும். இது (அ) செந்துறைச் சிதைவு (ஆ) சந்தம் சிதைந்த குறள் என்பனவாகவும் அமையும்.

2. இரண்டடியாய் அளவொத்து விழுமிய பொருளும் ஒழுகிய ஓசையும் இன்றி (குறள்வெண் செந்துறைக்கு) மாறுபட வருவதும் குறள்தாழிசை ஆகும்.

3. குறள் வெண்பாப் போல் அமைந்து வேற்றுத்தளை வந்து செப்பலோசை சிறிது சிதைவதும் சந்தம் சிதைந்த குறள் தாழிசையாகும்.

**2.வெண்பாவின் இனங்கள்**

**அ. வெளி விருத்தம்**

மூன்றடிகளையோ நான்கடிகளையோ பெற்று வருதல். அடிதோறும் ஒரு சொல்லே ஐந்தாவது சீராகிய தனிச்சொல்லாய் வருதல் என்னும் இலக்கணத்தால் அமைவதே வெளிவிருத்தம் ஆகும். நான்கு சீரின் விரிந்து ஐந்து சீர்களைப் பெற்று வருவதால் விருத்தம் என்பது காரணப் பெயராகும்.

**ஆ. வெண்தாழிசை**

மூன்று அடிகளைப் பெற்று இறுதியடி மூன்று சீர்களைக் கொண்ட சிந்தடியால் முடிவது வெண்தாழிசை எனப்படும். இதற்கு வெள்ளொத் தாழிசை என்னும் வேறுபெயரும் உண்டு. மூன்று அடிகளைப் பெற்று வரும் இப்பாவினத்தின் அடிகள் வேற்றுத்தளை விரவிச் சிந்தியல் வெண்பாவிலிருந்து மாறுபட்டு வரும். சிந்தியல் வெண்பா ஒரு பொருள் மேல் மூன்றடுக்கி வரும் (மென்மையாய் நீண்டொலிக்கும்) தன்மை கொண்டதும் வெண்தாழிசையாகும். வெண்டளைகளை மட்டும் பெற்று வருவது சிந்தியல். பிறதளையும் கொண்டமைவது வெண்தாழிசை. இதுவே இரண்டற்கும் உள்ள வேறுபாடு ஆகும்.

**இ. வெண்துறை**

மூன்றடிகளைச் சிற்றெல்லையாகவும் ஏழடிகளைப் பேரெல்லையாகவும் கொண்டு ஈற்றடிகளில் சில சீர்கள் குறைந்து வருவது வெண்டுறை ஆகும். இவ்வகைப் பாவினத்தில் எல்லா அடிகளும் ஓசை ஒத்துவரின் ஓரொலி வெண்டுறை என்று பெயர் பெறும். அடிகள் மாறுபட்ட ஓசையுடன் நடக்குமாயின் வேற்றொலி வெண்டுறை எனக் கூறப்படும். வெண்பாக்களின் வகைகளும் அவற்றின் இனங்களும் ஐந்து காரிகைகளில் (23-27) எடுத்துரைக்கப் படுகின்றன.

**குறள் வெண்பா, நேரிசை வெண்பா**

23. **ஈரடி வெண்பாக் குறள்குறட் பாவிரண் டாயிடைக்கட்**

**சீரிய வான்றனிச் சொல்லடி மூய்ச்செப்ப லோசைகுன்றா**

**தோரிரண் டாயு மொருவிகற் பாயும் வருவதுண்டேல்**

**நேரிசை யாகு நெறிசுரி பூங்குழ னேரிழையே.**

அடர்ந்தும் சுருண்டும் விளங்குவதாய்ப் பூவினை அணிந்த குழலினையும் சிறந்த அணிகலன்களையும் உடைய பெண்ணே! 1. இரண்டு அடிகளைக் கொண்டது குறள் வெண்பாவாகும் 2. இரண்டு குறட்பாக்களாய் அமைந்து அவற்றின் இடையில் சிறப்புடைய தனிச்சொல்லால் நிரப்பப் பெற்றுச் செப்பலோசை சிதையாமல் ஒரு விகற்பமாகவோ இரண்டு விகற்பமாகவோ வருவது நேரிசை வெண்பாவாகும்.

குறள் வெண்பா, நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா, ப∴றொடை வெண்பா, நேரிசைச் சிந்தியல் வெண்பா, இன்னிசைச் சிந்தியல் வெண்பா எனவும்,

நேரிசை ஆசிரியப்பா, இணைக்குறள் ஆசிரியப்பா. நிலைமண்டில ஆசிரியப்பா, அடிமறிமண்டில ஆசிரியப்பா எனவும். நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா, அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா, வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா' கலி வெண்பா: வெண் கலிப்பா,

தரவுகொச்சகக் கலிப்பா, தரவிணைக் கொச்சகக் கலிப்பா, சி∴றாழிசைக் கொச்சகக் கலிப்பா, ப∴றாழிசைக் கொச்சகக் கலிப்பா, மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா எனவும், குறளடி வஞ்சிப்பா, சிந்தடி வஞ்சிப்பா எனவும்,

புறநிலை வாழ்த்து மருட்பா, கைக்கிளை மருட்பா, வாயுறை வாழ்த்து மருட்பா, செவியறிவுறூஉ மருட்பா எனவும் கிடந்த பாவிகற்பங்களுள் செப்பலோசை உடைத்தாய், ஈற்றடி முச்சீராய், ஏனையடி நாற்சீராய், வெண்சீரும் இயற்சீரும் வந்து, வெண்டளை தட்டு, வேற்றுத்தளை விரவாது, காசு, பிறப்பு, நாள், மலர் என்னும் வாய்பாட்டாலிறும் வெண்பாவினை அடியானும், தொடையானும், ஓசையானும், பெயர் வேறுபாடு உணர்த்துவான் எடுத்துக் கொண்டார்.

**உதாரண இலக்கிய முதல் நினைப்புக் காரிகை**

**உருவுகண் டெள்ளா வுடையார் குறண்மட வாய்தட மண்**

**டரிய வரைகீண் டிருகுற ணேரிசை தாமரையின்**

**கருமமு மார்த்தவும் வஞ்சியுங் காமர்தனிச் சொன்முன்னா**

**நெரிநுண் கருங்குழ னேரிழை யாசிட்ட நேரிசையே.**

’ நீண்டிருக்கும் நுண்மையான கரிய கூந்தலினையும் சிறந்த ஆடை அணிகலன்களையும் அணிந்த பெண்ணே! 1. உருவு கண்டு, உடையார் எனத் தொடங்கும் பாடல்கள் குறட்பாவிற்குரிய எடுத்துக் காட்டுக்களாகும் 2. தடமண்டு, அரியவரை கீண்டு எனத் தொடங்கும் பாடல்கள் இரண்டும் இருகுறள் நேரிசை வெண்பாவிற்குரிய இலக்கணம் பொருந்தியவை 3. தாமரையின், கருமமும், ஆர்த்த, வஞ்சி எனத் தொடங்குபவை விரும்புகின்ற தனிச்சொல்லின் முன்னாக அசைகூட்டப்பட்ட ஆசிடை நேரிசை வெண்பாக்களுக்குரிய மேற்கோள்களாகும்.

இவ்வுரைச் சூத்திரக் காரிகையின் வழியே குறள் வெண்பாவிற்கும் நேரிசை வெண்பாவிற்கும், ஆசிடை நேரிசை வெண்பாவிற்கும் காட்டிய இலக்கியங்களை முதல் நினைத்துக் கொள்க.

**இன்னிசை வெண்பா, ப∴றொடை வெண்பா**

**24.** **ஒன்றும் பலவும் விகற்பொடு நான்கடி யாய்த் தனிச்சொல்**

**இன்றி நடப்பின∴ தின்னிசை துன்னு மடிபலவாய்ச்**

**சென்று நிகழ்வது ப∴றொடை யாஞ்சிறை வண்டினங்கள்**

**துன்றுங் கருமென் குழற்றுடி யேரிடைத் தூமொழியே.**

அழகிய சிறகுகளைக் கொண்ட வண்டினங்கள் மொய்க்கின்ற கரிய மென்மையான குழலினையும் துடியை ஒத்த இடையினையும் தூய மொழியினையும் உடைய பெண்ணே! 1.ஒரு விகற்பத்தையோ பல விகற்பத்தையோ பெற்று நான்கடியால் அமைந்து தனிச்சொல் இல்லாமல் நடப்பது இன்னிசை வெண்பா ஆகும் 2. நான்கடிக்கு மேற்பட்டுப் பல அடிகளால் வருவது ப∴றொடை வெண்பாவாகும்.

**இன்னிசை வெண்பாவும், வெண்பாவின் ஈற்றுச்சீரும்**

25. **நேரிசை யின்னிசை போல நடந்தடி மூன்றின்வந்தால்**

**நேரிசை யின்னிசைச் சிந்திய லாகு நிகரில்வெள்ளைக்**

**கோரசைச் சீரு மொளிசேர் பிறப்புமொண் காசுமிற்ற**

**சீருடைச் சிந்தடி யேமுடி வாமென்று தேறுகவே**

1. நேரிசை வெண்பாவைப் போல அமைந்து மூன்றடியைப்பெற்று வருவது நேரிசைச் சிந்தியல் வெண்பா ஆகும் 2. இன்னிசை வெண்பாவைப் போல அமைந்து மூன்றடியாய் வருவது இன்னிசைச் சிந்தியல் வெண்பா என்று பெயர் பெறும் 3. ஒப்புமைகாட்ட முடியாத வெண்பாவிற்கு நாள், மலர் என்னும் ஓரசைகளுள் ஒன்று ஈற்றுச் சீராக அமையும். அவற்றை அன்றிப் புகழ் சேர்ந்த பிறப்பையும் ஒளி பொருந்திய காசையும் இறுதியாகக் கொண்ட சிறப்புடைய மூன்று சீரால் அமைந்த சிந்தடியைக் கொண்டே முடிவுறும் என்பதைத் தெளிவுற அறிவாயாக.

நேரிசைச் சிந்தியல் வெண்பாவும், இன்னிசைச்

சிந்தியல் வெண்பாவும், எல்லா வெண்பாவிற்கும் ஈறாமாறும் உணர்த்துதல் நுதலிற்று. நேரிசை இன்னிசை போல நடந்து அடி மூன்றின் வந்தால் நேரிசை இன்னிசைச் சிந்தியலாகும் என்பது' நேரிசை வெண்பாவே போல இரண்டாம் அடியின் இறுதி தனிச்சொல் பெற்று இரு விகற்பத்தானும் ஒரு விகற்பத்தானும் மூன்றடியான் வருவன நேரிசைச் சிந்தியல் வெண்பா எனவும், இன்னிசை வெண்பாவே போலர் தனிச்சொல் இன்றி ஒரு விகற்பத்தானும் பல விகற்பக்தானு மூன்றடியான் வருவன இன்னிசைச் சிந்தியல் வென் வழங்கப்படும்.

**“நேரிசைச் சிந்தும் இன்னிசைச் சிந்தும்என்று**

**ஈரடி முக்கால் இருவகைப் படுமே.”**

என்றார்

நத்தத்தனார் முதலாகிய ஒரு சார் ஆசிரியர். அதுபோல இந்நூலுடையாரும் தேமா, புளிமா என்னும் இரண்டு நேரீற்று இயற்சீரும் உளவாக வெண்பாவின் இறுதிச்சீருக்கு உதாரண வாய்பாட்டான் ஓசையூட்டுதல் பொருட்டாகக் குற்றியலுகரம் ஈறாகிய காசு, பிறப்பு என்னும் வாய்பாட்டான் நேரீற்று இயற்சீர் ஈறாக வேறு உதாரணம் எடுத்து ஓதினார் எனக் கொள்க. (5)

### குறள் வெண்செந்துறை, குறள் தாழிசை

26. **அந்தமில் பாத மளவிரண் டொத்து முடியின் வெள்ளைச்**

**செந்துறை யாகுந் திருவே யதன்பெயர் சீர்பலவாய்**

**அந்தங் குறைநவுஞ் செந்துறைப் பாட்டி னிழிபுமங்கேழ்ச்**

**சந்தஞ் சிதைந்த குறளுங் குறளினத் தாழிசையே.**

திருமகளை ஒத்தவளே! 1. இறுதியடி மூன்று சீர்களைப் பெறாமல் முதலடியைப் போல நான்கு சீர்களைப் பெற்றுத் தம்முள் அளவொத்து இரண்டடியாய் வருவது வெண்செந்துறை எனப்

பெயர் பெறும் 2.(அ) இரண்டடியைப் பெற்று நான்கு சீரின் மிக்க சீரால் வருவனவும் (ஆ) முதலடியின் சீர்களைவிட இரண்டாம் அடியின் சீர்கள் குறைந்து வருவனவும் (இ) வெண்செந்துறையின் தன்மையிலிருந்து இழிந்து வருவனவும் (ஈ) குறள் வெண்பாவாய் அமைந்து செப்பலோசை சிறிது மாறி வருவனவும் குறட்பாவின் இனமாகிய குறள்தாழிசையாகக் கொள்ளப்படும்.

குறள் வெண்பாவிற்கு இனமாகிய துறையும், தாழிசையும் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று

அந்தமில் பாதம் அளவிரண்டு ஒத்து முடியின் வெள்ளைச் செந்துறையாகும் என்பது' இரண்டடியாய்த் தம்முள் அளவொத்து வருவது வெண்செந்துறை என்றும், செந்துறை வெள்ளை என்றும் பெயரிட்டு வழங்கப்படும்.

அந்தமில் பாதம் என்று சிறப்பித்த அதனால், விழுமிய பொருளும் ஒழுகிய ஓசையும் உடைத்தாய் வருவது எனக் கொள்க.

**வெளிவிருத்தம், வெண்தாழிசை, வெண்துறை**

**27.** **மூன்றடி யானு முடிந்தடி தோறு முடிவிடத்துத்**

**தான்றனிச் சொற்பெறுந் தண்டா விருத்தம்வெண் டாழிசையே**

**மூன்றடி யாய்வெள்ளை போன்றிறு மூன்றிழி பேழுயர்வாய்**

**ஆன்றடி தாஞ்சில வந்தங் குறைந்திறும் வெண்டுறையே.**

1. மூன்று அடிகளைக் கொண்டு முற்றுப்பெற்றதாய் அவ்வடிகள் தோறும் ஒரு சொல்லையே தனிச்சொல்லாகப் பெற்று வருவது விலகுதல் இல்லாத வெளிவிருத்தம் ஆகும் 2. மூன்று அடிகளைப் பெற்று ஈற்றடி வெண்பாவைப் போல மூன்று சீர்களால் அமைவது வெண்தாழிசை எனக் கூறப்படும் 3. மூன்றடிச் சிறுமையையும் ஏழடிப் பெருமையையும் கொண்டு இடையில் அமைந்த அடிகளில் சீர்கள் குறைந்து வருவது வெண்துறையாகும்.

வெளிவிருத்தமும், வெண்தாழிசையும், வெண்துறையும் ஆமாறு உணர்த்துதல்.

மூன்று அடியானும் முடிந்து அடிதோறும் முடிவிடத்துத், தான்தனிச் சொற்பெறும் தண்டா விருத்தம் என்பது' மூன்றடியானும் முற்றுப் பெற்று அடிதோறும் ஒரு சொல்லே இறுதிக்கண் தனிச்சொல்லாய் வருவது வெளிவிருத்தம் எனப்படும் எ-று. மூன்றடியானும் என்ற உம்மையால் நான்கடியானும் வரப்பெறும்.

தண்டா விருத்தம் என்று சிறப்பித்த அதனால் நாற்சீர் அடியுள் பட்டு அடங்காது வேறாய் வருவது ஈண்டுத் தனிச்சொல் எனக் கொள்க.

**ஆசிரியப்பா**

**ஆசிரியப்பாவைப் பற்றிய கருத்துக்கள்**

நால்வகைப் பாக்களுள் பெருமைமிக்க பாவாக விளங்குவது ஆசிரியப்பா ஆகும். பல பொருள்களையும் ஆசிரியனைப் போலச் சொல்லும் ஆற்றலால் ஆசிரியப்பாவாயிற்று. இதனை அரசர்பா என்றும் அகவற்பா என்றும் குறிப்பிடுவர். சங்க இலக்கிய பாடல்கள் அனைத்தும் இப்பாவிலேயே அமைந்துள்ளன என்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

**பொதுவிலக்கணம்**

1. அகவலோசையைப் பெற்று வரும் 2. நான்கு சீர்களைக் கொண்ட அளவடியால் அமையும் 3. தேமா முதலான ஈரசைச் சீர்கள் நான்கையும் மிகுதியாகப் பெற்றுவரும் 4. காய்ச் சீர்களைக் குறைவாகப் பெறும் 5. ஆசிரியத்தளைகளை மிகுதியாகப் பெற்று வரும் 6. வெண்டளை, கலித்தளை ஆகிய இரண்டும் விரவி வரும் 7.கருவிளங்கனி, கூவிளங்கனி ஆகிய வஞ்சியுரிச்சீர்களும் வஞ்சித்தளையும் ஆசிரியப்பாவில் இடம்பெறா. இவையே ஆசிரியப்பாவின் பொதுவிலக்கணம் ஆகும்.

**வகைகள்**

ஆசிரியப்பாவானது,

1. நேரிசை ஆசிரியப்பா (ஓசையால் பெற்ற பெயர்)
2. இணைக்குறள் ஆசிரியப்பா (அடியால் பெற்ற பெயர்)
3. நிலைமண்டில ஆசிரியப்பா (பொருளால் பெற்ற பெயர்)
4. அடிமறி மண்டில ஆசிரியப்பா (தொடையால் பெற்ற பெயர்)

என நான்கு வகைப்படும்.

**1. நேரிசை ஆசிரியப்பா**

ஒழுங்குற அமைந்த சிறந்த ஓசை உடைமையால் நேரிசை ஆசிரியப்பா என்பது காரணப் பெயராகும்.

ஆசிரியப் பாவிற்குரிய பொதுவிலக்கணத்தைப் பெற்று ஈற்றயலடி (கடைசி அடிக்கு மேலடி) மூன்று சீர்களைக் கொண்ட சிந்தடியாகவும் பிற அடிகள் அளவடியாகவும் அமைவது நேரிசை ஆசிரியப்பா ஆகும். இது ஏ, ஓ, என், ஈ, ஆ, ஆய் என்னும் அசைச் சொற்களில் ஒன்றை இறுதியாகக் கொண்டு முடியும்.

**2.இணைக்குறள் ஆசிரியப்பா**

ஆசிரியப் பாவிற்குரிய பொதுவிலக்கணம் பொருந்த முதலடியும் ஈற்றடியும் நான்கு சீர்களைக் கொண்ட அளவடியாகஅமையும். இடையடிகள் இரண்டு சீரைக் கொண்ட குறளடியையோ மூன்று சீரைக் கொண்ட சிந்தடியையோ பெற்ற நிற்பது இணைக்குறள் ஆசிரியப்பா ஆகும். அளவடியை நோக்கக் குறுகி நிற்கும் குறளடியும் சிந்தடியும் இணைந்து வருவதால் இணைக்குறள் ஆசிரியப்பா ஆயிற்று.

**3.நிலைமண்டில ஆசிரியப்பா**

ஆசிரியப் பாவிற்குரிய பொதுவிலக்கணத்தைப் பொருந்திப் பாவில் இடம்பெறும் அனைத்து அடிகளும் நான்கு சீர்களைக் கொண்ட அளவடியாக ஒத்து அமைவது நிலைமண்டில ஆசிரியப்பா ஆகும்.

**4.அடிமறி மண்டில ஆசிரியப்பா**

ஆசிரியப் பாவிற்குரிய பொதுவிலக்கணத்தைப் பொருந்தி எல்லா அடியும் தம்முள் அளவொத்து அமையும் நிலைமண்டிலத்தை ஒத்த அமைப்புடையது அடிமறிமண்டிலம் ஆகும். ஆயினும் அவ்வடிகள் கிடக்கும் முறையை விடுத்து விருப்பம்போல் அடிகளை முதல், நடு, இறுதியாக மாற்றி ஒலிக்க ஓசையும் பொருளும் மாறாமல் நிற்பது அடிமறிமண்டில ஆசிரியப்பாவிற்குரிய சிறப்பிலக்கணமாகும்.

**ஆசிரியப்பாவின் இனங்கள்**

ஆசிரியப்பாவனது 1. ஆசிரியத்தாழிசை 2.ஆசிரியத்துறை 3.ஆசிரியவிருத்தம் என மூன்று இனங்களைக் கொண்டது.

**1. ஆசிரியத்தாழிசை**

நான்கு அல்லது அதற்கு மேற்பட்ட சீர்களைக் கொண்ட அடிகள் அளவொத்து வருவது ஆசிரியத் தாழிசை ஆகும். இது ஒரு பொருள்மேல் ஒன்றாகவும் வரும். மூன்று அடுக்கியும் வரும். அடுக்கி வரும் தன்மை கொண்ட தாழிசையே சிறந்ததாகும்.

**2. ஆசிரியத்துறை**

சீர் வரையறை இன்றி நான்கடியாய் வருவது ஆசிரியத்துறை ஆகும். இது (அ) நான்கடியாய் ஈற்றயலடி குறைந்து வருதல் (ஆ) நான்கடியாய் ஈற்றயலடி அளவு குறைந்து இடைமடக்காய் (செய்யுளின் இடையில் வந்த ஓர் அடியோ அல்லது சீர்களோ அப்படியே மீண்டும்) வருதல் (இ) நான்கடியாய் இடையிடையே குறைந்து இடைமடக்காய் வருதல் எனப் பலவகையில் அமையும். இடையிடை குறைந்து வரும் தன்மை கொண்டதனை ஆசிரிய இணைக்குறள் துறை என்று கூறுவர்.

**3. ஆசிரிய விருத்தம்**

ஒத்த அளவுடைய கழிநெடிலடி நான்கு கொண்டு நடப்பது ஆசிரிய விருத்தம் ஆகும். ஐந்து முதலாகப் பல சீர்களைக் கொண்டு இவ்வாசிரிய விருத்தம் இயற்றப்படும். எனினும் ஆறு. எழ், எட்டு என அமைவதே சிறப்புடையது. அதனினும் மிக்கவை சிறப்பற்றதாகக் கூறப்படுகின்றன. ஆயினும் வள்ளலார் 192 சீர்களைக் கொண்ட அடியால் ஆசிரிய விருத்தத்தை இயற்றியுள்ளார் என்பது குறிப்பிடத் தக்கதாகும். ஆசிரியப்பாவின் வகைகளும் இனங்களும் இரண்டு காரிகைகளில் (28, 29) விளக்கப்பெறுகின்றன.

**நால்வகை ஆசிரியப்பா**

**28.** **கடையயற் பாதமுச் சீர்வரி னேரிசை காமருசீர்**
**இடைபல குன்றி னிணைக்குற ளெல்லா வடியுமொத்து**
**நடைபெறு மாயி னிலைமண் டிலநடு வாதியந்தத்**
**தடைதரு பாதத் தகவ லடிமறி மண்டிலமே.**

1. ஈற்றடியின் மேலடி (எருத்தடி) மூன்று சீர்களைப் பெற்று வருவது நேரிசை ஆசிரியப் பாவாகும் 2. இசையைத் தருகின்ற சீர், பின் நிற்கும் அடிகளில் குறைந்து வருவது இணைக்குறள் 3.அனைத்து அடிகளும் அளவடியாய் ஒத்து அமையுமாயின் அது நிலைமண்டிலம் ஆகும் 4. பாடலில் முறையாய்க் கிடக்கும் அடிகளை முன்பின்னாக மாற்றி அமைப்பினும் ஓசையும் பொருளும் மாறாதது அடிமறி மண்டில ஆசிரியப் பாவாகும்.

அகவலோசையோடு அளவடித்தாகியும், இயற்சீர் பயின்றும், அயற்சீர் விரவியும், தன்தளை தழுவியும், பிறதளை மயங்கியும். நிரைநடுவாகிய வஞ்சியுரிச்சீர் வருதல் இல்லா ஆசிரியப்பாவினை அடியானும், தொடையானும், ஓசையானும், பொருளானும் பெயர் வேறுபாடு உணர்த்துவான் எடுத்துக் கொண்டார்.

அவற்றுள், இக்காரிகை நேரிசை ஆசிரியப்பாவும், இணைக்குறள் ஆசிரியப்பாவும், நிலைமண்டில ஆசிரியப்பாவும், அடிமறிமண்டில ஆசிரியப்பாவும் ஆமாறு உணர்த்துதல்.

கடையயற் பாதம் முச்சீர்வரின் நேரிசை என்பது: ஈற்றயலடி முச்சீரான் வருவது நேரிசை ஆசிரியப்பா **"ஈற்றதன் அயலடி ஒருசீர் குறைய**

**நிற்பது நேரிசை ஆசிரி யம்மே."** (அவிநயம்)

**"அந்த அடியின் அயலடி சிந்த**

**வந்தன நேரிசை ஆசிரி யம்மே."** (யாப்பருங்கலம் -3)

என்றார்

**வருமாறு:**

**நேரிசை ஆசிரியப்பா**

**"நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று**

**நீரினும் ஆரள வின்றே சாரல்**

**கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு**

**பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்யே." (குறுந்தொகை -3)**

இஃது ஈற்றயலடி முச்சீரான் வந்தமையால் நேரிசை ஆசிரியப்பா.

காமருசீர் இடை பலகுன்றின் இணைக்குறள் என்பது: ஈற்றடியும் முதலடியும் ஒழிந்து, இடையடிகள் இரண்டும் பலவும் குறளடியானும், சிந்தடியானும் வருவன இணைக்குறள் ஆசிரியப்பா.

**“இயைல குறைவது இணைக்குறள் ஆகும்”**

என்றார் அவிநயனார்.

**“அளவடி அந்தமும் ஆதியும் ஆகிக்**

**குறளடி சிந்தடி என்றா இரண்டும்**

**இடைவர நிற்பது இணைக்குறள் ஆகும்.”**

என்றார் காக்கைபாடினியார்.

**“இடையிடை சீர்தபின் இணைக்குறள் ஆகும்.”**

என்றார் சிறுகாக்கைபாடினியார். வருமாறு -

**இணைக்குறள் ஆசிரியப்பா**

**“நீரின் தண்மையும் தீயின் வெம்மையும்**

**சாரச் சார்ந்து**

**தீரத் தீரும்**

**சாரல் நாடன் கேண்மை**

**சாரச் சாரச் சார்ந்து**

**தீரத் தீரத் தீர்பொல் லாதே.”**

நீரின் குளிர்ச்சித் தன்மையும் தீயின் வெப்பத் தன்மையும் அவற்றின் அருகில் செல்லச் செல்ல மிகுதியாகும். விலகி வர அவற்றின் தன்மை இல்லாமல் போகும். ஆனால் மலைநாட்டுத் தலைவனோடு கொண்ட உறவு நெருங்க நெருங்கக் குறைகிறது. விலக விலக விட முடியாததாய் மிகுதியாகிறது.

**நிலைமண்டில ஆசிரியப்பா**

**“வேரல் வேலி வேர்க்கோட் பலவின்**

**சாரல் நாட செவ்வியை ஆகுமதி**

**யார.ஃ. தறிந்திசி னோரே சாரல்**

**சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கி யாங்கிவள்**

**உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே.” (குறுந்தொகை - 18)**

இ.ஃ.து எல்லா அடியும் நாற்சீராய் அளவொத்து வந்தமையால் நிலைமண்டில ஆசிரியப்பாவாயிற்று. மண்டிலம் எனினும், நிலைமண்டிலம் எனினும் ஒக்கும்.

நிலைமண்டில ஆசிரியப்பாவிற்கு என் என்னும் அசைச்சொல்லான் இறுவது சிறப்புடைத்து. மற்றொருசார் ஒற்றினானும், உயிரினானும் ஈறாய் வரவும் பெறும்.

**அடிமறி மண்டில அசிரியப்பா**

**“சூரல் பம்பிய சிறுகான் யாறே**

**சூரர மகளிர் ஆரணங் கினரே**

**வாரலை எனினே யான்அஞ் சுவலே**

**சாரல் நாட நீவர லாறே.”**

நீர்நிலைகளில் காலைச் சுற்றிக்கொள்ளும் பிரப்பங்கொடிகள் மிகுதியாகப் பரவிக் கிடக்கின்றன. தெய்வப் பெண்கள் தாக்கி மிகுந்த வருத்தத்தை ஏற்படுத்துவர். குறித்த இடத்திற்கு உரிய நேரத்தில் நீ வரவில்லை என்றால் நான் மிகவும் அஞ்சுவேன். மலைநாட்டுத் தலைவனே! நீ நடந்து வரும் வழிகளில்.

இ∴து எல்லா அடியும் முதல் நடு, இறுதியாக உச்சரிக்க ஓசையும் பொருளும் பிழையாது வந்தமையால் அடிமறி மண்டில ஆசிரியப்பா.

**ஆசிரியத் தாழிசை, துறை, விருத்தம்**

**29.** **தருக்கிய றாழிசை மூன்றடி யொப்பன நான்கடியாய்**

**எருத்தடி நைந்து மிடைமடக் காயு மிடையிடையே**

**சுருக்கடி யாயுந் துறையாங் குறைவிறொல் சீரகவல்**

**விருத்தங் கழிநெடி னான்கொத் திறுவது மெல்லியலே.**

மென்மைத் தன்மை உடையவளே! 1. கற்றவருக்குப் பெருமிதத்தைத் தோன்றச் செய்யும் ஆசிரியத் தாழிசை ஒத்த மூன்றடிகளைப் பெற்று வருவதாகும் 2. (அ) நான்கடியாய் ஈற்றயலடி குறைந்து வருவன (ஆ) நான்கடியாய் ஈற்றயலடி குறைந்து வந்த அடியே திரும்ப வருவன (இ) இடையில் குறைந்து வருவன (ஈ) இடை குறைந்து மடக்காய் வருவனவும் ஆசிரியத் துறையாகும் 3. கழிநெடிலடி நான்கு ஒத்து முடிவது குறைவற்ற பழஞ்சிறப்புப் பொருந்திய ஆசிரிய விருத்தம் ஆகும்.

ஆசிரியத் தாழிசையும், ஆசிரியத்துறையும், ஆசிரிய விருத்தமும் ஆமாறு உணர்த்துதல்.

தருக்கியல் தாழிசை மூன்றடி ஒப்பன என்பது மூன்றடியாய்த் தம்முள் அளவொத்து வருவன ஆசிரியத்தாழிசை.

**ஆசிரியத் தாழிசை**

**“வானுற நிமிர்ந்தனை வையகம் அளந்தனை**

**பால்மதி விடுத்தனை பல்லுயிர் ஓம்பினை**

**நீல்நிற வண்ணநின் நிரைகழல் தொழுதனம்.”**

வானைத் தொடும் அளவிற்கு நீண்ட உருவினைக் கொண்டாய்! இம்மண்ணுலகத்தை அளந்தாய்! பால்போலும் ஒளிவிடும் நிலவினைத் தோற்றுவித்தாய்! பல உயிர்களையும் காக்கும் தொழிலை மேற்கொண்டாய்! ஆகையால் நீலநிறம் பொருந்திய திருமாலே! உன் திருவடிகளைத் தொழுதோம். இது தனியே வந்த ஆசிரியத் தாழிசை.

நான்கடியாய் எருத்தடி நைந்தும் இடைமடக்காயும் இடைஇடையே சுருக்கடியாயும் துறையாம் என்பது:

நான்கடியாய் ஈற்றயலடி குறைந்து வருவனவும். நான்கடியாய் ஈற்றயலடி குறைந்து இடைமடக்காய் வருவனவும், நான்கடியாய் இடையிடை குறைந்து வருவனவும், நான்கடியாய் இடையிடை குறைந்து இடைமடக்காய் வருவனவும் ஆசிரியத்துறை எ-று.

நான்கடியாய் என்பதனை எல்லாவற்றினோடும் கூட்டி. இடைமடக்காய் என்பதனை ஒருகால் இருதலையும் கூட்டி மத்திய தீபமாகப் பொருள் உரைத்துக் கொள்க.

சீர் வரையறுத்திலாமையால் எனைத்துச் சீரானும் அடியானும் வரப்பெறும் . முதல் அயலடி குறைந்தும், நடு ஈரடி குறைந்தும் மிக்கும். வருவன ஆசிரியத் துறையாம். அல்லது ஓரடி குறைந்து வருவன ஆசிரிய நேர்த்துறை என்றும் ஈரடி குறைந்து வருவன ஆசிரிய இணைக்குறள் துறை என்றும் கொள்க. வருமாறு:

**ஆசிரியத்துறை**

**“கரைபொரு கானியாற்றம் கல்லதர் எம்முள்ளி வருதிராயின்**

**அரைஇருள் யாமத்து அடுபுலியே றும்அஞ்சி அகன்றுபோக**

**நரையுரு மேறுநும் கைவேல் அஞ்சும் நும்மை**

**வரையர மங்கையர் வெளவுதல் அஞ்சுதும் வாரலையே.”**

கரையை உடைத்து ஓடும் ஆற்றினையும் கற்கள் நிறைந்த வழியினையும் கடந்து எம்மைக் காண்பதற்காக இரவு நேரத்தில் வருவீர்! அந்நள்ளிரவில் ஆற்றல் வாய்ந்த உம்மைக் கண்டு கொல்லும் ஆண்புலி அஞ்சி அகன்று போகும். ஒளிருகின்ற உம்முடைய வேலினைக் கண்டு இடியும் விலகிச் செல்லும். ஆனால் மலையில் வாழ்கின்ற தெய்வப்பெண்கள் உம்மை விடாது கவர்ந்து செல்வர். ஆதலால் தலைவனே! நீ இரவில் வருவது எனக்கு அச்சத்தைத் தருகிறது. எனவே வரவேண்டாம்.

இது நான்கடியாய் ஈற்றயலடி குறைந்து வந்த ஆசிரியத்துறை.

**அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்**

**“விடஞ்சூழ் அரவின் இடைநுடங்க மின்வாள் வீசி விரையார்வேங்**

**கடம்சூழ் நாடன் காளிங்கன் கதிர்வேல் பாடும் மாதங்கி**

**வடம்சேர் கொங்கை மலைதாம்தாம் வடிக்கண் நீல மலர்தாம்தாம்**

**தடந்தோள் இரண்டும் வேய்தாம்தாம் என்னும் தன்கைத் தண்ணுமையே.”**

விடம் கொண்ட பாம்பினைப் போன்ற மெல்லிய இடையை உடையவள் ஆடும் தொழிலில் வல்ல மதங்கி. அவள் தன் இடை ஒடியும்படியாக வீர வாளை வீசி ஆடினாள். மணம் கமழும் வெம்மையான காடுகள் சூழ்ந்த காளிங்கனின் ஒளி மிகுந்த வேலைப் பாடினாள். அப்போது அவள் தன் கையில் இருந்த மத்தளத்தைத் தாம்தாம் என முழங்கிப் பாடினாள். அத்தாளவொலி, ஆரம் அணிந்த மார்பு மலையாகும். மாவடுவைப் பிளந்த கண்கள் நீலமலர்களாகும். அகன்ற தோள்கள் இரண்டும் மூங்கில்கள் தாம்தாம் என ஒலித்துக் காட்டின.

## கலிப்பா

### (கலிப்பாவைப் பற்றிய கருத்துக்கள்)

நால்வகைப் பாக்களுள் ஓசையால் சிறப்புற்று விளங்குவது கலிப்பா ஆகும். சீர். பொருள், இசை ஆகியவற்றால் எழுச்சியும் அழகும் விரைவும் பெற்று விளங்குகின்ற காரணத்தால் கலி என்பது காரணப்பெயராகும். இதனை வணிகர்பா எனக்கூறுவர்.

**கலிப்பாவின் பொதுவிலக்கணம்**

1.துள்ளல் ஓசையைப் பெற்று வரும் 2. நான்கு சீர்களைக் கொண்ட அளவடியால் அமையும் 3. நேரீற்று இயற்சீராகிய தேமா, புளிமா என்னும் இரண்டையும் பெறாது 4. கருவிளங்கனி, கூவிளங்கனி என்னும் நிரை நடுவாகிய வஞ்சியுரிச்சீர்களைப் பொருந்தாது 5. புளிமாங்காய், கருவிளங்காய் என்னும் நிரை முதலாகிய வெண்பா உரிச்சீர் மிக்கு வரும் 6.தன்தளையும் பிற தளைகளையும் பொருந்தி வரும் 7. தரவு, தாழிசை என்பனவற்றை முதல் உறுப்பாகவும் அராகம், அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகம் என்பவற்றைத் துணை உறுப்பாகவும் பெறும். இவையே கலிப்பாவின் பொதுவிலக்கணம் ஆகும்.

**கலிப்பாவின் வகைகள்**

கலிப்பாவானது,

1.ஒத்தாழிசைக் கலி, வெண்கலி, கொச்சகக்கலி என்னும் மூன்று பெரும் பிரிவுகளையும் பல உட்பிரிவுகளையும் உடையது. அவை . ஒத்தாழிசைக்கலி (உறுப்பினால் பெற்ற பெயர் )

1. நேரிசை ஒத்தாழிசைக் கலி
2. அம்போதரங்க ஒத்தாழிசைக் கலி
3. வண்ணக ஒத்தாழிசைக் கலி

1. வெண்கலி → (ஓசையால் அமைந்த பெயர் )
2. கொச்சகக் கலி → (பொருளால் வந்த பெயர் )

1. தரவு கொச்சகக் கலிப்பா

2. தரவிணைக் கொச்சகக் கலிப்பா

3. சில்தாழிசைக் கொச்சகக் கலிப்பா

4. பல்தாழிசைக் கொச்சகக் கலிப்பா

5. மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா

என்பவையாகும்.

**கலிப்பாவின் உறுப்புக்கள்**

வெண்பா, ஆசிரியப்பா என்னும் இரண்டு பாக்களுக்) இல்லாத சிறப்புக் கலிப்பாவிற்கு உண்டு. பல உறுப்புக்களைய பெற்றிருப்பதே அச்சிறப்பிற்குக் காரணமாகும். சொல்ல வந்ததை கட்டுரை போல் தொகுத்தும் வகுத்தும் இவ்வுறுப்புக்களே காரணமாகும். அவை 1. தரவு 2. தாழிசை 3.தனிச்சொல் 4. சுரிதகம் 5. அராகம் 6. அம்போதரங்கம் என்பன அவற்றுள் தரவும் தாழிசையும் முதல் உறுப்புக்கள். எஞ்சியவை துணை உறுப்புக்களாகும். கலிப்பாவைப் பற்றித் தெளிவுற அறியும் முன்னர் அதன் உறுப்புக்களின் தன்மையை அறிந்து கொள்ளலாம். கூறுவதற்கு

**1.தரவு**

கலிப்பாவின் முதல் உறுப்பாக விளங்குவது தரவாகும் செய்யுளில் கூறப்போகும் செய்தியைத் தொடங்கி வைப்பது இதன் பணியாகும். இது மூன்றடிச் சிற்றெல்லையையும் வரையறை அற்ற பேரெல்லையையும் உடையது. ஆயினும் மிகுதியாக 12 அடிகலே காணப்படுகின்றன. தரவிற்கு எருத்தம்(பிடரி) என்னும் வேறு பெயரும் உண்டு. இவ்வுறுப்பைத் தற்காலத்தில் கூறப்படும் கட்டுரையின் முன்னுரை போலக் கொள்ளலாம்.

**2. தாழிசை**

தாழ்ந்து ஒலிக்கின்ற இயல்புடையது தாழிசை என்னும் முதன்மை உறுப்பாகும். இது தரவில் தொடங்கப் பட்ட செய்தியை விரித்துக் கூறுகிறது. தரவிற்கும் சுரிதகத்திற்கும் இடையில் வருவதால் இடைநிலைப்பாட்டு எனவும் வழங்கப்படும்.தரவினை விடத் தாழிசையின் அடிகள் குறைவாய் அமையும். இதன் சிற்றெல்லை இரண்டடியாகவும் பேரெல்லை நான்கடியாகவும் அமையும். இத்தாழிசை மூன்றாகவும் ஆறாகவும் இரட்டித்தும் வரும்.

**3. தனிச்சொல்**

பொருள் தொடர்புடையதாய் ஓரசையாகவோ ஒரு சீராகவோ நிற்பது தனிச்சொல் ஆகும். இது தனித்து நிற்கும் சொல்லாதலின் தனிச்சொல்லாயிற்று. பெரும்பாலும் சுரிதகத்தின் முன்னும் சிறுபான்மை பிற உறுப்புக்களின் இடையிலும் வரும். இதற்கு விட்டிசை, தனிநிலை, கூன், அசைநிலை என்னும் வேறுபெயர்களும் உண்டு.

**4.சுரிதகம்**

கலிப்பாவின் துணை உறுப்புக்களுள் ஒன்று சுரிதகமாகும். இது பாவின் ஈற்றில் அமைவதாகும். நீர்ச்சுழி போன்று சுருங்கிப் பொருளை முடிக்கும் இதனை முடிவுரையாகக்

கொள்ளலாம். கலிப்பாவிற்குரிய துள்ளல் ஓசையைப் பெற்று வராமல் பெரும்பான்மை ஆசிரியப்பாவையும் சிறுபான்மை வெண்பாவையும் கொண்டு முடியும். இது பற்றி ஆசிரியச் சுரிதகம் என்றும் வெண்பாச் சுரிதகம் என்றும் இவ்வுறுப்பு அடை கொடுத்து வழங்கப்படுகிறது. இதற்கு அடக்கியல், வாரம், வைப்பு, போக்கியல் என்னும் வேறு பெயர்களும் உள்ளன.

**5.அராகம்**

கலிப்பாவின் துணை உறுப்புக்களுள் அராகமும் ஒன்று. இச்சொற்கு இசை என்பது பொருளாகும். இச்சொல் ராகம் என வடமொழிக்குச் சென்று வடமொழியாகக் கருதப்பட்டுப் பின் தமிழின் ஒலிப்பு முறைக்கேற்ப இராகம் என வழங்கப்படுகிறது. இவ்வுறுப்புக் கருவிளச் சீர்களை மிகுதியாகப் பெற்று வரும். அதனால் குறைவதும் மிகுவதும் இன்றி மிடுக்குற்றுச் செல்லும் ஓசையினைப் பெற்றிருக்கும். இது தாழிசைக்குப் பின்னரும் அம்போதரங்கத்துக்கு முன்னரும் வரப்பெறும். அராகம், அளவடி முதலாக எல்லா அடியானும் வரப்பெறும். சிற்றெல்லை நான்கு அடியாகவும் பேரெல்லை எட்டு அடியாகவும் கொண்டு இடையிடை எத்துணை அடியானும் வரப்பெறும். இது வண்ணகம், அடுக்கியல், முடுகியல் என்னும் வேறு பெயர்களாலும் சுட்டப்பெறும்.

**6. அம்போதரங்கம்**

அராகத்தை அடுத்து அமையும் உறுப்பு அம்போதரங்கம் ஆகும். அம்பு -நீர்' தரங்கம்-அலை. அம்புத்தரங்கம் என்னும் வடமொழித்தொடர் அம்போதரங்கம் என மருவி வழங்குகிறது. தோன்றுமிடத்துப் பெரிதாய் உருவெடுத்துக் கரையை அடைய அடையக் குறைந்து போவது அலையின் இயல்பாகும். அதுபோல நாற்சீரடி, முச்சீரடி, இருசீரடி எனக் குறைந்து கொண்டே வருவதால் இது உவமையாகுபெயர் ஆயிற்று. இவ்வுறுப்பு, தாழிசைக்கும் தனிச்சொல்லிற்கும் இடையிலும் வரும். அராகத்திற்கும் தனிச்சொல்லிற்கும் இடையிலும் வரும்.

இவ்அம்போதரங்கம் பேரெண். அளவெண், இடையெண். சிற்றெண் என்னும் நான்கு உறுப்புக்களை உடையது. இவை நாற்சீர் கொண்ட ஈரடியால் இரண்டு (பேரெண்). நாற்சீர் அடியால் நான்கு

முச்சீரடியால் எட்டு(இடையெண்). இருசீரடியா பதினாறு (சிற்றெண்) என நிற்கும். அம்போதரங்க அடிகளில் காய்ச்சீர்களும் இயற்சீர்களும் விரவி வரும். அசையடி, பிரிந்திசைக் குறள், சொற்சீரடி, எண் என்பன அம்போதரங்கத்தின் வேறு பெயர்களாகும்.

**ஒத்தாழிசைக் கலிப்பா**

**1. நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா**

முதலில் ஒரு தரவு வரும். பின் ஒரு பொருள்மேல் மூன்றடுக்கிய தாழிசை வரும். அதன் பின் தனிச்சொல், சுரிதகம் என்னும் துணை உறுப்புக்கள் வரும். இவ்வரிசைப்பட்ட நின்று இறுதியில் வரும் சுரிதகம் ஆசிரியமாகவோ வெண்பாவாகவோ அமையும். இவ்வாறு வருவது சிறந்த இசையை உடைய ஒத்தாழிசைக் கலிப்பா ஆகும்.

**2. அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா**

நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பாவிற்குக் கூறப்பட்ட உறுப்புக்கள் நான்கு. அவற்றுள் தாழிசைக்கும் தனிச்சொல்லுக்கும் இடையில் அம்போதரங்கம் என்னும் உறுப்பு அமைந்து தரவு, தாழிசை, அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகம் என வரிசையுற நிற்பது இவ்வகையாகும்.

**3.வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா**

மேற்கூறப்பட்ட ஐந்து உறுப்புக்களோடு அராகம் என்னும் உறுப்பைப் பெற்று ஆறு உறுப்பால் அமைவது வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பாவாகும். இதில் தரவு, தாழிசை என்னும் முதன்மை உறுப்புக்களை அடுத்து அராகம் இடம்பெறும். தரவு. தாழிசை, அராகம், அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகம் என வரிசைப்பட அமைவது வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பாவாகும்.

**வெண்கலிப்பா**

கலிப்பாவின் உறுப்புக்களுள் தரவாகிய முதன்மை உறுப்பினை மட்டும் கொண்டு அமைவது வெண்கலிப்பா ஆகும். இது 1. வெண்கலிப்பா 2. கலிவெண்பா என இரண்டாகக் கூறப்பெறும். கலித்தளை பொருந்தித் துள்ளலோசை தழுவி ஈற்றடி முச்சீரால் வருவது வெண்கலிப்பா ஆகும். வெண்சீர் வெண்டளையும் இயற்சீர் வெண்டளையும் பொருந்திச் செப்பலோசை தழுவி ஈற்றடி முச்சீரால் அமைவது கலிவெண்பா ஆகும். இவ்வாறன்றிவெண்கலிப்பாவின் வேறுபெயரே கலிவெண்பா எனவும் கூறுவர். கலித்தளைகளை மிகுதியாகக் கொண்டு அமைவது வெண்கலிப்பா. வெண்டளைகள் மிகுதியாகப் பொருந்தப் பலவடிகளைக் கொண்டு நடப்பது கலிவெண்பா.

**கொச்சகக் கலிப்பா**

தரவு முதலான உறுப்புக்களுள் சிலவற்றைப் பெறுதல்' அவ்வுறுப்புக்கள் முறை மாறியும் மிகுந்தும் குறைந்தும் வருதல் என்னும் தன்மை கொண்டது கொச்சகக் கலிப்பாவாகும். சிறிதும் பெரிதுமாய்ப் பலவாக மடித்து உடுத்தும் ஆடையின் உறுப்பினைக் கொச்சகம் என்று கூறுவர். அவ்வுடை உறுப்புப் போன்று அமைவதால் கொச்சகக் கலிப்பா என்பது காரணப் பெயராகும். தேமா, புளிமா, கருவிளங்கனி, கூவிளங்கனி எனக் கலிப்பாவிற்கு ஆகாதென நீக்கப்பட்ட சீர்கள் இக்கலிப்பா வகையுள் இடம்பெறுவதால் கொச்சை (சிறப்பில்லாதது) எனப்பெயர் பெற்றது. இது ஐந்து வகைகளைக் கொண்டது.

**1.தரவு கொச்சகக் கலிப்பா**

கலிப்பாவின் முதல் உறுப்பாகிய தரவு மட்டும் வருவது தரவு கொச்சகக் கலிப்பா ஆகும். அத்தரவோடு தனிச்சொல், சுரிதகம் என்னும் உறுப்புக்களைக் கொண்டு அமைவதும் உண்டு.

**2.தரவிணைக் கொச்சகக் கலிப்பா**

இரண்டு தரவினைப் பெற்று இடையில் தனிச்சொல்லைப் பெற்று இறுதியில் சுரிதகத்தால் முடிக்கப்பெறுவது தரவிணைக் கொச்சகக் கலிப்பா ஆகும்.

**3. சில்தாழிசைக் கொச்சகக் கலிப்பா**

நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பாவைப்போல் தரவு முதலாகிய நான்கு உறுப்புக்களைப் பெற்று வருவது இவ் வகையாகும். ஆயினும் தாழிசைக்கு இடை இடையே தனிச்சொல்லைப் பெற்று வருவதே இதன் சிறப்பிலக்கணம் ஆகும்.

**4. பல்தாழிசைக் கொச்சகக் கலிப்பா**

சில்தாழிசைக் கொச்சகக் கலிப்பாவைப் போல அமைந்து மூன்றுக்கு மேற்பட்ட தாழிசைகளைப் பெற்று வருவது பல்தாழிசைக் கொச்சகக் கலிப்பா ஆகும்.

**5. மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா**

தரவு முதல் சுரிதகம் ஈறாகக் கூறப்பட்ட உறுப்புக்கள் நிற்கும் முறையிலிருந்து மாறியும் கலந்தும் குறைந்தும் மிகுந்தும் வருவது மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா ஆகும். வெண்பாவோடும் ஆசிரியத்தோடும் மயங்கி வருவதாலும் மயங்கிசை ஆயிற்று என்பர்

**கலிப்பாவின் இனங்கள்**

கலிப்பா 1. கலித்தாழிசை 2. கலித்துறை 3.கலி விருத்தம் என்னும் மூன்று இனங்களை உடையது.

**1. கலித்தாழிசை**

இரண்டும் இரண்டுக்கு மேற்பட்ட அடிகளைப் பெற்றும் ஈற்றடி மிகுந்து மற்றைய அடிகள் ஒத்தும் ஒவ்வாமலும் அமையும். இதுவே கலித்தாழிசை ஆகும். இது தனித்து வருதலினும் ஒரு பொருளின் மேல் மூன்றடுக்கி வருவதே சிறப்புடையதாகும்.

**2.கலித்துறை**

ஐஞ்சீரடியாகிய நெடிலடி நான்கு பெற்று நடப்பது கலித்துறை ஆகும். இதனைக் கலிநிலைத்துறை என்றும் கூறுவர். இக்கலித்துறை எழுத்து எண்ணிப் பாடுங்கால் கட்டளைக் கலித்துறை எனப் பெயர் பெறும். யாப்பருங்கலக் காரிகையாகிய இந்நூலில் இடம்பெற்ற பாடல்கள் அனைத்தும் கட்டளைக் கலித்துறை என்பதை மீண்டும் நினைவிற் கொள்க.

**3. கலி விருத்தம்**

கலிப்பாவிற்குரிய துள்ளல் ஓசையின்றி நான்கு சீர்களைக் கொண்ட அளவடி நான்கால் அமைவது கலிவிருத்தம் ஆகும். விருத்தங்களில் கலிவிருத்தம் சிறப்புடையதாகக் கருதப்படுகிறது. கலிப்பாவின் வகைகள், இனங்கள் பற்றிய கருத்துக்களை ஆசிரியர் நான்கு காரிகைகளில் (30-34) எடுத்துரைக்கிறார்.

**நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா - அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா**

**30.** **தரவொன்று தாழிசை மூன்று தனிச்சொற் சுரிதகமாய்**

**நிரலொன்றி னேரிசை யொத்தா ழிசைக்கலி நீர்த்திரைபோல்**

**மரபொன்று நேரடி முச்சீர் குறண்டு வேமடுப்பின்**

**அரவொன்று மல்குல.·. தம்போ தரங்கவொத் தாழிசையே.**

பாம்பினது படத்தை ஒத்த அரையினை உடைய பெண்ணே! 1. ஒரு தரவு, மூன்று தாழிசை, தனிச்சொல், கரிதகம் எனக் கூறிய இவ்வரிசைப்பட அமைவது நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பாவாகும் 3. நீர் அலையைப் போன்ற மரபினதாய் நாற்சீர், முச்சீர். இருசீர் அடிகளாய்ப் பெருகிச் சுருங்கும் அம்போதரங்க உறுப்பை இடையில் பெற்றுத் தரவு, தாழிசை, அம்போதரங்கம்.

தனிச்சொல், சுரிதகம் என்னும். வரிசை முறையில் அமைவது அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா ஆகும்.

துள்ளல் ஓசைத்தாய், நேரீற்று இயற்சீரும் நிரைநடுவாகிய வஞ்சி உரிச்சீரும் வாராது நிரை முதலாகிய வெண்பா உரிச்சீர் மிக்கு, நேரடித்தாய்க் கலித்தளையும் அயல்தளையும் தட்டுத் தரவு, தாழிசை என்னும் முதல் உறுப்பும் அராகம், அம்போதரங்கம், தனிச்சொல், கரிதகம் என்னும் துணை உறுப்பும் உடைத்தாய். ஒத்தாழிசைக்கலி, வெண்கலி, கொச்சகக் கலி என்னும் வேறுபாட்டால் கிடந்த கலிப்பாக்களை உறுப்பினானும் ஓசையானும் பொருளானும் பெயர் வேறுபாடு உணர்த்துவான் எடுத்துக்கொண்டார்.

அவற்றுள், இக்காரிகை நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பாவும், அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பாவும் ஆமாறு உணர்த்துதல்.

**நேரிசை ஒத்தாழிசைக்கலிப்பா**

**"அருள்எனும் இலராய்ப் பொருள்வயிற் பிரிவோர்**

**பன்னெடுங் காலமும் வாழியர்**

**பொன்னெடுந் தேரோடும் தானையிற் பொலிந்தே."**

இது சுரிதகம்.

வாளை ஒத்த நீண்ட கண்களிலிருந்து நீர்வழியவும் உடல்நிறம் மாறுபடவும் தோள் மெலியவும் மார்பு பசலை பூக்கவும் தலைவியர் துன்பமடையும்படி பொருளுக்காகப் பிரிந்து செல்லத் துணிவார்களோ? தலைவியின் அழகு நலம் கெட்டுப் பசலை தோன்றும் படியாகப் பிரிந்து அச்சம் தருகின்ற தெய்வ மகளிர் இயங்கும் சொல்லுதற்கரிய நீண்ட பாலைநிலத்தைக் கடந்து செல்வாரோ பெருமைக்குரியவர். நாணங்கொண்ட தலைவியின் அழகுநலம் கெடும்படியாகப் பிரிந்து தொலைவில் உள்ளதாய்க் கடந்து செல்வதற்கு அரிய கொடிய பாலைநிலத்தைத் தாண்டி நடப்பரோ நயமில்லாதவர். தனிமைத்துயரால் அழகு கெட்டு வருந்தும்படி பிரிந்து மலைகள் நிறைந்த வெம்மையான சீரற்றக் காட்டுவழியைக் கடந்து செல்வாரோ பொருள் இல்லாதவர்.

**அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா**

**"நலங்கிளர் திருமணியும் நன்பொன்னும் குயின்று அழகார்**

**இலங்கு எயிற்று அழல்அரிமான் எருத்தம்சே ரணையின்மேல்**

**இருபுடையும் இயக்கரசர் இணைக்கவரி எடுத்தசைப்ப**

**விரிதாமம் துயல்வருஉம் வெண்குடைமூன் றுடன்நிழற்ற**

**வண்டரற்ற நாற்காதம் வகைமாண உயர்ந்தோங்கும்**

**தண்தளிர்ப்பூம் பிண்டிக்கீழ்த் தகைபெறவீற் றிருந்தனையே."**

என்னும் அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பாவினுள் எட்டும். பதினாறும் என்று சொல்லப்பட்ட அம்போதரங்கம் குறையாதே வந்தவாறு யாப்பருங்கல விருத்தியுள் கண்டுகொள்க.

**வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா, வெண்கலிப்பா**

31. **அசையடி முன்ன ரராகம்வந் தெல்லா வறுப்புமுண்டேல்**

**வசையறு வண்ணக வொத்தா ழிசைக்கலி வான்றளைதட்**

**டிசைதன தாகியும் வெண்பா வியைந்துமின் பான்மொழியாய்**

**விசையறு சிந்தடி யாலிறு மாய்விடின் வெண்கலியே.**

பால் போன்று இனிய மொழியினை உடையவளே! 1.அசையடி என்று கூறப்பெறும் அம்போதரங்க உறுப்பிற்கு முன் அராக உறுப்பு நின்று தரவு, தாழிசை, அராகம், அம்போதரங்கம் தனிச்சொல், சுரிதகம் என்னும் முறைவைப்பில் அமைவது குற்றம் தீர்ந்த வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா ஆகும் 2.பெருமைக்குரிய கலித்தளை பொருந்தித் துள்ளல் ஓசையுடையதாய் வெண்டளை பொருந்தி முடுக்குதல் குறைந்த மூன்று சீர்களைக் கொண்ட சிந்தடியால் முடிவது வெண்கலிப்பா என்றும் கலிவெண்பா என்றும் பெயர் பெறும்.

**வெண்கலிப்பா**

**"வாளார்ந்த மழைத்தடங்கண் வனமுலைமேல் வம்பனுங்கக்**

**கோளார்ந்த பூண்ஆகம் குழைபுரளக் கோட்டெருத்தின்**

**மாலைதாழ் கூந்தலார் வரன்முறையான் வந்தேத்தச்**

**சோலைதாழ் பிண்டிக்கீழ்ச் சூழ்ந்தவர்தம் சொல்முறையான்**

**மனையறமும் துறவறமும் மண்ணவர்க்கும் விண்ணவர்க்கும்**

**வினையறுக்கும் வகைதெரிந்து வீடொடுகட் டிவைஉரைத்த**

**தொன்மைசால் மிகுகுணத்தெம் றவரசைத் தொழதேத்த**

**நன்மைசால் வீடுஎய்து மாறு."**

வாள்போன்று ஒளிவீசும் குளிர்ச்சி பொருந்திய அகன்ற கண்களை உடைய பெண்களின் அழகிய மார்பின்மீது கச்சு அசைந்தது.உடலில் அணிகலன்கள் ஒளிவீசின. காதில் அணிந்த குழைகள் தோளில் புரண்டன. மாலை அணிந்த கூந்தல் பின்புறம் தாழ்ந்திருந்தது. அப்பெண்கள் உரிய முறையில் வந்து அருகதேவனை வணங்கிப் போற்றினர். அவ்விறைவன் சோலைகளில் அமைந்த அசோக மரத்தின் கீழ்ச் சூழ்ந்திருக்கும் மக்களுக்கு இல்லறத்தையும் விண்ணவருக்குத் துறவறத்தையும் அருளினான். அவற்றின் வழி வினையை நீங்கி மக்கள் தம் பிறப்பை ஒழிக்கும் வகையை ஆராய்ந்து கூறி வீடுபேற்றையும் (முத்தி). உலக வாழ்வையும் (பெத்தம்) காட்டுபவன் அவ்வருகதேவன். அவன் தொன்றுதொட்டே நற்குணம் மிகுந்த துறவரசாய் விளங்குகின்றான். அவனைத் தொழுதால் நன்மை பொருந்திய வீட்டுலகை அடையலாம். இது தன்தளையானும், துள்ளல் ஓசையானும் வந்தமையான் வெண்கலிப்பா.

**வெண்கலிப்பா**

**"ஏர்மலர் நறுங்கோதை எருத்தலைப்ப இறைஞ்சித்தண்**

**வார்மலர்த் தடங்கண்ணார் வலைப்பட்டு வருந்தியஎன்**

**தார்வரை அகன்மார்பன் தனிமையை அறியும் கொல்!**

**சீர்மலி கொடியிடை சிறந்து."**

அழகிய மணம் கமழும் மாலை பிடரியை வருத்தப் பெண்களின் மலர் போன்ற பெரிய கண்ணாகிய வலையில் பட்டுத் துன்பமுற்றான் தலைவன். அவன் மாலையணிந்த மலைபோன்ற அகன்ற மார்பினை உடையவன். அத்தலைவனின் தனிமைத் துயரைச் சிறப்பு மிகுந்த கொடி போன்ற இடை மேம்பட்டு அறிதலும் உண்டோ?

### கொச்சகக் கலிப்பாவின் வகை

32. **தரவே தரவிணை தாழிசை தாமுஞ் சிலபலவாய்**

**மரபே யியன்று மயங்கியும் வந்தன வாங்கமைத்தோள்**

**அரவே ரகலல்கு லம்பேர் நெடுங்கண்வம் பேறுகொங்கைக்**

**குரவே கமழ்குழ லாய்கொண்ட வான்பெயர் கொச்சகமே.**

வளைந்த மூங்கிலைப் போன்ற தோள்' பாம்பின் படம் போல் அகன்ற அரை' அம்பினை ஒத்த நீண்ட கண்' கச்சு அணிந்த மார்பு' மணம் கமழும் கூந்தல் ஆகியவற்றைக் கொண்டவளே! 1.தரவு ஒன்று மட்டும் வருவது (தரவு கொச்சகக் கலிப்பா) 2.தரவு இணைந்து வருவது (தரவிணைக் கொச்சகக் கலிப்பா) 3. தாழிசை சில வருவது (சி.்.றாழிசைக் கொச்சகக் கலிப்பா) 4.தாழிசை பல வருவது (ப.்.றாழிசைக் கொச்சகக் கலிப்பா 5.கலிப்பாவிற்குக் கூறப்பட்ட உறுப்புக்கள் முன்பின்னாகக் கலந்து வருவது (மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா) ஆகிய ஐந்தும் கொச்சகம் என்னும் சிறப்புப் பெயர் பெறும்.

### கலித்தாழிசை, கலித்துறை,கலிவிருத்தம்

33. **அடிவரை யின்றி யளவொத்து மந்தடி நீண்டிசைப்பிற்**

**கடிதலில் லாக்கலித் தாழிசை யாகுங் கலித்துறையே**

**நெடிலடி நான்கா நிகழ்வது நேரடி யீரிரண்டாய்**

**விடினது வாகும் விருத்தந் திருத்தகு மெல்லியலே.**

திருமகளை ஒத்த அழகு பொருந்திய பெண்ணே! 1.இத்துணைத்து என்னும் வரையறை இல்லாமல் அடிகளைப் பெற்று ஒத்த அளவினை உடையதாய் ஈற்றடி மட்டும் சீர்களை மிகுதியாகப் பெற்று நீண்டு ஒலிக்கும். அது நீக்குதல் இல்லாத் தன்மை கொண்ட கலித்தாழிசை ஆகும் 2. நெடிலடியாகிய ஐஞ்சீரடிகள் நான்காய் அளவொத்து வருவது கலித்துறை ஆகும் 3. நாற்சீர் கொண்ட நேரடியாகிய அளவடி இரண்டுஇரண்டாய் (நான்காய்) வருவது கலி விருத்தம் ஆகும்.

கலித்தாழிசையும் கலித்துறையும் கலிவிருத்தமும் ஆமாறு உணர்த்துதல்.

**கலித்தாழிசை (அடுக்கி வருதல்)**

**"கொய்தினை காத்தும் குளவி அடுக்கத்துளம்**

**பொய்தற் சிறுகுடி வாரல்நீ ஐய! நலம்வேண்டில்."**

**"ஆய்தினை காத்தும் அருவி அடுக்கத்துளம்**

**மாசில் சிறுகுடி வாரல் ஐய நலம்வேண்டில்."**

**"மென்தினை காத்தும் மிகுபூங் கமழ்சோலைக்**

**குன்றச் சிறுகுடி வாரல்நீ ஐய! நலம்வேண்டில்."**

தலைவியின் அழகு நலத்தைக் காக்க விரும்புகின்ற தலைவனே! அறுவடைக்குரிய தினையைக் காக்கின்ற எங்கள் ஊர் காட்டு மல்லிகை பூக்கின்ற மலைச்சாரலில் அமைந்துள்ளது. பொய் கூறாததாய் விளங்கும் தலைவியின் அவ்வூர்க்கு நீ வர வேண்டாம்.

முற்றி விளைந்த தினையைக் காக்கின்ற எங்கள் ஊர் அருவிகள் பாயும் மலைப்பக்கத்தில் அமைந்துள்ளது. குற்றமில்லாததாய் விளங்கும் தலைவியின் அவ்வூருக்கு நீ வராதே.

மென்மையான தினையைக் காக்கின்ற எங்கள் ஊர் பூக்கள் மிகுதியாய் மணம் கமழ்கின்ற மலைப்பக்கத்தில் குன்றுகளால் சூழப்பட்டது. அவ்வூருக்கு நீ வரவேண்டாம்.ஸ

**கலித்துறை**

**"யானும் தோழியும் ஆயமும் ஆடும் துறைநண்ணித்**

**தானும் தேரும் பாகனும் வந்துஎன் நலன்உண்டான்**

**தேனும் பாலும் போல்வன சொல்லிப் பிரிவானேல்**

**கானும் புள்ளும் கைதையும் எல்லாம் கரிஅன்றே."**

நானும் என் உயிர்த்தோழியும் எம்முடைய தோழியர் கூட்டத்தினரும் விளையாடிய நீர்த்துறைக்கண் வந்தான் தலைவன். அவன் பாகன் செலுத்தத் தேரின் மீதேறி வந்து என்னுடைய நலத்தை நுகர்ந்தான். பின்னர்த் தேனைப் போலவும் பாலைப் போலவும் இனிமையுடைய சொற்களைக் கூறி என்னைப் பிரிந்தான். அதற்குக் கடற்கரையும் அங்கிருந்த பறவைகளும் தாழை மரங்களும் கரி(சாட்சி)களாம்.

## வஞ்சிப்பா

### (வஞ்சிப்பாவைப் பற்றிய கருத்துக்கள்)

நான்குவகைப் பாக்களுள் இறுதியாக இடம்பெறுவது வஞ்சிப்பா. இது குறளடி, சிந்தடி அல்லாத பிற அடிகளை எல்லாம் ஏற்றுக் கொள்ளாமல் பொய்த்து (வஞ்சித்து) வருவதால் வஞ்சிப்பா எனப் பெயர் பெற்றது. ஒன்றை உடன்பட்டு நிற்கும் வஞ்சிக் கொடியைப் போன்றது' பெண்ணைப் போல அழகும் எழுச்சியும் கொண்டது. இவற்றால் வஞ்சிப்பா என்பது காரணப்பெயராகும். இது வேளாளர் பா எனவும் குறிக்கப்படுகிறது.

**பொதுவிலக்கணம்**

1. தூங்கலோசையைப் பெற்று வரும் 2. குறளடி, சிந்தடி என்னும் அடிகளை மட்டுமே பொருந்தி வரும் 3. கருவிளங்கனி, புளிமாங்கனி ஆகிய தனிச் சீர்களை மிகுதியாகப் பெற்று நடக்கும் 4.தன்தளை தழுவியும் பிறதளை மயங்கியும் வரும். தனிச்சொல், சுரிதகம் என்னும் உறுப்புக்களைப் பெற்று வரும். இவையே வஞ்சிப்பாவின் பொதுவிலக்கணம் ஆகும்.

**வகைகள்**

வஞ்சிப்பாவானது

1. குறளடி வஞ்சிப்பா
2. சிந்தடி வஞ்சிப்பா என

இருவகையினை உடையது. இருசீர்களைக் கொண்ட குறளடியைப் பெற்றுத் தனிச்சொல்லும் சுரிதகமும் பெற்று வருவது குறளடி வஞ்சிப்பாவாகும். மூன்று சீர்களைக் கொண்ட சிந்தடிகளைக் கொண்டு தனிச்சொல்லும் சுரிதகமும் பெற்றுவருவது சிந்தடி வஞ்சிப்பாவாகும். இவ்விரு வஞ்சிப்பாக்களும் ஆசிரியச் சுரிதகத்தைக் கொண்டே முற்றுப்பெறும்.

**வஞ்சிப்பாவின் இனங்கள்**

வஞ்சிப்பாவிற்கு 1. வஞ்சித்தாழிசை 2. வஞ்சித்துறை 3.வஞ்சி விருத்தம் என்பன மூன்றும் இனங்களாகும்.

**1. வஞ்சித்தாழிசை**

இருசீர்களைக் கொண்ட குறளடி நான்கினைப் பெற்று ஒருபொருள்மேல் மூன்றாய் அடுக்கி வருவது வஞ்சித் தாழிசையாகும்.

**2. வஞ்சித்துறை**

இருசீர்களைக் கொண்ட குறளடி நான்காய் ஒரு பொருள் பற்றி ஒரு பாடலாய்த் தனித்து வருவது வஞ்சித்துறை ஆகும்.

**3. வஞ்சி விருத்தம்**

மூன்று சீர்களைக் கொண்ட சிந்தடி நான்காய் வருவது வஞ்சி விருத்தமாகும்.

## வஞ்சித்தாழிசை, துறை, விருத்தம் - வஞ்சிப்பாவின் ஈறும்

**34. குறளடி நான்கின மூன்றொரு தாழிசை கோதில்வஞ்சித்**

**துறையொரு வாது தனிவரு மாய்விடிற் சிந்தடிநான்**

**கறைதரு காலை யமுதே விருத்தந் தனிச்சொல்வந்து**

**மறைதலில் வாரத்தி னாலிறும் வஞ்சிவஞ் சிக்கொடியே.**

அமுதத்தை ஒத்தவளே! வஞ்சிக்கொடி போன்றவளே! 1.குறளடிகள் நான்கினைக் கொண்டதாய் ஒருபொருள்மேல் மூன்று அடுக்கி அமைவது வஞ்சித் தாழிசையாகும் 2. குற்றமில்லாத வஞ்சித் துறையாவது நீங்காமல் ஒரு பொருள்மேல் ஒன்றாக வருவதாகும் 3.மூன்று சீர்களைக் கொண்ட சிந்தடியை நான்காக அமைத்துச் சந்தம் கொள்ளும் இடத்து அது வஞ்சி விருத்தம் ஆகும் 4. குறளடிகளையோ சிந்தடிகளையோ தொடர்ந்து தனிச்சொல்லைப் பெற்று வெளிப்பட்டுத் தோன்றுகின்ற சுரிதகத்தால் முடிவது வஞ்சிப்பாவாகும்.

வஞ்சித்தாழிசையும், வஞ்சித்துறையும், வஞ்சி விருத்தமும், வஞ்சிப்பாவிற்கு ஈறாமாறும் உணர்த்துதல்.

குறளடி நான்கின மூன்றொரு தாழிசை கோதில் என்பது' இருசீர் அடி நான்காய் மூன்று செய்யுள் ஒரு பொருள்மேல் அடுக்கி வருவன வஞ்சித்தாழிசையாம்.

### வஞ்சித்துறை

**"மைசிறந்தன மணிவரை**

**கைசிறந்தன காந்தளும்**

**பொய்சிறந்தனர் காதலர்**

**மெய்சிறந்திலர் விளங்கிழாய்."**

ஒளிவீசும் அணிகலன்களை அணிந்த தோழியே! பிரிந்து சென்ற தலைவன் திரும்பி வருகிறேன் என்று சொன்ன இக்கார்காலத்தின் தொடக்கத்தில் கார்முகிலைப் பெற்று நீலமணி போல் மலை இருண்டு காணப்படுகிறது. கை விரல்களை ஒப்பக் காந்தளும் தம் மலர்களைப் பூக்கச் செய்துள்ளது. இக்காலத்தில் வராத தலைவர் உண்மை கூறும் தன்மையற்றவராய்ப் பொய் பேசுவதில் சிறந்தவர்.

### வஞ்சி விருத்தம்

**“சோலை ஆர்ந்த சுரத்திடைக்**

**காலை யார்கழல் ஆர்ப்யவும்**

**மாலை மார்பன் வருமாயின்**

**நீல உண்கண் இவள் வாழுமே.”**

தலைவியைப் பிரிந்து சென்ற தலைவன் கால்களில் கட்டிய வீரக்கழல் ஒலிக்க மாலை அணிந்த மார்பனாய் வருதல் வேண்டும். அவ்வாறு சோலைகள் பொருந்திய காட்டிடை வந்தால் குவளை மலர் போன்ற மையினை அணிந்த கண்ணுடைய இப்பெண் உயிர் வாழ்வாள். இது சிந்தடி நான்காய் வந்தமையான் வஞ்சிவிருத்தம்.

**வஞ்சிப்பாவுக்கு ஈறு**

“பூந்தாமரை” (காரிகை. 9.மேற்கோள்) என்னும் குறளடி வஞ்சிப்பா நாளும் என்னும் தனிச்சொல் பெற்று ஆசிரியச் சுரிதகத்தால் இற்றதெனக் கொள்க.

**வஞ்சிப்பா**

**“கொடிவாலன குருநிறத்தன குறுந்தாளன**

**வடிவாளெயிற்(று) அழலுளையன வள்ளுகிரன**

**பணைஎருத்தின் இணைஅரிமான் அணைஏந்தத்**

**துணையில்லாத் துறவுநெறிக்கு இறைவனாகி**

**எயில்நடுவண் இனிதிருந்து எல்லோர்க்கும்**

**பயில்படுவினை பத்தியலாற் செப்பினோன்**

**புணையெனத்**

**திருவுறு திருந்தடி திசைதொழ**

**வெருவறு நாற்கதி வீடுநனி எளிதே.”**

நீண்ட வாலையும் நல்ல நிறத்தையும் குறுகிய கால்களையும் வளைந்த அரிவாளை ஒத்த பல்லையும் நெருப்புப் போன்ற பிடரி மயிரையும் வலிமை கொண்ட நகத்தையும் உடையவை இரு அரிமா. அவை தங்களுடைய பருத்த பிடரியின்கண் இருக்கையை ஏந்தியிருந்தன. அதில் ஒப்பில்லாத துறவுநெறியைக் காட்டும் இறைவனாகிய அருகதேவன் அமர்ந்திருந்தான்.

பொன்னால் ஆகிய மதிலால் சூழப்பட்டு அதன் நடுவில் அமைந்த அரியணையில் இருந்து விருப்பு வெறுப்பு இன்றி அனைவருக்கும் வினை ஒழியும் தன்மையை அன்பு கொண்டு கூறினான் அவ்அருகதேவன். அவ்இறைவனின் திருவடிகளைப் பிறவிப் பெருங்கடல் நீந்தும் புணையாகக் கொண்டு அவன் இருக்கும் திசைகளைத் தொழுதால் நான்காகிய பிறப்புச் சுழற்சியில் வீழ்த்தும் வினையிலிருந்து நீங்கி வீட்டுலகை அடையலாம்.

## மருட்பா

### (மருட்பாவைப் பற்றிய கருத்துக்கள்)

ஆசிரியப்பாவும் வெண்பாவும் கலந்து ஒரு பாவாக அமைவதால் மருட்பா எனப் பெயர் பெற்றது. மருள் என்னும் சொல்லுக்கு மயக்கம் என்பது பொருளாகும். கங்கை, யமுனை ஆறுகளின் சங்கமம் போலவும் சங்கரன், நாராயணன் ஆகிய இருவரும் சேர்ந்த கூட்டுடல் போலவும் வெண்பா, ஆசிரியம் ஆகிய இரண்டும் இணைந்த அமைப்பே மருட்பா ஆகும். இவ்விரு பாக்களும் அளவொத்து வருவன சமநிலை மருட்பா என்றும் ஒவ்வாமல் வருவன வியநிலை மருட்பா என்றும் பெயர் பெறும். மருட்பாவின் முன்பகுதி வெண்பாவின் இலக்கணத்தையும் பின்பகுதி ஆசிரியப்பாவின் இலக்கணத்தையும் கொண்டு அமைவனவாம்.

**வகைகள்**

தனக்கெனத் தனித்ததோர் இலக்கணத்தைப் பெறாமல் வருவது மருட்பா. இது புறநிலை வாழ்த்து, கைக்கிளை, வாயுறை வாழ்த்து, செவியறிவுறூஉ என்னும் நான்கு பொருள் மேலும் பாடப்பெறும். அவற்றின் இயல்பால் 1. புறநிலை வாழ்த்து மருட்பா 2.கைக்கிளை மருட்பா 3.வாயுறை வாழ்த்து மருட்பா 4.செவியறிவுறூஉ மருட்பா என நான்கு வகைப்படும்.

**1. புறநிலை வாழ்த்து மருட்பா**

தெய்வத்தைப் புறத்தே நிறுத்தி வாழ்த்துவது புறநிலை வாழ்த்தாகும். நீ வணங்குகின்ற தெய்வம் உனக்குச் சிறு இடையூறும் வராமல் பாதுகாப்பதாக! நீ பெறுகின்ற பழியற்ற செல்வம் உன் தலைமுறையினருக்கும் பொருந்தும்படி சிறந்து வாழ்க என வாழ்த்தும் தன்மையில் அமைவதே புறநிலை வாழ்த்து மருட்பாவாகும்.

**2. கைக்கிளை மருட்பா**

ஒத்த தலைவனும் தலைவியும் இயற்கைப் புணர்ச்சிக்கு முன் முதன்முதலாக ஒருவரை மற்றொருவர் காண்பர். அவ்வாறு காணும் போது அவ்விருவரில் ஒருவரிடத்துத் தோன்றும் வேட்கையே கைக்கிளை ஆகும். இதனை ஒருதலைக் காமம் என்று கூறுவர். ஆண் வேட்கை கொள்வது ஆண்பாற் கைக்கிளை. பெண் வேட்கை கொள்வது பெண்பாற் கைக்கிளை ஆகும். இப்பொருண்மையினைப் புலப்படுத்துவது கைக்கிளை மருட்பா ஆகும். இது கேட்பதற்கு ஆள் இல்லாத இடத்துப் புலம்புகின்ற சொற்களைக் கொண்டு அமையும்.

**3.வாயுறை வாழ்த்து மருட்பா**

ஒருவருக்குச் சொல்லாகிய மருந்தால் நன்மை தோன்றப்பாடுவது வாயுறை வாழ்த்து ஆகும். வாய் - வாய்மொழி (சொல்) உறை - மருந்து' சொல்மருந்து. வேம்பையும் கடுக்காயையும் சேர்த்துச் செய்த மருந்து உண்ணும் போது கசப்பும் துவர்ப்பும் உடையதாய்த் தோன்றும். பின்னர் அது உடலுக்கு நன்மை பயக்கும். அதுபோலச் சொல்லப்படும் சொல் செவிக்குக் கைப்பினும் உயிர்க்கு உறுதி அளித்து மறுமைக்குப் பாதுகாப்பு அளிக்கும்படி கூறுவதே வாயுறை வாழ்த்து மருட்பாவாகும்.

**4. செவியறிவுறூஉ மருட்பா**

செவிக்கு அறிவுறுத்துவதால் இது செவியறிவுறூஉ எனப்பெயர் பெற்றது. இதனைத் தொல்காப்பியர் செவியுறை எனக் கூறுகிறார். செவியுறை - செவிமருந்து. ஒருவன் தன்னைத் தானே புகழ்ந்து கொள்ளாமல் சான்றோர்க்குக் கட்டுப்பட்டு அடங்கி நடத்தலைக் கடமையாகக் கொள்ள வேண்டும். இத்தன்மை புலப்படக் கூறுவதே செவியறிவுறூஉ மருட்பா ஆகும்.

**மருட்பாவும் அதன் வகைகளும்**

35. **பண்பார் புறநிலை பாங்குடைக் கைக்கிளை வாயுறைவாழ்த்**

**தொண்பாச் செவியறி வென்றிப் பொருண்மிசை யூனமில்லா**

**வெண்பா முதல்வந் தகவல்பின் னாக விளையுமென்றால்**

**வண்பான் மொழிமட வாய்மருட் பாவெனும் வையகமே.**

வளம் செறிந்த பால் போன்ற இனிய மொழியினைப் பேசும் இளம் பெண்ணே! 1. பண்பு நிறைந்த புறநிலை 2. இணக்கத்தை உடைய கைக்கிளை 3. வாயுறை வாழ்த்து 4. ஒழுங்குடைய செவியறிவுறூஉ என்னும் நான்கு பொருள்கள் மேலும் குற்றம் இல்லாத வெண்பா முதலாகவும் ஆசிரியப்பா பின்னாகவும் நடக்கும் என்றால் அதனை மருட்பா என உலகோர் கூறுவர்.

மருட்பா ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று. இதன் பொழிப்பு.புறநிலை வாழ்த்தும், கைக்கிளையும், வாயுறை வாழ்த்தும், செவியறிவுறூஉவும் என்னும் நான்கு பொருள் மேலும் வெண்பா முதலாக ஆசிரியம் ஈறாக வரும் எனின் அதனை மருட்பா என்று வழங்குவர் புலவர்.

**வாழ்த்து மருட்பா**

**"தென்றல் இடைபோழ்ந்து தேனார் நறுமுல்லை**

**முன்றில் முகைவிரியும் முத்தநீர்த் தண்கோ;ர்க்**

**குன்றமர்ந்த கொல்லேற்றான் நிற்காப்ப என்றும்**

**தீரா நண்பில் தேவர்**

**சீர்சால் செல்வமொடு பொலிமதி சிறந்தே."**

முற்றத்தில் வீசிய காற்று அங்கிருந்த தேன் பொருந்திய மணம் கமழும் முல்லை அரும்புகளைப் பிளந்து மலரச் செய்தது. அத்தகு திருக்கோ;ரில் குளிர்ச்சி பொருந்திய

நீர்த்துறைகளில் முத்துக்கள் மிகுந்து காணப்படும். அவ்வூரின் குன்றின்மீது அமர்ந்திருப்பவர் சிவபெருமான். கொல்லும் எருதினைத் தன் ஊர்தியாகக் கொண்ட அப்பெருமான் நின்னைத் துன்பமின்றிப் பாதுகாப்பாராக! நீயோ அச்சிவபெருமானின் நண்பனாகிய குபேரனின் செல்வத்தைப் பெற்று எழுச்சியுடன் சிறந்து விளங்குவாயாக.

இது வழிபடு தெய்வம் நிற்புறம் காப்பப் பழிதீர் செல்வமோடு ஒரு காலைக்கு ஒருகால் சிறந்து பொலிக என்றமையால் புறநிலை வாழ்த்து மருட்பா.

**வாயுறை வாழ்த்து மருட்பா**

**“பலமுறையும் ஓம்பப் படுவன கேண்மின்**

**சொலல்முறைக்கண் தோன்றிச் சுடர்மணித்தேர் ஊர்ந்து**

**நிலமுறையின் ஆண்ட நிகரில்லார் மாட்டும்**

**சிலமுறை அல்லது செல்வங்கள் நில்லா**

**இலங்கும் எறிபடையும் ஆற்றலும் அன்பும்**

**கலந்ததம் கல்வியும் தோற்றமும் ஏனைப்**

**பொலன்செய் புனைகலனோடு இவ்ஆற னாலும்**

**விலங்கிவரும் கூற்றை விலக்கலும் ஆகா**

**அனைத்தாதல் நீயிரும் காண்டிர் - நினைத்தக்க**

**கூறிய வெம்மொழி பிழையாது**

**தேறிநீர் ஒழுகில் சென்றுபயன் தருமே.”**

பல விதங்களிலும் பாதுகாக்கப்பட வேண்டுவனவற்றைக் கூறுகிறேன். கேட்பாயாக! பலரும் பாராட்டும்படி மணிகள் ஒலிக்கும் தேரின்மீது ஏறி இந்நிலவுலகத்தை ஆள்பவர் நிகரில்லாத பேரரசர். அவர்களிடத்தும் சில முறையே அல்லாமல் தொடர்ந்து செல்வங்கள் நிலைத்து நில்லா. ஒளிவீசும்படியாக அமைந்த படை. பேராற்றல், அன்பு, நம்மோடு கலந்திருக்கும் கல்வி,தோற்றம். பொன்னால் செய்யப்பட்ட அழகிய அணிகலன்கள் ஆகிய இவ்ஆறனையும் கொண்டு உயிரைக் கவர வருகின்ற கூற்றுவனைத் தடுக்க முடியாது. அத்தன்மையை நீயும் பட்டறிவால் கண்டுள்ளாய். ஆராயத் தக்கதாய்க் கூறிய இம்மெய்ப்பொருளை ஏற்று அதன் வழி நின்று செயல்பட்டால் அது உனக்கு நிலையாக வாழும் மேலுலகப் பயனைத் தரும்.

இது மெய்ப்பொருள் சொன்னமையால் வாயுறை வாழ்த்து மருட்பா.

**செவியறிவுறூஉ மருட்பா**

**“பல்யானை மன்னர் முருங்க அமருழந்து**

**கொல்யானைத் தேரோடும் கோட்டந்து-நல்ல**

**தலையாலம் கானம் பொலியத் - தொலையாப்**

**படுகளம் பாடுபுக் காற்றிப் பகைஞர்**

**அடுகளம் வேட்டோன் மருக அடுதிறல்**
**ஆளி நிமிர்தோள் பெருவழுதி எஞ்ஞான்றும்**
**ஈரம் உடையையாய்! என்வாய்ச்சொல் கேட்டி!**
**உரிய உழவரை நெஞ்சனுங்கக் கொண்டு**
**வருகால் உழவர்க்கு வேளாண்மை செய்யல்**
**மழவர் இழைக்கும் வரைக்கால் நிதியிட்டம்**
**காட்டும் அமைச்சரை ஆற்றத் தெளியல்**
**அமைத்த அரும்பொருள் ஆறன்றி வெளவல்**
**இனத்தைப் பெரும்பொருள் ஆசையி னால்சென்று**
**மன்ற மறுக அகழாதி என்றும்**
**மறப்புறம் ஆக மதுரையார் ஓம்பும்**
**அறப்புறம் ஆசைப் படேற்க - அறத்தால்**
**அவையார் கொடுநாத் திருத்தி நவையாக**
**நட்டார் குழிசி சிதையாதி - ஒட்டார்**
**செவியுதைக்கும் தீய கடுஞ்சொல் - கவிஉடைத்தாய்க்**
**கற்றார்க்கு இனனாகிக் கல்லார்க் கடிந்தொழுகிச்**
**செற்றார்ச் செறுத்துநின் சேர்ந்தாரை ஆக்குதி!**
**அற்றம் அறிந்த அறிவினாய்! - மற்றும்**
**இவைஇவை ஈயாது ஒழுகின் நிலையாப்**
**பொருகடல் ஆடை நிலமகள்**
**ஒருகுடை நீழல் துஞ்சுவள் மன்னே.”**

பல யானைகளை உடைய பகை மன்னர்களும் அழியும் படியாகப் போரில் வென்றாய். அவர்தம் கொல்லும் யானைகளையும் தேர்களையும் கவர்ந்து கொண்டாய் நல்ல தலையாலங்கானம் என்னும் ஊர் பொலிவுபெற நீங்காத போர்க்களத்தில் புகுந்து பகைவரைக் கொன்று களவேள்வி செய்த பாண்டியனின் வழித் தோன்றலே ! ஆள்வதால் நிமிர்ந்த தோளை உடைய பெருவழுதியே! என்றும் அருள் உள்ளம் கொண்டவனே! என் வாய்ச்சொல்லைக் கேட்பாயாக. உழவரின் நெஞ்சம் வாடாதவகையில் அவர்களுக்கு உதவி செய்வாயாக. மக்களைத் துன்பப்படுத்திச் செல்வத்தைப் பெருக்க வேண்டும் எனக் கூறும் அமைச்சரை முழுவதுமாக நம்ப வேண்டாம்.

வகுக்கப்பட்ட ஆறில் ஒன்றுக்கு அதிகமாக மக்களிடம் இருந்து வரிப் பொருள்களைப் பெறவேண்டாம். பெரும்பொருளுக்கு ஆசைப்பட்டு நெருங்கிய சுற்றத்தினரை ஆராய்ந்து பார்க்காதே! தடுமாற்றம் கொண்டு, மதுரையார் காத்து வருகின்ற அறத்திற்கு மாறாகச் செயல்படாதே! அறமன்றத்தார் வழிநின்று கொடியோரின் சொற்களைத் திருத்துவாயாக. குற்றம் உண்டாகும்படி நண்பர்களின் சோற்று மிடாவைச் சிதைத்து விடாதே.

காதுகளை மூடிக்கொள்ளும் அளவிற்குப் பகைவர் கூறும் தீய கொடுஞ்சொற்களைக் கவிதையாக ஏற்றுக்கொள். கற்றவர்களை உறவாக்கிக்கொள். கல்லாதவரை விட்டு விலகி நில். பகைவரை முற்றிலுமாக அழித்துவிடு. உன்னோடு துணைநிற்பவரை உயர்த்து. சூழ்நிலையை அறிந்தவனே! இவ்வாறு கூறப்பட்டவற்றைக் கெடாமல் பின்பற்று. அப்படிச் செய்தால் ஒலிக்கின்ற கடலை ஆடையாக உடுத்த நிலமகள் உன்னுடைய குடைநீழலில் வருத்தமின்றி நிலையாக உறக்கம் கொள்வாள்.

**செய்யுளியல் முதல் நினைப்புக் காரிகை**

**வெண்பா வளம்பட வீரடி யொன்றுட னேரிசையும்**

**கண்பானல் போன்மயி லந்தமின் மூன்றுங் கடைதருக்கி**

**நண்பார் தரவொன் றசைதர வேயடி யோடுகுறள்**

**பண்பார் புறநிலை செய்யு ளியலென்ப பாவலரே.**

கருநீல மலர்போன்ற கண்ணையும் மயில் போன்ற சாயலையும் உடையவளே! 1.வெண்பா 2.வளம்பட 3.ஈரடி 4. ஒன்றும் 5.நேரிசை 6.அந்தமில் 7. மூன்றடி 8.கடைஅயல் 9.தருக்கியல் 10.தரவுஒன்று 11.அசையடி 12.தரவே 13. அடிவரை 14.குறளடி 15.பண்பார் புறநிலை ஆகிய பதினைந்து காரிகைகளும் செய்யுளியலுக்கு உரியன என்று புலவர்களால் பாகுபடுத்தப் பட்டவை ஆகும்.

# அணி இலக்கணம்

ஒரு மொழியின் அழகை விளக்குவது, அதிலுள்ள அணி இலக்கணம் ஆகும். அணிகளின் இலக்கணத்தினை விளக்குவது அணி இலக்கணம் எனப்படும். அணி என்பதன் பொருள் விளக்கம், சிறப்பு, தொன்மை, வகைகள், பயன் ஆகியவற்றைப் பற்றி இங்குக் காணலாம்.

**அணி - பொருள் விளக்கம்**

அணி - அழகு. உடலின் அழகை நகைகள் ஆகிய அணிகள் அழகுபடுத்துகின்றன. செய்யுளின் கருத்தை அணிகள் அழகுபடுத்துகின்றன. சொல்லாலும் பொருளாலும் அழகுபட எடுத்துரைப்பது அணி இலக்கண இயல்பாகும். வடமொழியில் அணியை, அலங்காரம் என்று கூறுவர்.

**அணி இலக்கணச் சிறப்பு**

எழுத்து, சொல், பொருள், யாப்பு ஆகிய நான்கு இலக்கணங்களும் மொழிக்கு மொழி வேறுபடுவன ' மாறுபடுவன. ஆனால் அணி இலக்கணம் எல்லா மொழிகளுக்கும் பொதுவானது ஆகும். எடுத்துக்கூற விரும்பும் கருத்தை எந்த நடையில் எந்தெந்த முறையில் எடுத்துரைப்பது எனக் கூறுவது எல்லா மொழிகளிலும் உள்ள நூல்களுக்கும் பொதுவானதாக உள்ளது. இது, பிற இலக்கணங்களுக்கு இல்லாத தனிச் சிறப்பு ஆகும்.

**அணி இலக்கணத் தொன்மை**

தொல்காப்பிய 'உவமவியல்', அணி இலக்கணம் பற்றி எடுத்துரைப்பது என்பதை முன்னமே கண்டோம். அந்த இயலிலுள்ள நூற்பாக்களில்,

**விரவியும் வரூஉம் மரபின என்ப (நூற்பா-2)**

**உவமப் போலி ஐந்துஎன மொழிப (நூற்பா-24)**

என வருவனவற்றுள் என்ப, மொழிப என்னும் சொல்லாட்சிகள் காணப்படுகின்றன. என்ப, மொழிப என்னும் இச்சொற்களுக்கு "ஆசிரியர்கள் இவ்வாறு கூறுவார்கள்" என்பது பொருள். தொல்காப்பியத்தின் காலம் கி.மு. 3 அல்லது 4ஆம் நூற்றாண்டு என ஆராய்ச்சியாளர் கூறுவர். எனவே அதற்கும் முற்பட்ட காலத்தில் அணி இலக்கணக் கருத்துகள் தமிழில் இருந்துள்ளமையை அறியமுடிகிறது.

**அணி இலக்கணப் பகுதிகள்**

அணி இலக்கணம் பொதுவணியியல், பொருளணியியல், சொல்லணியியல் என மூன்று பகுதிகளாகத் தண்டியலங்கார நூலில் காட்டப் பெற்றுள்ளது.

**பொதுவணியியல்**

செய்யுளில் இடம்பெறும் அணிகள் குறித்த பொதுவான இலக்கணத்தைக் கொண்டது இப்பகுதியாகும்.

**பொருளணியியல்**

தன்மை அணி, உவமை அணி, உருவக அணி முதலான பொருள் அடிப்படையிலான பல அணிகள் இப்பகுதியில் எடுத்துக் காட்டுடன் விவரிக்கப் பெறும்.

**சொல்லணியியல்**

மடக்கணி, சித்திரக்கவி என்னும் சொல் அடிப்படையிலான இரண்டு அணிகளை விவரிக்கும் பகுதி இது.

**அணி இலக்கணப் பயன்**

அணி இலக்கணம் பொருள் புலப்படுத்துதலும், அழகுபடுத்துதலும் ஆகிய பயன்பாடுகளை உடையது.

**பொருள் புலப்பாடு**

அணிகளுக்கெல்லாம் தாயாகவும், முதன்மையாகவும் விளங்குவது உவமையணி ஆகும். தெரியாத பொருள்களைப் பற்றித் தெரிவிக்க, தெரிந்த பொருள்களை உவமையாகக் கூறுவது மரபு. காட்டுவழியில் சென்ற ஒருவன் முதன்முறையாக ஒரு காட்டுப் பசுவைக் காண்கிறான். காட்டுப் பசு என்பது நாட்டிலுள்ள பசுவைப் போன்ற தோற்றத்தை உடையது எனக் கேள்விப்பட்டிருந்ததால், இது காட்டுப்பசு என அறிந்து கொள்கிறான். இதனை, ஆப்போலும் ஆமா(ஆ - பசு' ஆமா - காட்டுப்பசு) என இளம்பூரணர் தொல்காப்பிய உரையில் சான்று காட்டி விளக்குகின்றார்.

**அழகுபடுத்தல்**

தெரிந்த பொருள்களைப் பற்றி எடுத்துரைக்கும்போதும் நயம்பட உரைக்கும் நிலையில், உவமை பிற்காலத்தில் பயன்படலானது. தாமரை போன்றது பெண்களின் முகம் என வரும் உவமைப் பகுதியில் அழகுபடுத்தலே அமைகின்றது. பிற அணிகளும், இவ்வாறு அழகுபடுத்தி உரைத்தற்கு ஏற்பட்டனவே ஆகும். பெரிய மாளிகைக்கு அதன் முன்புறத்தில் அமையும் ஓவியமும், பெரிய நகரத்திற்கு அதன் பகுதியில் அமையும் கோபுரமும் அழகு சேர்ப்பதுபோல் செய்யுளுக்கு அழகு சேர்ப்பது அணி ஆகும்.

**அணி இலக்கண வளர்ச்சி**

தொல்காப்பியத்தில் இடம்பெறும் உவமவியல் கருத்துகளே, பிற்கால அணி இலக்கண நூல்களுக்கு மூலமாக அமைந்தன. வடமொழியில் காணலாகும் அணி இலக்கணச் சிந்தனைகளின் தாக்கம், பிற்கால அணி இலக்கண நூல்களில் பெருமளவில் உள்ளது.

**தொல்காப்பிய உவமவியல் செய்திகள்**

தொல்காப்பிய உவமவியலில் உவமையின் தோற்றம், நிலைக்களன், உவம உருபுகள், உள்ளுறை உவமை, மரபு, புறனடை ஆகியன பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன.

**உவமையின் தோற்றம்**

வினை(செயல்), பயன், மெய் (வடிவம்), உரு (நிறம்) ஆகிய நான்கின் அடிப்படையில் இருபொருள்களுக்கிடையில் உவமை அமையும். இவற்றுள் ஒருகூறு மட்டும் அல்லாமல், இரண்டு, மூன்று கூறுகளும் பொருந்தி வரலாம். உவமையாகக் காட்டப்படுவது பொருளை விட உயர்ந்ததாகவே அமையும்.

**தொல்காப்பியமும் தண்டியலங்காரமும்**

பிற்கால அணி இலக்கண நூல்களுள் சிறந்து விளங்குவது தண்டியலங்காரம் ஆகும். இந்நூல் தொல்காப்பிய உவமவியல் கருத்துகளையும் வடமொழித் தாக்கத்தையும் கொண்டு அமைந்துள்ளது.

**அணிகளும் வடமொழித்தாக்கமும்**

இறையனார் களவியலுரை என்னும் நூலில், பாண்டிய மன்னன் ஒருவன் எழுத்தும் சொல்லும் யாப்பும் அறிந்த புலவர்கள் கிடைக்கப்பெற்ற நிலையில், பொருள் இலக்கணம் அறிந்தார் கிடைக்கப் பெறவில்லையே என ஏங்கிச் சிவபெருமானிடம் முறையிட, அவர் இறையனாராகத் தோன்றி அகப்பொருள் இலக்கணத்தை அறுபது நூற்பாக்களில் இயற்றியருளினார் என்னும் செய்தி காணப்படுகிறது. இப் பகுதியில் அணி இலக்கணம் கிடைக்கப் பெற்றது என்றோ, கிடைக்கப் பெறவில்லை என்றோ எவ்விதக் குறிப்பும் இல்லை. எனவே அணி இலக்கணம் என்ற ஒன்று தனித்து அக்காலத்தில் இல்லை என அறிஞர்கள் கூறுவர்.

**அணி இலக்கணமும் ஐந்திலக்கணமும்**

ஐந்திலக்கணம் கூறும் இலக்கண நூல்களுள் காலத்தால் முந்தியதாகத் திகழ்வது வீரசோழியம். எனினும் இதற்கு முற்பட்ட காலத்திலேயே அணிஇலக்கண வளர்ச்சி சிறப்புற் றிருந்தமையைத் திவாகர நிகண்டினால் அறிகிறோம். திவாகர நிகண்டில் பல்பொருள் கூட்டத்து ஒருபெயர்த் தொகுதியில் 28 பொருள் அணிகளும் 21 சொல்லணிகளும் சுட்டப் பட்டுள்ளன எனவே, தொல் காப்பியத்துக்கும் வீர சோழியத்துக்கும் இடைப்பட்ட காலத்தில் அணி இலக்கணம் கூறும் நூல்கள் இருந்துள்ளமையை அறிய முடிகிறது. எனினும் அவை கிடைக்கப் பெறாத நிலையில் கிடைத்துள்ளனவாகிய வீரசோழியம், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம், அறுவகை இலக்கணம் ஆகியன பற்றிக் காண்போம்.

**வீரசோழியம்**

தமிழில் கிடைக்கப் பெறும் ஐந்திலக்கண நூல்களுள் முதன்மையானது இது. வீரராசேந்திர சோழனின் வேண்டுகோளுக்கு இணங்கப் புத்தமித்திரரால் பாடப்பெற்றது. இந்நூலில் அணி இலக்கணம் அலங்காரப் படலம் எனக் குறிக்கப்படுகிறது. தொல்காப்பியத்தையும் காவியாதரிசம் என்னும் வடமொழி நூலையும் அடியொற்றி எழுதப்பட்டது. இந்நூல், 35 பொருள் அணிகளையும், 2 சொல்லணிகளையும் பற்றிக் குறிப்பிடுகிறது. காலம் கி.பி. 11ஆம் நூற்றாண்டு ஆகும்.

**இலக்கண விளக்கம்**

திருவாரூர் வைத்தியநாத தேசிகரால் இயற்றப்பட்டது இந்நூல். இதன் கருத்துகள் பெரும்பாலும் முன்னூல்களில் கூறப்பட்டவற்றின் தொகுப்பாகவே உள்ளன. தொல்காப்பியக் கருத்துகள் கால மாற்றத்திற்கேற்ப, சுருக்கியும் பெருக்கியும் கூறப்படுதலின் இதனைக் குட்டித்

தொல்காப்பியம் எனவும் கூறுவர். அணி இலக்கணப் பகுதி பெரும்பாலும் தண்டியலங்காரத்தை ஒட்டியதாகும், இதில் 35 பொருள் அணிகளும், 2 சொல்லணிகளும் இடம் பெற்றுள்ளன. காலம் கி.பி. 17ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியாகும்.

**தொன்னூல் விளக்கம்**

இத்தாலி நாட்டைச் சேர்ந்த வீரமாமுனிவர் என்பவரால் இயற்றப்பட்டது இது. ஐந்திலக்கணக் கருத்துகளை விரித்துரைக்கும் நூல் இது. இதில் 30 பொருள்அணிகளும், 30 சொல்லணிகளும். கூறப்பெற்றுள்ளன இந்நூல், தற்குறிப்பேற்ற அணியை 'ஊகாஞ்சித அணி' எனச் சுட்டுகின்றது. விடையில் வினா அணி, வினாவில் விடை அணி போன்ற புதிய அணிகளும் இடம் பெற்றுள்ளன. காலம் கி.பி. 18ஆம் நூற்றாண்டு ஆகும்.

**முத்து வீரியம்**

உறையூர் முத்துவீர உபாத்தியாயரால் இயற்றப்பட்டது இந்நூல். இதில் பொருளணிகள் 58, சொல்லணிகள் 14 என அணிகள் இடம் பெற்றுள்ளன. காலம் கி.பி. 19ஆம் நூற்றாண்டு ஆகும்.

**சுவாமிநாதம்**

சாமிகவிராசர் என்னும் புலவரால் இயற்றப்பட்டது இது. இதில் அணி இலக்கணப் பகுதி, அணி அதிகாரம் எனப் பெயர் பெற்றுள்ளது. இப்பகுதி, பொருள் அணி மரபு, சொல்லணிமரபு, அமைதிமரபு என மூன்று பிரிவுகளைக் கொண்டுள்ளது. இந்நூலில் 31 பொருள் அணிகளும், 23 சொல்லணிகளும் இடம் பெற்றுள்ளன. அமைதி மரபுப் பகுதி, சில வழுவமைதிகளை எடுத்துரைக்கின்றது. இதன் காலம் கி.பி. 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியாகும்.

**அறுவகை இலக்கணம்**

திருவாமாத்தூர் 'வண்ணச்சரபம்' தண்டபாணி சுவாமிகள் இயற்றிய நூல் இது. இந்நூலின் ஐந்தாவது இயலாக அணி இலக்கணம் விளங்குகிறது. இப்பகுதி உவமை, உடைமை, கற்பனை, நிகழ்ச்சி, ஆக்கம் ஆகிய ஐவகைப் பாகுபாடுகளைக் கொண்டுள்ளது. காலம் கி.பி. 19ஆம் நூற்றாண்டு ஆகும்.

இவ்வாறு அணி இலக்கணத்தைத் தம் ஒரு கூறாகக் கொண்டு திகழும் இலக்கண நூல்கள், சிறப்புற அணிகளைப் பற்றி எடுத்துரைக்கின்றன.

**தனித்த அணி இலக்கண நூல்கள்**

தண்டியலங்காரம், மாறனலங்காரம் எனத் தமிழின் நீர்மை (இயல்பு)க்கேற்ப அமைந்தனவும், சந்திராலோகம், குவலயானந்தம், தொனி விளக்கு, சித்திரக்கவிகள் என வடமொழி நூல்களின் மொழி பெயர்ப்பாக அமைந்தனவும் இவ்வகையில் அடங்கும்.

**தண்டியலங்காரம்**

வீரசோழியத்தை அடுத்துத் தோன்றியது இந்நூல். தண்டி என்பவரால் இயற்றப்பட்டது இது. தொல்காப்பியத்தையும், வடமொழி நூலாகிய காவியாதரிசத்தையும் அடியொற்றி எழுதப்பட்டது.

இதில் 35 பொருள் அணிகளும், 2 சொல்லணி களும் இடம் பெற்றுள்ளன. காலம் கி.பி. 12ஆம் நூற்றாண்டு ஆகும்.

தொல்காப்பியத்தை அடுத்து அணி இலக்கணம் பயிலப் பெரிதும் பயன்படுவது தண்டியலங்காரம் ஆகும். இது தொல்காப்பியத்தையும், வடமொழி காவியா தரிசத்தையும் அடியொற்றி எழுதப்பட்டது. இக்கருத்தை,

**பன்னிரு புலவரில் முன்னவன் பகர்ந்த**

**தொல்காப் பியநெறி பல்காப் பியத்தும்**

**அணிபெறும் இலக்கணம் அரிதினில் தெரிந்து**

**வடநூல் வழிமுறை மரபினில் வழாது**

எனவரும் தண்டியலங்காரச் சிறப்புப் பாயிரத்தால் அறியலாம்.

**தண்டியலங்காரம் - நூலமைப்பு**

இந்நூல், பொதுவணியியல், பொருள்அணியியல், சொல்லணியியல் என மூன்று பிரிவுகளை உடையது. இவற்றுள் பொதுவணியியல் செய்யுள் வகைகளையும், செய்யுள் நெறிகளையும் பற்றி விவரிக்கின்றது. பொருள்அணியியல் தன்மை அணி முதல் பாவிக அணி வரையில் உள்ள முப்பத்தைந்து பொருள் அணிகளை விளக்குகின்றது. சொல்லணியியல் மடக்கு அணி, சித்திரக்கவி என்னும் இரண்டு சொல்லணிகளைப் பற்றி எடுத்துரைக்கிறது. வழு, மலைவு பற்றிய கருத்துகளும் சொல்லணியியலில் இடம் பெற்றுள்ளன.

நூலாசிரியர் தண்டி அவர்கள், அணிகளின் வகைகள் அனைத்திற்கும் எடுத்துக்காட்டு வெண்பாக்களை எழுதி யுள்ளமையும் குறிப்பிடத்தக்க ஒன்று ஆகும். இதிலுள்ள நூற்பாக்கள் ‘நூற்பா’ யாப்பில் அமைந்தவையாகும்.

தண்டியலங்காரமும் அணியியலும்

தண்டியலங்காரம் அணியின் இலக்கணத்தை எடுத்துரைப்பதால் அணியதிகாரம் எனவும் கூறப்படும். அணியியல் என்னும் பெயரும் தண்டியலங்காரத்துக்கு உரியது என்பர். சிலப்பதிகார அடியார்க்கு நல்லார் உரையில் காணலாகும் நூற்பாக்களும், மாறனலங்கார உரையில் காணலாகும் நூற்பாக்களும் ‘அணியியல்’ நூலுக்குரியவை என்பர். அந்நூற்பாக்கள் தண்டியலங்காரத்திலும் இடம் பெறுதலின் அணியியல் என்பது தண்டியலங்காரத்தின் வேறு பெயரே எனக் குறிப்பிடுவர். ஆனால், யாப்பருங்கல விருத்தி உரையும், நேமிநாத விருத்தி உரையும் சுட்டும் ‘அணியியல்’ நூற்பாக்கள், தண்டியலங்காரத்தில் இடம் பெறவில்லை. ஆதலால், அணியியல் என்பது தண்டியலங்காரத்திற்கு முற்பட்ட நூலாக இருந்திருக்கலாம் என்றும் அதிலுள்ளவற்றைத் தண்டியலங்கார ஆசிரியர் மேற்கோளாகக் கொண்டிருக்கலாம் என்றும் அறிஞர் குறிப்பிடுவர். எனவே, அணியியல் என்பது, தண்டியலங்காரத்தி லிருந்து வேறான நூல், அதற்கு முற்பட்ட நூல் என்பது தெரிய வருகிறது.

தண்டியலங்கார நூலாசிரியர்

வடமொழியில் உள்ள அணி இலக்கண நூலாகிய காவியாதரிசம் என்பதன் ஆசிரியர் தண்டி என்பவராவார். தமிழிலுள்ள தண்டியலங்கார அணி இலக்கண நூலின் ஆசிரியர் பெயரும் தண்டி என்றே காணப்படுகிறது. இப்பெயர், இவரது இயற்பெயரா? வடமொழி ஆசிரியர் மீது கொண்ட அன்பால் தாமே வைத்துக் கொண்ட புனைபெயரா? அறிஞர்கள் பாராட்டி வடநூல் தண்டிக்கு இணையானவர் எனப் போற்றிய புகழ்ப் பெயரா? என வரையறுத்துக் கூற இயலவில்லை.

தண்டியலங்காரச் சிறப்புப்பாயிரம், இவரைக் கவிச் சக்கரவர்த்தி கம்பரின் பெயரன் ’ அம்பிகாபதியின் மகன்’ வடமொழி, தென் மொழிகளில் வல்லவர்’ சோழநாட்டினர் எனச் சுட்டுகின்றது. நூலில் காணப்படும் சோழன் பெயரில் அமைந்த எடுத்துக்காட்டு வெண்பாக்களான 45 பாடல்களில் அனபாயன் என்னும் பெயரைக் குறிப்பிடுபவை 6 பாடல்களாகும். அனபாயன் என்னும் பெயர், கி.பி. 12 ஆம் நூற்றாண்டில் அரசுபுரிந்த இரண்டாம் குலோத்துங்க சோழனைக் குறிப்பதாகும். இந்நூல் அனபாயன் அவையில் அரங்கேற்றப் பட்டது எனவும் சிறப்புப்பாயிரம் குறிப்பிடுகின்றது.

தண்டியலங்காரத் தனிச்சிறப்புகள்

‘தண்டியாசிரியர், நூற்பாவும் செய்து, உரையும் உதாரணமும் எழுதினார்’ என்று கி.பி. 18 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பிரயோகவிவேகம் என்னும் நூல் குறிப்பிடுகின்றது. தண்டியலங்கார உதாரணப் பாடல்கள் இலக்கணக் கருத்துக்குப் பொருத்தமானவை ’ எளிமையானவை.

காப்பிய இலக்கணம் பற்றிப் பல அரிய செய்திகளை இது எடுத்துரைக்கின்றது.

கி.பி. 19 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தி.ஈ.சீனிவாச ராகவாச்சாரியார், தண்டியலங்காரக் கருத்துகளைத் தொகுத்து, ‘தண்டியலங்கார சாரம்’ என்னும் வசன உரைநடை நூலை எழுதியுள்ளார்.

இவை இந்நூலின் தனிச்சிறப்புகளாகும்.

**உவமையணி**

ஒருவன் தான் கூறக் கருதிய பொருளை அதனோடு ஒப்புமை உடைய மற்றொரு பொருளோடு இயைபுபடுத்திக் கூறுவது உவமை அணியாகும். கண்ட பொருளைக் கொண்டு காணாத பொருளினை விளங்கக் காட்டுவதும் உவமை அணியாகவே கருதப்படும். இவ்உவமையே பிற அணிகளுக்கு எல்லாம் தாயாக விளங்கும் தன்மை கொண்டது. தமிழில் மிகப்பழமை வாய்ந்த நூலாக விளங்குவது தொல்காப்பியம். அந்நூலின் பொருளதிகாரத்துள் உவமை அணியின் இயல்புகள் “உவமவியல்“ என்னும் தனி இயலில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. இதிலிருந்து உவமையின் தொன்மையையும் இருவகை வழக்கிலும் அது பெற்ற ஆளுமையையும் உணர முடிகிறது. இவ்உவமை அணியின் சிறப்பை,

**உவமை என்னும் தவல்அருங் கூத்தி**

**பல்வகைக் கோலம் பாங்குறப் புனைந்து**

**காப்பிய அரங்கினுள் கவினுறத் தோன்றி**

**யாப்பறி புலவர் இதயம்**

நீப்பறு மகிழ்ச்சி பூப்பநடிக் கும்மே. என்னும் சித்திர மீமாஞ்சையின் தமிழ்மொழி பெயர்ப்பு எடுத்துரைக்கிறது.

உவமை அணியின் இயல்பை விரிவாகப் பேசும் தண்டியலங்காரம் அவ்உவமையினை 24 வகையாகப் பாகுபடுத்திக் கூறுகிறது.

**உவமை அணியின் பொது இலக்கணம்**

**பண்பும் தொழிலும் பயனும் என்(று) இவற்றின்**

**ஒன்றும் பலவும் பொருளொ (டு) பொருள்புணர்த்(து)**

**ஒப்புமை தோள்ச் செப்புவ(து) உவமை.**

1.பண்பு 2. தொழில் 3.பயன் ஆகியவற்றின் காரணமாக உவமை பிறக்கும். அது ஒன்றாகவோ பலவாகவோ வருகின்ற பொருளோடு பொருந்தும்படி வைக்கப்படும். இத்தன்மையால் கேட்போர் உணர்ந்து கொள்ளுமாறு ஒப்புமைப் புலப்படும் வண்ணம் எடுத்துரைப்பதே உவமை என்னும் அணியாகும்.

ஒன்றும் பலவும் பொருளோடு பொருள் புணர்த்தலாவது,

ஒரு பொருளுக்குப் பொருந்தும் ஒரு பொருளைக் கூறுதல்

ஒரு பொருளுக்குப் பொருந்தும் பல பொருளைக் கூறுதல்

பல பொருளுக்குப் பொருந்தும் பல பொருளைக் கூறுதல்

பல பொருளுக்குப் பொருந்தும் ஒரு பொருளைக் கூறுதல்

என நான்கு வகையாக அமைத்துப் பாடுவதாகும்.

**உவமையின் பகுதிகள்**

உவமை அணியானது 1.பொருள் 2.உவமை 3.பொதுத்தன்மை என்னும் மூன்று கூறுகளை உடையது. இணைத்துச் சொல்லப்படுகின்ற பொருள்களுள் ஒப்புமையை அறிவித்தற்குத் காரணமாய் இருக்கும் பொருள் உபமானம்' அப்பொருளால் உவமிக்கப்படும் பொருள் உபமேயம் என்று அழைக்கப்படும். உபமானத்தை "உவமை" எனவும் உபமேயத்தைப் "பொருள்" எனவும் குறிப்பிடுவர். இவ்விரு பொருள்களுள் ஒன்றற்கொன்று இருக்கும் சமநிலை "பொதுத்தன்மை" என்று கூறப்படும்.

தொல்காப்பியர் உவமைகளை வினை, பயன், மெய்(வடிவம்), உரு(நிறம்) என நான்காகப் பாகுபடுத்தினார், ஆனால் தண்டியாசிரியர் வடிவத்தையும் நிறத்தையும் பண்பினுள் அடக்கி மூன்றாகக் கொண்டார்.

**1. பண்பு உவமை**

பல பொருளுக்குரிய பொதுக்குணமாய் அமையாமல் ஒன்றற்குரிய சிறப்புக் குணமாய் அமைவது பண்பாகும். இதனைக் கூறி விளக்குவது பண்பு உவமையாகும். இப்பண்பில் வண்ணம், வடிவு, அளவு, சுவை போன்றவையும் பிறவும் அடங்கும்.

உவமை அணியின் இயல்பை விரிவாகப் பேசும் தண்டியலங்காரம் அவ்உவமையினை 24 வகையாகப் பாகுபடுத்திக் கூறுகிறது.

உவமை அணியின் பொது இலக்கணம் (3)

29.

பண்பும்1 தொழிலும் ? பயனும் என்(று) இவற்றின்

ஒன்றும் பலவும் பொருளொ (டு) பொருள்புணர்த்(து)

ஒப்புமை தோள்ச் செப்புவ(து) உவமை.

1.பண்பு 2. தொழில் 3.பயன் ஆகியவற்றின் காரணமாக உவமை பிறக்கும். அது ஒன்றாகவோ பலவாகவோ வருகின்ற பொருளோடு பொருந்தும்படி வைக்கப்படும். இத்தன்மையால் கேட்போர் உணர்ந்து கொள்ளுமாறு ஒப்புமைப் புலப்படும் வண்ணம் எடுத்துரைப்பதே உவமை என்னும் அணியாகும்.

ஒன்றும் பலவும் பொருளோடு பொருள் புணர்த்தலாவது,

ஒரு பொருளுக்குப் பொருந்தும் ஒரு பொருளைக் கூறுதல்

ஒரு பொருளுக்குப் பொருந்தும் பல பொருளைக் கூறுதல்

பல பொருளுக்குப் பொருந்தும் பல பொருளைக் கூறுதல்

பல பொருளுக்குப் பொருந்தும் ஒரு பொருளைக் கூறுதல்

என நான்கு வகையாக அமைத்துப் பாடுவதாகும்.)

**உவமையின் பகுதிகள்**

உவமை அணியானது 1.பொருள் 2.உவமை 3.பொதுத்தன்மை என்னும் மூன்று கூறுகளை உடையது. இணைத்துச் சொல்லப்படுகின்ற பொருள்களுள் ஒப்புமையை அறிவித்தற்குத் காரணமாய் இருக்கும் பொருள் உபமானம்' அப்பொருளால் உவமிக்கப்படும் பொருள் உபமேயம் என்று அழைக்கப்படும். உபமானத்தை "உவமை" எனவும் உபமேயத்தைப் "பொருள்" எனவும் குறிப்பிடுவர். இவ்விரு பொருள்களுள் ஒன்றற்கொன்று இருக்கும் சமநிலை "பொதுத்தன்மை" என்று கூறப்படும்.

தொல்காப்பியர் உவமைகளை வினை, பயன், மெய்(வடிவம்), உரு(நிறம்) என நான்காகப் பாகுபடுத்தினார், ஆனால் தண்டியாசிரியர் வடிவத்தையும் நிறத்தையும் பண்பினுள் அடக்கி மூன்றாகக் கொண்டார்.

**1. பண்பு உவமை**

பல பொருளுக்குரிய பொதுக்குணமாய் அமையாமல் ஒன்றற்குரிய சிறப்புக் குணமாய் அமைவது பண்பாகும். இதனைக் கூறி விளக்குவது பண்பு உவமையாகும். இப்பண்பில் வண்ணம், வடிவு, அளவு, சுவை போன்றவையும் பிறவும் அடங்கும்.

**எகா**

**பவளத் தன்ன மேனி - நிற உவமை**

**(பவளத்தைப் போன்ற நிறம் அமைந்த உடல்)**

**தொழில் உவமை**

ஒரு பொருளின் புடைபெயர்ச்சியாகிய தொழிலினை உவமையாக எடுத்துரைப்பது தொழில் உவமையாகும்.

**எகா**

**அரிமா அன்ன அணங்குடைத் துப்பின் திருமா வளவன். (பட்டினப்பாலை 298-299)**

பகைவர்க்கு அச்சத்தைத் தருகின்ற ஆண்சிங்கம் போன்ற திருமாவளவன்.

கண்டார்க்கு அச்சத்தைத் தரும் தொழில் பற்றிச் சிங்கம் கரிகாலனுக்கு உவமையாகக் காட்டப்பட்டது.

**எகா**

**களிற்றிரை தெரிஇய பார்வல் ஒதுக்கின்**

**ஒளித்(து)இயங்கு மரபின் வயப்புலி போல... காதலர் வர (அகம்-22)**

யானையாகிய இரையைத் தின்னத் தேடி வரும் புலி பதுங்கி வரும். அது போலத் தலைவியைக்கூட வந்த தலைவன் பிறர் அறியாதவண்ணம் மறைந்து வருவான்.

தலைவியை அடைய வரும் தலைவனுக்கு யானையை வேட்டையாடும் புலியின் தொழில் உவமையாக்கப்பட்டதால் தொழில் உவமையாயிற்று.

**பயன் உவமை**

ஒன்றால் விளையும் பயனை உவமையாக்கிக் காட்டுவது பயள் உவமையாகும்.

**மாரி யன்ன வண்கைத்**

**தேர்வேள் ஆயைக் காணிய சென்மே (புறம். 133)**

கைம்மாறு கருதாது உலகிற்கு மழையைத் தருகின்ற மேகத்தைப் போன்று எதிர்பாராமல் கொடுக்கின்ற தன்மை உடையவன் தேரை உடைய ஆய் அண்டிரன்

ஆய் அண்டிரனின் கொடையால் விளையும் பயனுக்கு மழையின் பயனை உவமையாக்கியதால் இது பயன் உவமைக்கு எடுத்துக்காட்டாயிற்று. உஉவமை கூறும் முறை

**ஒரு பொருளுக்கு ஒரு பொருள்**

**(எகா)** **செவ்வான் அன்ன மேனி (அகம். க.வா)**

சிவந்த வானத்தைப் போன்று நிறம் பொருந்தியது சிவபெருமானின் திருமேனி

இதில் சிவனாகிய ஒரு பொருளுக்குச் செவ்வானமாகிய ஒரு பொருள் உவமையாயிற்று.

**ஒரு பொருளுக்குப் பல பொருள்**

**எகா**

**அவ்வான்,**

**இலங்கு பிறை அன்ன விளங்குவால் வைஎயிற்று (அகம்.க.வா)**

வானத்தில் விளங்குகின்ற பிறைச்சந்திரனின் வெண்மையைப் போன்று சிவபெருமானின் பற்கள் ஒளி வீசின

இதில் ஒரு பொருளாக அமைந்த பிறை பலவாகிய பற்களுக்கு உவமையாயிற்று.

**பல பொருளுக்குப் பல பொருள்**

**(எகா)** **களிறுஎறி**

**சுறவினத் தன்ன வாளோர் மொய்ப்ப**

**மரீஇயோர் அறியாது மைந்துபட் டன்றே (புறம்.13)**

பகைவரை மோதுகின்ற சுறாமீன் கூட்டத்தைப் போன்று வாட்படை வீரர்கள் தன்னைச் சூழத் தன் மீது ஏறிய பாகரையும் அறியாது. மிகுந்த மதத்தைக் கொண்டது யானை.

இதில் பலவாகிய சுறாமீன்கள் பலராகிய வாள் வீரர்களுக்கு உவமையாயின.

**பல பொருளுக்கு ஒரு பொருள்**

**(எகா)** **பெரும்பெயர்க் கரிகாலன் முன்னிலைச் செல்லாப்**

**பீடின் மன்னர் போல**

**ஓடுவை மன்னால் வாடைநீ எமக்கே. (அகம்125)**

கரிகாற் சோழனின் முன்னே செல்லாத வலியற்ற அரசர் புறமுதுகிட்டு ஓடுமாறு போல வாடைக்காற்றே நீ என் தலைவன் வர ஓடுவாய்

இதில் பலராகிய மன்னர்களுக்கு ஒரு பொருளாகிய வாடைக் காற்று உவமையாயிற்று.

**உவமையின் வகைகள் (24)**

**அதுவே,**

**விரியே தொகையே இதர விதரம்**

**உரைபெறு சமுச்சயம் உண்மை மறுபொருள்**

**புகழ்தல் நிந்தை நியமம் அநியமம்**

**ஐயம் தெரிதரு தேற்றம் இன்சொல்**

**எய்திய விபரீதம் இயம்புதல் வேட்கை**

**பலபொருள் விகாரம் மோகம் அபூதம்**

**பலவயின் போலி ஒருவயின் போலி**

**கூடா உவமை பொதுநீங்(கு) உவமை**

**மாலை என்னும் பாலது ஆகும்.**

மேல் விளக்கப் பெற்ற உவமை யணி

1. விரிஉவமை
2. தொகை உவமை
3. இதர விதர உவமை
4. சமுச்சயஉவனம
5. உண்மை உவமை
6. மறுபொருள் உவமை
7. புகழ்தல் உவமை
8. நிந்தை உவமை
9. நியம உவமை
10. அநியம உவமை
11. ஐய உவமை
12. தெரிதருதேற்ற உவமை
13. இன்சொல் உவமை
14. விபரீத உவமை
15. இயம்புதல் வேட்கை உவமை
16. பலபொருள் உவமை
17. விகார உவமை
18. மோக உவமை
19. அபூத உவமை
20. பலவயின் போலி உவமை
21. ஒருவயின் போலி உவமை
22. கூடாஉவமை
23. பொதுநீங்கு உவமை
24. மாலை உவமை

என்னும் இருபத்து நான்கு வகைப்படும்

**விரிஉவமை**

பொருளுக்கும் உவமைக்கும் இடையில் பொதுத்தன்மை வெளிப்பட்டு நிற்பது. பண்பு முதலியன வெளிப்பட்டு நிற்பதும் விரிவுவமையே ஆகும்.

**(எகா)** **பால்போலும் இன்சொல் பவளம்போல் செந்துவர்வாய்**

**சேல்போல் பிறழும் திருநெடுங்கண் - மேலாம்**

**புயல்போல் கொடைக்கைப் புனல்நாடன் கொல்லி**

**அயல்போலும் வாழ்வ(து) அவர்**

சான்றோரால் பெருமை உடையதாகப் போற்றப்படுவது மழை. அதனைப் போன்று கைம்மாறு கருதாது வாரி வழங்கும் கையை உடையவன் நீர்நாட்டுத் தலைவனாகிய சோழன். அவனுக்கு உரிமை உடையது கொல்லி மலை. அதன் பக்கத்தைத் தன் வாழிடமாகக் கொண்டவள் ஒரு பெண். அவள் 1. பால் போன்ற இனிய சொற்களைப் பேசுபவள் 2. பவளம் போன்று சிவந்து விளங்குகின்ற வாயினை உடையவள் 3. நீரில் பிறழ்கின்ற சேல் மீனைப் போன்ற அழகிய நீண்ட கண்களை உடையவள். இப்பாடலில்

1. பால் போலும் இன்சொல் - என்பதில் இனிமை (பண்பு)
2. பவளம் போல் செந்துவர்வாய் - என்பதில் செம்மை (நிறப்பண்பு)
3. சேல்போல் பிறழும்... கண் - என்பதில் பிறழ்தல் (தொழில்)
4. புயல் போல் கொடைக்கை - என்பதில் கொடுத்தல் (பயன்)

என்னும் பொதுப்பண்புகள் வெளிப்பட்டு நின்றன. ஆகையால் இது விரிஉவமை ஆயிற்று.

**தொகை உவமை**

பண்பு, தொழில், பயன் ஆகிய தன்மைகள் மறைந்து (தொக்கு) நிற்பது தொகை உவமை ஆகும். அஃதாவது இன்ன தன்மை குறித்து உவமை கூறப்பட்டுள்ளது என்னும் பொதுத்தன்மை வெளிப்பட்டு வாராமல் மறைத்துக் கூறப்படுவதே தொகை உவமை ஆகும்.

**தாமரை வாண்முகத்துத் தண்தரளம் போல்முறுவல்**

**காமரு வேய்புரைதோள் காரிகையீர்! - தேமருவும்**

**பூங்குழலின் வாசப் பொறைசுமந்து நொந்ததோ**

**பாங்குழலும் தென்றல் பரிசு**

1. தாமரையைப் போன்ற ஒளியுடைய முகம் 2. குளிர்ந்த முத்தினைப் போன்ற புன்னகை 3. அழகு பொருந்திய மூங்கில் போன்ற தோள் ஆகிய தோற்றப் பொலிவுடைய பெண்களே! உங்களின் பக்கத்தில் தென்றல் காற்று வீசும். அக்காற்று உங்களுடைய தேன் பொருந்திய பூக்கள் நிறைந்த கூந்தலின்கண் உள்ள நறுமணமாகிய பாரத்தைத் தாங்கிச் செல்லும். அவ்வருத்தம் காரணமாகவோ அது மெல்லிய உருவத்தைப் பெற்றுள்ளது. இதனை எனக்குச் சொல்ல வேண்டும்.

தாமரை வாண்முகம்.

**3. இதர விதர உவமை**

பொருள் ஓரிடத்து உவமையாகவும் உவமை ஓரிடத்துப் பொருளாகவும் ஒரு தொடருக்குள்ளே இரண்டடிகளாய் அமையப்பாடுவது இதரவிதர உவமையாகும். (இதரவிதரம் ஒன்றற்கு ஒன்று.)

**(எகா)** **களிக்கும் கயல்போலும் நும்கண்'நும் கண்போல்**

**களிக்கும் கயலும் கனிவாய்த் - தளிர்க்கொடியீர்!**

**தாமரைபோல் மலரும் நும்முகம்' நும்முகம்போல்**

**தாமரையும் செவ்வி தரும்.**

கொவ்வைப் பழம் போன்ற சிவந்த இதழையும் தளிரோடு கூடிய கொடி போன்ற இடையையும் உடைய பெண்களே! செருக்கினை உடைய கயல்மீன்களைப் போன்ற தன்மையுடையவாய் உம்முடைய கண்கள் காணப்பட்டன. அக்கண்களைப் போலக் கயல்மீன்களும் செருக்கினை உடையனவாய்த் திகழ்கின்றன. மேலும் உங்களுடைய முகமோ தாமரை மலரைப் போல் மலர்ந்து காணப்படுகிறது. அத்தாமரை மலரோ அழகு உடைய உங்கள் முகத்தினை ஒத்துக் காணப்படுகிறது. ஒரு தொடரில் இரண்டடிகளாய்க்

**4. சமுச்சய உவமை**

ஒன்றை ஒப்பது ஒரு காரணத்தால் அன்றி வேறு பலவற்றானும் ஒக்கும் எனக் கூறுவது சமுச்சய உவமையாகும்.

**(எகா)** **அளவே வடி(வு)ஒப்ப(து) அன்றியே பச்சை**

**இளவேய் நிறத்தானும் ஏய்க்கும் துளவேய்**

**கலைக்குமரி போர்துளக்கும் கார்அவுணர் வீரம்**

**தொலைக்கு (ம்)அரி ஏறுகைப்பாள் தோள்.**

திருத்துழாய் மாலையை அணிந்தவள் கலைமகளாகிய கன்னி (துர்க்கை) ஆவாள். அவள், போர்க்களத்தின்கண் பகைவரை நடுங்கச் செய்யும் கரிய நிறத்தை உடைய அசுரரின் வீரத்தை அழிப்பவள். ஆண் சிங்கத்தை ஊர்தியாகக் கொண்டவள். அவளுடைய தோள்கள் வளப்பம் பொருந்திய பசிய மூங்கிலுக்கு அளவாலும் வடிவாலும் ஒப்பாகும். அவற்றையன்றிப் பசுமை நிறத்திற்கும் ஒப்புடையனவாம்.

இப்பாடலில் மூங்கிலானது கலைமகளின் தோளுக்கு அளவினாலும் வடிவினாலும் ஒப்பாவதோடு பசுமையான நிறத்தினாலும் ஒப்பாகும் எனக் கூறப்பட்டதால் சமுச்சய உவமையாயிற்று.

**5. உண்மை உவமை**

ஒரு பொருளுக்கு வேறொரு பொருளை உவமையாகக் கூறிப் பின்னர் அதனை மறுத்துப் பொருளையே கூறி முடிப்பது உண்மை உவமை ஆகும்.

**(எகா) தாமரை அன்று முகமே ஈது ஈங்(கு)இவையும்**

**காமருவண்(டு) அல்ல கருநெடுங்கண்' - தேமருவு**

**வல்லியின் அல்லள்' இவள்என் மனம்கவரும்**

**அல்லி மலர்க்கோதை யாள்.**

இது தாமரை மலரன்று' முகமே! இவையும் அழகு பொருந்திய வண்டுகள் அல்ல' கருமையுடைய நீண்ட கண்களே ! தேன் பொருந்திய கொடி அல்லள்' இவள் பெண்ணே! இத்தன்மை வாய்ந்த உறுப்புக்களைக் கொண்ட இவள், என் மனம் விரும்பும் அக இதழ்களை உடைய பூவால் தொடுக்கப்பட்ட மாலையினை உடையவள்.

இப்பாடலில் தாமரை, வண்டு, வல்லிக்கொடி ஆகியவை பெண்ணின் உறுப்பிற்கு உவமையாகக் காட்டப்பட்டன. பின்னர் அவை மறுக்கப்பட்டு முகம், கண், பெண் எனக் கூறப்பட்டதால் இது உண்மை உவமையாயிற்று.

**மறுபொருள் உவமை**

ஒரு பொருளுக்குப் பிறிதொரு பொருளை உவமையாகக் கூறி அப்பொருளுக்கு நிகராவதொரு பொருளைப் பின்னரும் வைத்து உவமிப்பது மறுபொருள் உவமையாகும்.

**(எகா) அன்னைபோல் எவ்உயிரும் தாங்கும் அனபாயா!**

**நின்னையார் ஒப்பார் நிலவேந்தர்? - அன்னதே**

**வாரிபுடை சூழ்ந்த வையகத்திற்(கு) இல்லையால்**

**சூரியனே போலும் சுடர்.**

ஒரு தாயானவள் தன் மகனைப் பல வழிகளிலும் பாதுகாப்பாள். அவளைப் போல உலகத்தில் உள்ள எவ்வகைப்பட்ட உயிர்களையும் தாங்குபவன் அனபாயன். அவனுக்கு ஒப்பாக இவ்உலக மன்னர்களுள் எவரும் இலர். அதனைப் போலக் கடலால் சூழப்பட்ட இவ்உலகத்துக்குச் சூரியனைப் போன்ற விளக்கும் இல்லை

இப்பாடலில்(தாய்க்கு இணையாக) முன்னர் வைக்கப்பட்ட பொருள் அனபாயச் சோழன். பின்னர் வைக்கப்பட்ட பொருள் சூரியஸ். எனவே இப்பாடல் மறுபொருள் உவமையாயிற்று.

**புகழ்தல் உவமை**

உவமையைப் புகழ்ந்து உவமிப்பது புகழ்தல் உவமையாகும்.

**(எகா) இறையோன் சடைமுடிமேல் எந்நாளும் தங்கும்**

**பிறையேர் திருநுதலும் பெற்ற-தறைகடல்சூழ்**

**பூவலயம் தாங்கும் அரவின் படம்புரையும்**

**பாவைநின் அல்குல் பரப்பு.**

பாவையே! உன்னுடைய நெற்றி சிவபெருமானுடைய சடைமுடியை விட்டு நீங்காது எந்நாளும் இருக்கின்ற பிறைநிலவை ஒத்திருக்கிறது. உன்னுடைய அல்குல் தடமும் ஒலிக்கின்ற கடலால் சூழப்பட்டுள்ள நிலப்பரப்பைத் தாங்கும் ஆதிசேடனுடைய அகன்ற படப்பரப்பை ஒத்திருக்கின்றது. என்னே நின் உருவத் தன்மை.

இப்பாடலில் பெண்ணின் நெற்றிக்கு உவமையாகத் காட்டப்பட்டது பிறை. அப்பிறை சிவபெருமானின் தலையை விட்டு நீங்காதது எனச் சிறப்பிக்கப்பட்டது. பெண்ணின் அல்குலுக்கு உவமையாகக் காட்டப்பட்டது பாம்பின் படம். அது நிலவுலகத்தைத் தாங்கும் ஆதிசேடனுடையது எனச் சிறப்பிக்கப்பட்டது. இவ்வாறு உவமப் பொருள்களான பிறையும் பாம்பின் படமும் புகழப்பட்டதால் புகழ்தல் உவமை ஆயிற்று, உபமேயங்களாகிய நுதலும் அல்குல் பரப்பும் அடையின்றிக் குறிப்பிடப் பெற்றன.

### நிந்தை உவமை

ஒரு பொருளுக்குக் கூறப்படும் உவமப்பொருளைப் பழித்துச் சொல்லுவது நிந்தை உவமை ஆகும். பொருளை உயர்த்தியும் உவமப் பொருளை இகழ்ந்தும் கூறுதல்.

**(எகா) மறுப்பயின்ற வாண்மதியும் அம்மதிக்குத் தோற்கும்**

**நிறத்தலரும் நேர்ஒக்கு மேனும்- சிறப்(பு)உடைத்துத்**

**தில்லைப் பெருமான் அருள்போல் திருமேனி**

**முல்லைப்பூங் கோதை முகம்.**

தில்லைத் திருமன்றின்கண் கூத்தாடுகின்ற சிவபெருமான் கருணை உடையவன். அக்கருணையை ஒத்த மேனியினை உடையவள் தலைவி. அவள் முல்லைப் பூவால் தொடுக்கப்பட்ட மாலையினை அணிந்தவள். அவளுடைய முகமானது, குற்றம் நீங்காத ஒளியை உடையதாகிய சந்திரனுக்கும் அதனைக் கண்டு வாடுகின்ற தாமரை மலருக்கும் உவமையாகும் சிறப்புடையதாம்.

இப்பாடலில் தலைவியின் முகத்திற்குக் களங்கமுடைய சந்திரன், குவியும் தாமரை என்னும் பழிப்பிற்குரிய பொருள்கள் உவமைகளாகக் காட்டப்பட்டன. ஆதலால் இப்பாடல் நிந்தை உவமையாயிற்று.

### நியம உவமை

இந்தப் பொருளுக்கு இந்தப் பொருளே உவமையாகும். அன்றிப் பிற பொருள்கள் உவமை ஆகாது என்னும் பொருள்படத் தேற்றேகாரம் கொடுத்துத் துணிவுபடக் கூறுவது நியம உவமையாகும். (நியமம்-உறுதி)

**(எகா) தாதுஒன்று தாமரையே நின்முகம் ஒப்பதுமற்(று)**

**யா(து)ஒன்றும் ஒவ்வா(து) இளங்கொடியே! - மீ(து)உயர்ந்த**

**சேலே பணியப் புலிஉயர்த்த செம்பியர்கோன்**

**வேலே விழிக்கு நிகர்.**

இளமையான கொடியை ஒத்தவளே ! எல்லா அரசர்களையும் வென்று அவர்களின் கொடிகளுக்கு மேலாகத் தன் மீன் கொடியைப் பறக்க விட்டவன் பாண்டியன். அப்பாண்டியனின் கொடி, தாழப் பறக்குமாறு அதன் மேலாகத் தன் புலிக்கொடியை உயர்த்தியவன் சோழன். அவனுடைய வேல் ஒன்றே உன் விழிக்கு ஒப்பாவதாகும். மகரந்தங்கள் நிறைந்திருக்கும் தாமரை மலர் ஒன்றே உன் முகத்துக்கு நிகராவதாகும். இவற்றை அன்றி உலகத்தில் உண்டாகிய வேறு எப்பொருளும் உன் விழிக்கும் முகத்துக்கும் ஒப்பாகாவாம்.

இப்பாடலில் முகத்திற்குத் தாமரையே! விழிக்கு வேலே! என உவமைப் பொருள்கள் தேற்றேகாரம் கொடுத்துச் சிறப்பிக்கப்பட்டதால் இது நியம உவமையாயிற்று.

**அநியம உவமை**

ஒரு பொருளுக்கென வரையறுத்துக் கூறப்பட்ட உவமை உண்டு. அதனை நீக்கிப் பிறவும் இத்தன்மையை உடையன எனின், அவையும் ஒக்கும் எனக் கூறுவது அநியம உவமை ஆகும். (அநியமம்-உறுதியில்லாதது)

**(எகா)** **கவ்வை விரிதிரைநீர்க் காவிரிசூழ் நன்னாட்டு**

**மவ்வல் கமழும் குழல்மடவாய்! - செவ்வி**

**மதுவார் கவிரேநின் வாய்போல்வ(து) அன்றி**

**அதுபோல்வ(து) உண்(டு)எனினும் ஆம்.**

மிகுந்த ஆரவாரத்தையும் பரந்த அலைகளையும் உடையதாய் விளங்குவது காவிரி. அதனால் சூழப்பட்டது சோழநாடு. அந்நாட்டின்கண் காட்டுமல்லிகைப் பூவால் தொடுக்கப்பட்ட மாலையின் மணம் கமழும் கூந்தலையுடைய பெண்ணே! அழகும் தேனும் நிறைந்த முருக்க மலரின் சிவந்த இதழே நின் வாயை ஒப்பதாகும். அதுவே அல்லாமல் அப்பூவைப் போன்ற பிற (இவ்உலகத்து ) உளவாயினும் அவையும் நின் வாயை ஒப்பனவாம்.

இப்பாடலில் வாய்க்கு என நியமிக்கப்பட்டது முருக்க மலராகும். அதனொடு (அதனை ஒத்த) பிறவும் உவமையாகும் எனக் கூறியதால் இது அநியம உவமையாயிற்று.

**ஐயஉவமை**

பொருளையும் அதற்குக் காட்டப்படும் உவமையையும் உறுதியாகக் கூறாமல் இதுவோ? அதுவோ? என ஐயப்பாடு தோன்ற உரைப்பது ஐயஉவமை ஆகும். (ஐயம் - தடுமாற்ற உணர்வு)

**(எகா)** **தா(து)அளவி வண்டு தடுமாறும் தாமரைகொல்!**

**மாதர் விழிஉலவு வாண்முகம்கொல்! - யா(து)என்(று)**

**இருபால் கவர்உற்(று) இடைஊசல் ஆடி**

**ஒருபால் படா(து)என் உளம்.**

மகரந்தத் துகளினைக் கலந்து வண்டுகளால் சூழப்பட்டிருக்கும் தாமரை மலரோ? காதலைச் செய்கின்ற விழியானது உலவுகின்ற ஒளியினை உடைய முகமண்டலமோ? இவற்றுள் என்னவென்று என் மனம் ஐயுற்றது. அதன் காரணமாக ஊசலைப் போல இரண்டன்கண்ணும் சென்று உள்ளம் துணிவு இன்றித் தடுமாறுகின்றது.

தாமரைக்கும் முகத்திற்கும் வேறுபாடு அறியாவண்ணம் ஐயப்படக் கூறுவதால் இப்பாடல் ஐயஉவமையாயிற்று.

**தெரிதருதேற்ற உவமை**

உவமையைக் கூறிப் பின் ஐயுற்ற நிலையில் இருந்து மாறிச் சில காரணங்களைக் கொண்டு இதுவே எனத் துணிந்து தெளிவது தெரிதரு தேற்ற உவமையாகும். (தெரிதருதேற்றம் ஆராய்ந்து தெளிதல்)

**(எகா) ஙதாமரை நாண்மலரும்: தண்மதியால் வீ(று)அழியும்**

**காமர் மதியும் கறைவிரவும் - ஆம்இதனால்**

**பொன்னை மயக்கும் புனைசுணங்கி னார்முகமே**

**என்னை மயக்கும் இது.**

1. கதிரவன் தோன்றும் காலைப் பொழுதில் தாமரை மலரும் 2.குளிர்ச்சி பொருந்திய சந்திரனால் அதன் அழகு கெடக் குவியும் 3..அவ்அழகிய சந்திரனும் களங்கத்தோடு காணப்படும். ஆதலால் என்னை மயக்கமடையச் செய்தது பொன் போன்ற தேமலால் அழகு செய்யப்பட்டவளின் முகமே ஆகும்.

இப்பாடலில் எப்போதும் மலர்ந்திருத்தல், அழகு கெடாமை, களங்கமின்றி இருத்தல் என்னும் காரணங்கள் காட்டப்பட்டன. இவற்றைக் கொண்டு மயக்கமடையச் செய்தது பிற பொருள்கள் அல்ல' முகமே! எனத் துணிந்ததால் இது தெரிதருதேற்ற உவமையாயிற்று.

**இன்சொல் உவமை**

ஒரு பொருளுக்கு அதனினும் சிறந்த ஒன்றை முதலில் உவமையாக்கிக் காட்ட வேண்டும். பின்னர் அவ்உவமையின் சிறப்பு. பொருளுக்கு ஒப்பாகுமே அன்றி உயர்வாகாது எனச் சமப்படுத்திக் கூறுவது இன்சொல் உவமை ஆகும்.

**(எகா) மான்விழி தாங்கும் மடக்கொடியே! நின்வதனம்**

**மான்முழுதும் தாங்கி வருமதியம் ஆனாலும்**

**முற்றிழை நல்லாய்! முகம்ஒப்ப(து) அன்றியே**

**மற்(று)உயர்ச்சி உண்டோ மதிக்கு.**

நிறைந்த அணிகலன்களை அணிந்து நன்மை பயப்பவளே! உன்னுடைய முகமானது மானின் விழி ஒன்றனையே சுமந்து நிற்கிறது. ஆனால் வானத்தில் வருகின்ற சந்திரனானது முழுமானையும் தன்னிடத்தில் தாங்கி உள்ளது. அப்படித் தாங்கினாலும் அந்தச் சந்திரன் உன் முகத்திற்கு ஒப்பாவதைத் தவிர வேறு எந்த உயர்வையும் பெறாது.

பெண், மான்விழியை மட்டும் தாங்கியுள்ளாள். ஆனால் சந்திரனோ அந்த மானையே முழுமையாகத் தாங்கி உள்ளது. சந்திரனுக்கு அப்பெருமை இருந்தாலும் அது பெண்ணின் முகத்திற்கு உவமையாகிறது. அதைத் தவிர வேறு சிறப்பு இல்லை என்பதால் இது இன்சொல் உவமையாயிற்று.

**விபரீத உவமை**

தொன்றுதொட்டு உவமையாக வருவனவற்றைப் பொருளாகவும் பொருளாக வருவனவற்றை உவமையாகவும் மாற்றி உரைப்பது விபரீத உவமையாகும். (விபரீதம் - தலைகீழாய்க் கூறல்)

(எகா) **திருமுகம் போல்மலரும் செய்ய கமலம்!:**

**கருநெடுங்கண் போலும் கயல்கள்: - அரிவை**

**இயல்போலும் மஞ்ஞை“: இடைபோலும் கொம்பர்**

**மயல்போலும் யாம்போம் வழி.**

1. பெண்ணின் திருமுகத்தைப் போல மலரும் செந்தாமரை 2.கரிய நீண்ட கண்களைப் போல உலவும் கயல்மீன்கள் 3. பெண்ணின் சாயலைப் போலும் மயில் 4. அவளுடைய இடையைப் போலும் கொம்பு. ஆதலால் இவ்வழியில் யான் போகின்ற போக்கு மயக்கம் போலும்.

நெடுங்காலமாகப் பெண்களின் முகத்திற்குத் தாமரை’ கண்களுக்குக் கயல்மீன்கள்’ சாயலுக்கு மயில்’ இடைக்குக் கொம்பு என்பன உவமைகளாகக் கூறப்படுகின்றன. அவ்இயல்பிலிருந்து பிறழ்ந்து முகம், கண், சாயல், இடை ஆகிய பொருள்களை உவமையாக்கிக் கூறியதால் இது விபரீத உவமையாயிற்று.

## இயம்புதல் வேட்கை உவமை

உபமேயமாகிய ஒரு பொருளை இன்ன பொருள்போல இருக்கிறதென்று சொல்ல விரும்புகின்றது என் உள்ளம் எனக் கூறுவதே இயம்புதல் வேட்கை உவமை ஆகும். (இயம்புதல் வேட்கை - சொல்ல விரும்புதல்)

(எகா) **நன்றுதீது என்(று)உணரா(து) என்னுடைய நன்னெஞ்சம்**

**பொன்துதைந்த பொற்சுணங்கின் பூங்கொடியே! - மன்றல்**

**மடுத்ததைந்த தாமரைநின் வாண்முகத்திற்(கு) ஒப்(பு)என்(று)**

**எடுத்(து) இயம்ப வேண்டுகின்ற(து) இன்று.**

பொன் நிறைந்தாற் போலும் அழகிய தேமலையும் பூங்கொடியினையும் ஒத்தவளே ! ஆழமான குளத்தில் நறிய மணத்தை உடையதாய் மலர்ந்த ஒரு தாமரை காணப்படுகிறது.

நன்மை, தீமைகளை ஆராயாத என்நெஞ்சம் அதனை ஒளிவீசும் உன்னுடைய முகத்திற்கு ஒப்பாம் என்று எடுத்துரைக்க விரும்புகின்றது.

இப்பாடலில் முகத்திற்குத் தாமரையை ஒப்பாகச் சொல்ல விரும்புகின்றது என் உள்ளம் எனக் கூறப்பட்டிருப்பதால் இது இயம்புதல் வேட்கை உவமையாயிற்று.

**பலபொருள் உவமை**

ஒரு பொருளுக்குப் பல பொருள்களை உவமையாகக் காட்டுவது பலபொருள் உவமையாகும்.

**(எகா) வேலும் கருவிளையும் மென்மானும் காவியும்**

**சேலும் வடுவகிரும் செஞ்சரமும் - போலுமால்**

**தேமருவி உண்டு சிறைவண்டு அறைகூந்தல்**

**காமருவு பூங்கோதை கண்.**

தேனை விரும்பி உண்ட சிறகினை உடைய வண்டுகள் இசைபாடும் கூந்தலையும் அழகிய மாலையையும் உடையவள் தலைவி. அவளுடைய கண்களானவை 1. வேல் 2. கருவிளைமலர் 3. மென்மையான நோக்கத்தை உடைய மான் 4. குவளை மலர் 5. சேல் மீன் 6. நெடுக்காகப் பிளந்த மாவடு 7. குருதிக்கறை படிந்த அம்பு ஆகியவற்றை ஒப்பனவாம்.

இப்பாடலில் கண் என்னும் ஒரு பொருளுக்கு வேல் முதலாகிய பல (ஏழ்) பொருள்கள் உவமையாகக் காட்டப்பட்டதால் இது பல பொருள் உவமையாயிற்று.

**விகார உவமை**

ஒரு பொருளுக்கு ஒப்புமையாகக் கூறப்படும் உவமையிலிருந்து ஒன்றைப் பிரித்துக் கூறுவது விகார உவமை ஆகும். (விகாரம் ஒருபொருளின் இயல்பை வேறுவிதமாக்கிக் கூறுதல்)

**சீத மதியின் ஒளியும் செழுங்கமலப்**

**போதின் புதுமலர்ச்சி யும்கொண்டு - வேதாதன்**

**கைம்மலரான் அன்றிக் கருத்தால் வகுத்(து) அமைத்தான்**

**மொய்ம்மலர்ப்பூங் கோதை முகம்.**

நெருங்கிய மலர்களால் அழகு நிரம்பிய கூந்தலை உடையவள் தலைவி. அவள் முகத்தினைப் பிரம்மன், குளிர்ந்த சந்திரனிடமிருந்து தோன்றிய ஒளியைக் கொண்டும் செழித்த தாமரை மலரில் உண்டாகிய மலர்ச்சியைக் கொண்டும் உருவாக்கினான். அச்செயலைக் கைத்தாமரையாகிய கருவியைக் கொண்டு செய்யாமல் தன் மனக்கருத்தால் செய்தான்.

முகத்திற்கு உவமையாகக் கூறப்படுவன சந்திரன், தாமரை. அவற்றிலிருந்து பிரம்மன் முகத்தைப் படைக்கவில்லை. மாறாகச் சந்திரனில் இருந்து ஒளியைக் கொண்டான்' தாமரையிலிருந்து மலர்ச்சியைக் கொண்டான். இவ்விரண்டால் உருவாக்கினான் என முகம் வேறு விதமாகக் கூறப்பட்டது. எனவே இது விகார உவமை ஆயிற்று.

**மோக உவமை**

ஒரு பொருளின் மேல் எழுந்த ஆசை மிகுதியினால் வந்த மனமயக்கம் தோன்ற உரைப்பது மோக உவமையாகும். (மோகம் -மயக்கம்)

**கயல்போலும் என்றுநின் கண்பழிப்பல் கண்ணின்**

**செயல்போல் பிறழும் திறத்தால் - கயல்புகழ்வல்**

**ஆரத்தால் நோமருங்குல் அம்தாள வாண்முறுவல்**

**ஈரத்தால் உள்வெதும்பும் யான்.**

முத்துக்களால் ஆகிய மேகலையை அணிந்ததால் வருந்துகின்ற இடையினையும் அம்முத்தினைப் போல் ஒளிவீசும் முறுவலையும் உடையவளே! உன்னுடைய குறிப்பினால் நான் மனம் வருந்துகின்றேன். ஆதலால் கயல்போலப் பிறழ்கின்றது என்று உன் கண்ணைப் பழிப்பேன். உன் கண்ணைப் போலப் பிறழும் திறத்தினைக் கண்டு அக்கயல்மீனை நான் புகழ்வேன்.

இப்பாடலில் கண்ணாகிய பொருளை, உவமையாகிய கயல் மீனுடன் மயக்கம் தோன்ற உவமித்துக் கூறலின் இது மோக உவமையாயிற்று.

### அபூத உவமை

முன் இல்லாத ஒன்றை உவமையாக்கி உரைப்பது அபூத உவமை ஆகும். இதனை "இல்பொருள் உவமை'' எனவும் வழங்குவர். (அபூதம்-இல்லாதது)

**(எகா)** **எல்லாக் கமலத்(து) எழிலும் திரண்(டு)ஒன்றின்**

**வில்லேர் புருவத்து வேல்நெடுங்கண் - நல்லீர்**

**முகம்போலும் என்ன முறுவலித்தார் வாழும்**

**அகம்போலும் எங்கள் அகம்.**

வில்லினை ஒத்த புருவத்தையும் வேலினைப் போன்ற நெடிய கண்களையும் உடைய பெண்களே !உலகத்தின் எல்லா இடங்களிலும் பூத்துக் குலுங்குகின்ற தாமரைப்பூக்களின் அழகு நெருங்கி ஒன்றுபடுமாயின் அது உன் முகத்தினை ஒத்துக் காணப்படும். அவ்அழகுடன் முறுவலைச் செய்யும் பெண்கள் பொருந்தி வாழும் இடத்தைப் போல எங்கள் உள்ளம் அமையும்.

இப்பாடலில் எல்லாத் தாமரைகளின் அழகும் ஒன்றினாற் போன்று அமைவது எவ்விடத்தும் இயலாததாகும். ஆதலால் இது அபூக உவமையாயிற்று.

விகார உவமைக்கும் அபூத உவமைக்கும் உள்ள வேறுபாடு : பிறரால் விகாரப்பட்டதாகக் கொண்டு உவமையாக்கி உரைக்கப்படுவது விகார உவமை ஆகும். சந்திரனிலிருந்து ஒளி, தாமரையிலிருந்து மலர்ச்சி ஆகிய இரண்டையும் எடுத்துப் பெண்ணின் முகத்தைப் பிரம்மன் படைத்தான் எனத் திரித்துக் கூறுவது விகார உவமை.

தாமாக விகாரப் படுவது அபூத உவமை ஆகும். அனைத்துத் தாமரையின் அழகும் தாமே திரண்டதாகக் கூறுவது அபூத உவமை.

**பலவயிற்போலி உவமை**

ஒரு தொடர்மொழிக்கண் பல உவமைகள் வரும். அவ்வாறு வரும் உவமைதோறும் உவமைச்சொல் (உவம உருபு) தோன்றுமாறு அமைப்பது பலவயின்போலி உவமை ஆகும். (பலவயின் போலி -பல இடங்களிலும் போல என்னும் சொல்லைப் பெற்று நிற்றல்)

**(எகா) மலர்வாவி போல்வரான் மாதரி' கமல**

**மலர்போலும் மாதர் வதனம் மலர்சூழ்**

**அளிக்குலங்கள் போலும் அளகம் அதனுள்**

**களிக்கும் கயல்போலும் கண்.**

தாமரை மலர்கள் மலர்ந்திருக்கும் குளத்தைப் போன்றவர் பெண்கள் 2. அத்தாமரை மலரைப் போல் அவர்களுடைய முகம் மலர்ந்து காணப்படும் 3. அம்மலரைச் சூழ்ந்திருக்கும் வண்டு கூட்டத்தைப் போன்றது அவர்களுடைய கரிய கூந்தல் 4. அக்குளத்துள் செருக்குடன் உலவுகின்ற கயல்மீனைப் போன்றவை அவர்தம் கண்கள்.

இப்பாடலில் மலர்வாவி போல்வர், கமல மலர் போலும், அளிக்குலங்கள் போலும், கயல் போலும் என உவமிக்கப்பட்ட நான்கு இடங்களிலும் போல என்னும் உவமஉருபு வந்ததால் இது பலவயிற் போலி உவமையாயிற்று.

ஒருவயிற்போலி உவமை

உவமைதோறும் உவமைச்சொல் தோன்றாமல் ஓர் இடத்தில் மட்டும் உவமைச் சொல் தோன்ற அமைப்பது ஒருவயின் போலி உவமை ஆகும். (ஒருவயின் போலி - ஓர் இடத்து மட்டும் போல என்னும் சொல் நிற்றல்)

**(எகா) நிழற்கோபம் மல்க நிறைமலர்ப்பூங் காயா**

**சுழற்கலவ மேல்விரித்த தோகை - தழற்குலவு**

**தீம்புகை ஊட்டும் செறிகுழலார் போலும்கார்**

**யாம்பிரிந்தோர்க்(கு) என்னாம் இனி.**

காயாம்பூ மர நிழலிடத்து இந்திரக்கோப பூச்சிகள் செறிந்து காணப்படும். அவ்அழகினை உடைய காயா மலர்கள் நிறைந்த சூழலில் தன் தோகையை விரித்து மயில் ஆடும். அக்காட்சி, தீயின்கண் தோன்றிய மணம்மிக்க புகையினை ஊட்டும் செறிந்த கூந்தலினை உடைய பெண்களைப்போல் தோன்றும். அப்பெண்களின் கூந்தலைப் போன்றது கார்காலம். இக்காலத்தில் என்னைப் பிரிந்து சென்றவர்க்கு இனி என்ன ஆகுமோ?

இப்பாடலில் செறிகுழலார் போலும் கார் என்பதில் போலும் என்னும் உவமஉருபு ஓரிடத்தில் மட்டும் இடம்பெற்றுள்ளது. தீம்புகை (போன்ற) தோகை ' மயில்(போன்ற) பெண்' இந்திரகோபம் (போன்ற) நெருப்பு என்பன உவமஉருபுகளோடு சேர்த்து எடுத்துரைக்கப் பெறாததால் இது ஒருவயிற்போலி உவமையாயிற்று.

**கூடா உவமை**

ஒரு பொருளுக்குப் பொருந்தாத தன்மை ஒன்றனைப் பொருந்துவதாகக் கொண்டு அதனை ஒன்றற்கு உவமையாக்கி உரைப்பது கூடா உவமை ஆகும். (கூடாதது -பொருந்தாதது)

**(எகா) சந்தனத்தில் செந்தழலும் தண்மதியில் வெவ்விடமும்**

**வந்தனவே போலுமால் நும்மாற்றம் - பைந்தொடியிர்!**

**வாவிக் கமல மதிமுகங்கண்(டு) எக்கறுவார்**

**ஆலிக்(கு) இவையோ அரண்.**

பசுமையான வளையலை அணிந்த பெண்களே ’ நும்முடைய சொற்கள், சந்தனத்தில் இருந்து சிவந்த நெருப்பும் குளிர்ந்த நிலவிலிருந்து கொடிய நஞ்சும் தோன்றியதைப் போல அமைந்துள்ளன. ஆனால் குளிர்ந்த பொய்கையிடத்துத் தோன்றிய தாமரையையும் முழுச் சந்திரனையும் போலும் முகத்தினைக் கண்டு விரும்புவார் உயிருக்கு இவையோ காவல்.

இப்பாடலில் சந்தனத்தில் நெருப்புப் பிறத்தலும் சந்திரனில் கொடிய நஞ்சு பிறத்தலும் இல்லை, எனவே இவை கூடா உவமையாயின.

### பொதுநீங்கு உவமை

ஒன்றற்குக் கூறப்பட்ட உவமையை மறுத்துப் பின் அப்பொருள் தானே தனக்கு நிகராகும் என்று மேம்பாடு தோன்றக் கூறுவது. அதாவது பொருளையே உவமையாக்குவது பொதுநீங்கு உவமையாகும்.

**(எகா) திருமருவு தண்மதிக்கும் செந்தா மரையின்**

**விரைமலர்க்கும் மேலாம் தகையால் - கருநெடுங்கண்**

**மானே! இருள்அளகம் சூழ்ந்தநின் வாண்முகம்**

**தானே உவமை தனக்கு.**

கரிய நெடிய கண்களை உடைய மான் போன்றவளே ! 1. குளிர்ச்சி பொருந்திய சந்திரனுக்கும் 2. திருமகள் உறைந்திருக்கப் பெற்றதும் நல்ல மணம் உடையதுமாகிய செந்தாமரை மலருக்கும் மேலாக விளங்குவது உன் திருமுகம் ஆகும். ஆகையால் இருளாகிய கூந்தல் சூழ்ந்த நின் ஒளியினை உடைய முகத்திற்கு உன் முகமே உவமை ஆகும். பிற பொருள்கள் ஆகா.

இப்பாடலில் முகத்திற்கு உவமையாகச் சந்திரன், செந்தாமரை ஆகியவற்றை முன்னர்க் கூறிப் பின்மறுத்து முகத்துக்கு முகமே ஒக்கும் எனக் கூறியதால் இது பொதுநீங்கு உவமையாயிற்று.

### மாலை உவமை

ஒரு பொருளுக்குப் பல உவமை அமையும். அவற்றை ஒன்றன் பின் ஒன்றாக இடைவிடாது தொடர்ச்சி உடையனவாகச் சேர்த்து இறுதிக்கண் பொருள் கூட்டி முடிப்பது மாலை உவமையாகும். (மாலை தொடர்ச்சி)

**(எகா) மலையத்து மாதவனே போன்றும் அவன்பால்**

**அலைகடலே போன்றும் அதனுள் - குலவும்**

**நிலவலய மேபோன்றும் நேரியன்பால் நிற்கும்**

**சிலைகெழுதோள் வேந்தர் திரு.**

வில் போன்ற வலிய தோள்களை உடையவர் பகைவேந்தர். அவர்களோடு போரிட்டு வென்ற சோழ அரசன் பெருஞ்செல்வத்தைப் பெற்றான். அச்செல்வம் 1. பொதிய மலையிடத்து வாழுகின்ற மாதவத்தினை உடைய அகத்தியனைப் போன்றும் 2. அவனால் உண்ணப்பட்ட அலைகளை உடைய கடலைப் போன்றும் 3. அக்கடலினுள் உண்டாகிய நிலப்பரப்பைப் போன்றும் நீங்காமல் நிலைபெற்றுள்ளது.

சோழனை விட்டு நீங்காத செல்வத்திற்கு அகத்தியனும் அவனொடு தொடர்புடைய கடலும் அதனொடு தொடர்புடைய பூமியும் (பூவொடு பூ சேர்ந்து நிற்கும் மாலை போலத்) தொடர்ந்து நின்றன. இவற்றால் இப்பாடல் மாலை உவமையாயிற்று.

### உருவகவணி

கவிஞன் தான் ஒரு பொருளைச் சிறப்பிக்க எண்ணுவான். அப்பொருளை உவமை ஆகும் வேறொரு பொருளோடு ஒன்றுபடுத்திக் கூறுவான். உவமையின் தன்மையைப் பொருள்மேல் ஏற்றிக் கூறும் இத்தன்மையே உருவகம் எனக்கூறப்படும். உபமானம், உபமேயம். என்னும் இரண்டுக்கும் வேற்றுமை இல்லாமல் இரண்டும் ஒன்றே என்பது தோன்றக் கூறுவது உருவக அணி ஆகும். ரூபகம் என்னும் சமற்கிருதச் சொல்லே உருவகம் என்றாயிற்று.

### உருவக அணியின் இலக்கணம்

**உவமையும் பொருளும் வேற்றுமை ஒழிவித்(து)**

**ஒன்(று) என மாட்டின்அ·.(து) உருவகம் ஆகும்.**

உவமையாகும் பொருள் (உபமானம்) உவமிக்கப்படும் பொருள் (உபமேயம்) எனப் பொருள் இருவகைப்படும். அவ்விரண்டுக்குள் வேறுபாடு காணமுடியாத வகையில் ஒன்றென்னும்படி ஒற்றுமைப்படுத்திக் கூறுவது உருவகம் என்னும் அணியாகும்.

**உருவக அணியின் வகைகள் (15)**

**தொகையே விரியே தொகைவிரி எனாஅ**

**இயைபே இயைபிலி வியநிலை எனாஅச்**

**சிறப்பே விரூபகம் சமாதானம் எனாஅ**

**உருவகம் ஏகம் அநேககாங்கம் எனாஅ**

**முற்றே அவயவம் அவயவி எகாஅச்**

**சொற்றஜம் மூன்று மற்றதன் விரியே.**

1. தொகை உருவகம் 2. விரி உருவகம் 3. தொகைவிரி உருவகம் இயைபு உருவகம் 5. இயைபிலி உருவகம் 6. வியநிலை உருவகம் 7.சிறப்பு உருவகம் 8. விரூபக உருவகம் 9. சமாதான உருவகம் 10.உருவக உருவகம் 11. ஏகாங்க உருவகம் 12. அநேகாங்க உருவகம் 13.

முற்று உருவகம் 14. அவயவ உருவகம் 15. அவயவி உருவகம் என்று சொல்லப்பட்ட பதினைந்தும் உருவகத்தின் வகைகள் ஆகும்.

ஏகம் என்பதோடு உருவகமே அன்றி அங்கம் என்னும் சொல்லையும் கூட்டி உரைக்க வேண்டும். இவை அனைத்தும் சொல்லின் முடியும் இலக்கணத்தை உடையன.

**தொகை உருவகம்**

ஆகிய என்னும் தொடர்பை உண்டாக்கும் சொல் பெறாமல் (மறைந்து) வருவதே தொகை உருவகம் ஆகும்.

**(எகா) அங்கை மலரும் அடித்தளிரும் கண்வண்டும்**

**கொங்கை முகிழும் குழற்காரும் - தங்கியதோர்**

**மாதர்க் கொடிஉளதாம் நண்பா அதற்(கு)எழுந்த**

**காதற்(கு) உளதோ கரை.**

நண்பனே ! 1. அழகிய கையாகிய மலர் 2. அடியாகிய தளிர் 3. கண்ணாகிய வண்டு 4. மார்பாகிய அரும்பு 5. கூந்தலாகிய மேகம் என்னும் உறுப்புக்களை உடையதாய் ஒரு கொடி உள்ளது. அது பிறரால் காதல் செய்ய வல்லதாய் இருக்கிறது. அக்கொடி மேல் எழுந்த அன்பிற்கு இவ்உலகத்தில் எல்லை இல்லை.இப்பாடலில் அமைந்த

1. அங்கை மலர் (அங்கையாகிய மலர்)

2. அடித்தளிர் (அடியாகிய தளிர்)

3.கண் வண்டு (கண்ணாகிய வண்டு)

4. கொங்கை முகிழ் (கொங்கையாகிய முகிழ்)

5. குழற் கார் (குழலாகிய கார்)

என்னும் தொடர்களில் ஆகிய என்னும் சொல் மறைந்து (தொக்கு) வந்தன. ஆகையால் இது தொகை உருவகம் ஆயிற்று.

**விரி உருவகம்**

ஆகிய என்னும் சொல் வெளிப்பட்டு (விரிந்து) நிற்பது விரி உருவகம் ஆகும். ஆகிய என்னும் சொல் ஆக எனவும் ஆ எனவும் திரிந்து நிற்றலும் உண்டு.

**(எகா) கொங்கை முகையாக மென்மருங்குல் கொம்பாக**

**அங்கை மலரா அடிதளிராத் - திங்கள்**

**அளிநின்ற மூரல் அணங்காம் எனக்கு**

**வெளிநின்ற வேனில் திரு.**

இளவேனில் காலத்தைக் கொண்டு இப்போது எனக்கு முன் தோன்றும் இவள் திருமகளைப் போன்றவள். இத்தன்மையுடையவள் மார்பை அரும்பாகவும் மெல்லிய இடையைப் பூங்கொம்பாகவும் அழகிய கையே மலராகவும் அடி தளிராகவும் நிலவு போன்ற வெண்ணிற ஒளியினையும் உடையவள்.

இப்பாடலில் முகையாக, கொம்பாக என்னும் இரு சொற்களில் “ஆக“ என்பது வெளிப்பட்டு நின்றது. மலரா, தளிரா-என்பவற்றுள் “ஆ“ என்னும் சொல் வெளிப்பட்டு நின்றது. ஆதலால் இது விரி உருவகம் ஆயிற்று.

**தொகைவிரி உருவகம்**

தொடர்பை உணர்த்தும் ஆகிய, ஆக, ஆ என்னும் சொற்கள் வெளிப்பட்டும் மறைந்தும் அமைவது தொகைவிரி உருவகம் ஆகும்.

**(எகா) வையம் தகழியா வார்கடலே நெய்யாக வெய்ய**

**கதிரோன் விளக்காகச் செய்ய**

**சுடர்ஆழி யான்அடிக்கே சூட்டினேன் சொன்மாலை**

**இடர்ஆழி நீங்குகவே என்று.**

சிவந்த நிறத்தை உடைய சக்கரப் படையைத் தாங்கியவன் திருமால். அவனுக்கு உலகமே அகலாகவும் நீண்ட பெரிய கடலே நெய்யாகவும் வெம்மையை உடைய கதிரவனே விளக்காகவும் அமைத்து வைத்தேன். என்னுடைய துன்பமாகிய கடல் வற்றிப் போக வேண்டினேன். அதற்காகச் சொல்லினால் தொடுக்கப்பட்ட பாமாலையை அவனுடைய திருவடிக்குச் சூட்டினேன்.

நெய்யாக, விளக்காக, தகழியா என்பன விரி உருவகம். இடராழி என்பது தொகை உருவகம். எனவே இப்பாடல் தொகைவிரி உருவகமாயிற்று.

**இயைபு உருவகம்**

பல பொருளை உருவகம் செய்யுமிடத்து ஒன்றற்கொன்று இயைபுடைய பொருளை ஒரு தொடரில் உருவகமாக வரத் தொடுப்பது இயைபு உருவகமாகும். (அதாவது பொருத்தமுடைய பொருளை உருவகப்படுத்துவது.)

**(எகா) செவ்வாய்த் தளிரும் நகைமுகிழும் கண்மலரும்**

**மைவார் அளக மதுகரமும் - செல்லி**

**உடைத்தாம் திருமுகம்என் உள்ளத்து வைத்தார்**

**துடைத்தாரே அன்றோ துயர்.**

1.சிவந்த வாயாகிய தளிர் 2.வெண்மை நிறமுடைய நகையாகிய முல்லை அரும்பு 3. கண்ணாகிய மலர் 4. கரிய நீண்ட குழலாகிய வண்டு ஆகியவற்றொடு அழகினையும் உடையது. அது கண்டோரால் விரும்பப்படும் தன்மை உடையது ஒரு முகம். அம்முகத்தை என்னுள்ளத்தே

வைத்தார். அதனால் என்னுடைய உள்ளத்தில் உண்டாகிய துன்பத்தைப் போக்குவாரா? என்பதை எனக்குச் சொல்ல வேண்டும்.

இப்பாடலில் வாய்,நகை, கண், கூந்தல் ஆகிய நான்கும் தளிர், அரும்பு, மலர், வண்டு ஆகிய நான்கும் ஒன்றற்கு ஒன்று இயைபுடைய பொருள். இவ்இயைபுடையவற்றை உருவகித்துக் கூறியதால் இது இயைபு உருவகமாயிற்று.

**இயைபிலி உருவகம்**

ஒன்றற்கு ஒன்று இயைபில்லாத பொருள்களை ஒரு தொடரில் உருவகமாக அமைப்பது இயைபிலி உருவகமாகும். (அதாவது பொருத்தமில்லாதவற்றை உருவகப்படுத்திக் கூறுவது.)

தேனக் கலர்கொன்றை பொன்னாகச் செஞ்சடையே

**(எகா) கூனற் பவளக் கொடியாகத் - தான**

**மழையாகக் கோடு மதியாகத் தோன்றும்**

**புழையார் தடக்கைப் பொருப்பு.**

1. தேனைச் சிந்துகின்ற கொன்றை மலர் பொன்னாகத் திகழ்ந்தது 2. சிவந்த சடை வளைந்து பவளக் கொடியாகக் காட்சியளித்தது 3. மதநீர் மழைநீராகவும் 4. அதன் தந்தம் மதியாகவும் பொலிய பெரிய துளையை உடைய கையைக் கொண்ட யானையாகிய மலை காட்சியளித்தது.

இங்கு விநாயகப் பெருமான் அணிந்து கொன்றை மலரும் திருச்சடையும்,மதநீரும், மருப்பும்(தந்தம்) ஆகிய நான்கும் முறையே பொன், பவளக்கொடி, மழை, மதி என்னும் நான்காக உருவகிக்கப்பட்டுள்ளன. இப்பொருள்கள் அனைத்தும் ஒன்றற்கு ஒன்று இயைபற்றவை. ஆதலால் இயைபிலி உருவகமாயிற்று.

**வியநிலை உருவகம்**

ஒரு பொருள் பல உறுப்புக்களைப் பெற்றிருக்கும். அவற்றுள் சிலவற்றை உருவகம் செய்தும் சிலவற்றை விடுத்தும் உறுப்பினை உடைய பொருளை (அங்கியை) உருவகம் செய்தும் உரைப்பது வியநிலை உருவகம் ஆகும்.

**(எகா) செவ்வாய் நகைஅரும்பச் செங்கைத் தளிர்விளங்க**

**மைவாள் நெடுங்கண் மதர்த்(து)உலவச் - செல்வி**

**நற(வு)அலரும் சோலைவாய் நின்றதே நண்பா!**

**குறவர் மடமகளாம் கொம்பு.**

நண்பனே புதிய தேனை உடையதாய் மலரும் மலர்களை உடையது சோலை. அதில் குறவர்க்கு இளமையொடு கூடிய மகளாம் முறையுடைய வஞ்சிக் கொம்பு ஒன்று தோன்றியது.

அது, தன் சிவந்த வாயிலிருந்து புன்னகை அரும்பச் சிவந்த கரங்களாகிய தளிர்கள் ஒளிவீச வருத்தத்தைத் தருகின்ற வாளாகிய கண்கள் சிவந்த கோடுகளோடு உலாவ நின்றது.

இப்பாடலில் கூறப்பட்ட பொருள் (அங்கி) குறப்பெண். அவள் வஞ்சிக் கொம்பாக உருவகப்படுத்தப்பட்டாள். அவளுடைய உறுப்புக்களில் வாய், கண், கை ஆகிய மூன்றும் இங்கு எடுத்துக்காட்டப்பட்டன. அவற்றுள் கை மட்டும் தளிராக உருவகப்படுத்தப்பட்டது. எஞ்சியவை வாளா (உருவகப்படுத்தப்படாமல்) விடப்பட்டன. ஆதலால் இது வியநிலை உருவகமாயிற்று.

### சிறப்பு உருவகம்

ஒரு பொருளை எடுத்து அதற்குச் சிறந்த அடைகளை உருவகப் படுத்தி அவற்றின் காரணமாக அப்பொருளையும் உருவகமாக்கி முடிப்பது சிறப்பு உருவகம் ஆகும்.

**(எகா) விரிகடல்சூழ் மேதினி நான்முகன்மீ கானாச்**

**சுரநதிபா யுச்சி தொடுத்த -அரிதிருத்தாள்**

**கூம்பாக எப்பொருளும் கொண்ட பெருநாவாய்**

**ஆம்பொலிவில் ஆயினதால் இன்று.**

நான்கு முகங்களை உடைய பிரம்மன் மீகாமன் (மாலுமி) ஆயினான். ஆகாய கங்கை பாயாயிற்று. திருமால் மேல் நோக்கி எடுத்த சிறப்புடைய கால்கள் கூம்பாயின. பலவகைப்பட்ட பொருள்களை உடைத்தாய் இவ்அழகொடு கூடிய நாவாயாகத் திகழ்வதே கடலால் சூழப்பெற்ற இந்நிலவுலகமாகும்.

இப்பாடலில் இவ்உலகம், பலபொருள்களைத் தாங்கும் நாவாயாக உருவகப்படுத்தப்பட்டது. நாவாயை இயக்கும் மீகாமனாகப் பிரம்மனும் பாயாகத் தெய்வ கங்கையும் கூம்பாகத் திருமாலின் திருவடியும் சிறப்பித்து உருவகப்படுத்தப் பட்டதால் இது சிறப்பு உருவகமாயிற்று.

### விரூபக உருவகம்

ஒரு பொருட்குக் கூடாத தன்மை பலவும் கூட்டி உருவகம் செய்வது விரூபக உருவகம் ஆகும். (விரூபகம் - வி - விரோதம் ’ ரூபகம் உருவகம்)

**எகா தண்மதிக்குத் தோலாது“ தாழ்தடத்து வைகாது**

**முள்மருவும் தாள்மேல் முகிழாது - நண்ணி**

**இருபொழுதும் செவ்வி இயல்பாய் மலரும்!**

**அரிவை வதனாம் புயம்.**

என் காதலியின் முகமாகிய தாமரை 1. குளிர்ச்சி பொருந்திய சந்திரனின் தோற்றத்தைக் கண்டு கூம்பாது 2. ஆழ்ந்த குளத்தில் நிலை பெறாது 3. முள்ளை உடைய தாளின் மீது அரும்பாது 4. காலையும் மாலையுமாகிய எப்பொழுதும் மிகவும் அழகுடையதாய் மலர்ந்தே காணப்படும்.

சந்திரனுக்குக் கூம்பாமை' குளத்தில் வாழாமை' முள்தாளின் மீது மலராமை ' இருபொழுதும் மலர்ந்திருத்தல் ஆகிய தன்மைகள் தாமரைக்குப் பொருந்தா. அவற்றை ஏற்றி முகத்தைத் தாமரையாக உருவகித்தமையால் இப்பாடல் விரூபக உருவகமாயிற்று.

### சமாதான உருவகம்

ஒரு பொருளை நன்மை தருவதாக உருவகிக்க வேண்டும். அதனையே தீங்கு தருவதாகப் பின்னர்க் கூற வேண்டும். அத்தீங்கு அப்பொருளால் தோன்றியது அன்று என அதற்குப் பிறிதோர் காரணம் கூறுவது சமாதான உருவகம் ஆகும்.

(எகா) **கைகாந்தள் வாய்குமுதம் கண்நெய்தல் காரிகையீர்!**

**மெய்வார் தளிர் கொங்கை மென்கோங்கம் -இவ்அனைத்தும்**

**வன்மைசேர்ந்(து) ஆவி வருத்துவ(து) மாதவம்ஒன்(று)**

**இன்மையே அன்றோ எமக்கு.**

அழகினை உடையவளே! 1. உம்முடைய காந்தள் மலராகியகையும் 2. ஆம்பல் மலராகிய வாயும் 3. குவளை மலராகிய கண்ணும் 4. நீண்ட தளிராகிய உடலும் 5. மென்மையான கோங்கரும்பாகிய மார்பும் என்று சொல்லப்படுவன உன் உறுப்புக்களாகும். அவை அனைத்தும் நன்மையாகிய தன் தன்மையை இழந்து தீயதன்மை பெற்று எனக்குத் துன்பத்தைத் தருகின்றன. அதற்குக் காரணம் நீவிர் அன்று. என் தீவினைப் பயன் தீர யான் முற்பிறப்பில் தவம் செய்யாமையே ஆகும்.

இப்பாடலில் பெண்ணின் உறுப்புக்களான கை, வாய், கண், மெய், மார்பு ஆகியவை காந்தள், ஆம்பல், நெய்தல், தளிர், கோங்கரும்பு என்னும் பொருள்களாக உருவகம் செய்யப்பட்டன. இந்நன்மை தரும் பொருள்கள் பின்னர்த் தீமை தருவதாகக் கூறப்பட்டன. அதற்குத் தவம் செய்யாமை என்னும் காரணம் கூறப்பட்டதால் இது சமாதான உருவகமாயிற்று.

### உருவக உருவகம்

ஒரு பொருளைப் பிறிதொன்றாக உருவகம் செய்ய வேண்டும். அவ்வாறு உருவகித்த பொருளை வேறு ஒன்றாக உருவகிக்க வேண்டும். இதுவே உருவக உருவகம் ஆகும்.

(எகா) **கன்னிதன் கொங்கைக் குவடாம் கடாக்களிற்றைப்**

**பொன்நெடுந்தோள் குன்றே புனைகந்தா - மன்னவநின்**

**ஆகத் தடம்சே வகமாக யான்அணைப்பல்**

**சோகித்(து) அருளேல் துவண்டு.**

தலைவனே! நின்னால் காதலிக்கப்பட்டவள் தலைவியாகிய கன்னி. அவள் மார்பு என்னும் மலையாகிய மதக்களிற்றைப் பெற்றுள்ளாள். அதனை நின் பொன் அணிந்த பெரிய தோளாகிய குன்றம் திரளச் செய்யப்பெற்ற கட்டுத்தறியாகவும் மார்பாகிய பரந்த இடமே கூடமாகவும் அமையச் சேர்த்துவைப்பேன். ஆதலின் நீ அழகிழந்து வருந்துவதை ஒழிவாயாக.

இப்பாடலில் 1. தலைவியின் மார்பு மலையாக உருவகிக்கப் பட்டது. அதுவே பின்னர் மதம் மிகுந்த யானையாகவும் உருவகப்படுத்தப்பட்டது 2. கன்னியைக் காதலித்த தலைவனின் தோள் மலையாகவும் பின் கட்டுத்தறியாகவும் உருவகிக்கப்பட்டது. எனவே இப்பாடல் உருவக உருவகமாயிற்று.

### ஏகாங்க உருவகம்

ஒரு பொருளுக்கு அமைந்த உறுப்புக்கள் பலவற்றுள் ஒன்றை மட்டும் உருவகம் செய்வது ஏகாங்க உருவகமாகும்.(ஏகம்-ஒன்று' அங்கம் -உறுப்பு)

**(எகா) காதலனைத் தாஎன்(று) உலவும் கருநெடுங்கண்**

**ஏதிலனால் யா(து)என்னும் இன்மொழித்தேன்' - மாதர்**

**மருண்ட மனமகிழ்ச்சி வாள்முகத்து வந்த**

**இரண்டினுக்கும் என்செய்கோ யான்.**

கண்டவர்க்கு மயக்கத்தோடு உள்ளக் களிப்பையும் கொடுப்பது பெண்ணின் ஒளிமுகமாகும். அதில் அமைந்து உலவுகின்ற கரிய நீண்ட கண்கள் எமக்கு ஒரு தலைவனைத் தருவாயாக எனக் கேட்பது போல் காட்சியளித்தன. வாயிலிருந்து தோன்றும் தேன் போன்ற மொழியோ அயலானால் எந்தப் பயனும் இல்லை என்பது போலக் கூறுகிறது. முகத்தில் தோன்றி முரண்படும் இவ்இரண்டனுக்கும் நெஞ்சமே! யான் என்ன செய்வேன். சொல்வாயாக!

இப்பாடலில் பெண்களின் உறுப்புக்களாகிய முகம், கண், மொழி என்பன எடுத்துரைக்கப்படுகின்றன. அவற்றுள் ஒன்றாகிய மொழி மட்டும் தேனாக உருவகப்படுத்தப்பட்டுள்ளது. செய்யப்படாததால் இது ஏகாங்க உருவகமாயிற்று. எஞ்சியவை உருவகம்

### அநேகாங்க உருவகம்

ஒரு பொருளுக்கு அமைந்த பல உறுப்புக்களை உருவகம் செய்வது அநேகாங்க உருவகம் ஆகும். (அநேகம் - பல ' அங்கம் - உறுப்பு)

**(எகா) கைத்தளிரால் கொங்கை முகிழ்தாங்கி கண்என்னும்**

**மைத்தடஞ்சேல் மைந்தர் மனம்கலங்க - வைத்ததோர்**

**மின்உளதால் மேக மிசைஉளதால் மற்றதுவும்**

**என்உளதாம்! நண்பா இனி.**

நண்பனே! கையாகிய தளிரால் மார்பாகிய அரும்பினைத் தாங்கும் தன்மை கொண்டது. கண் என்கின்ற குளிர்ந்த சேல்களால் (மீன்களால்) ஆடவரின் உள்ளங்களை அழிக்கும் இயல்புடையது. கறுத்த மேகத்தைச் சுமந்து கொண்டிருப்பது. இத்தன்மைத்தாய்த் தோன்றும் ஒரு மின்னல் பூமியில் நிற்குமானால் அது என் உள்ளத்தின்கண் நிலைபெற்ற உருவாகும்.

இப்பாடலில் ஒரு பெண்ணின் உறுப்புக்களாகிய கை, மார்பு, கண், கூந்தல், வடிவம் ஆகிய பல உறுப்புக்கள் பேசப்பட்டன. அவை முறையே தளிர், அரும்பு, கயல், மேகம், மின்னல் என்பனவாக உருவகித்துக் கூறப்பட்டதால் இது அநேகாங்க உருவகமாயிற்று.

**முற்று உருவகம்**

பல உறுப்புக்களை உடைய உறுப்பியையும் (பொருளையும்) அதன் உறுப்புக்களையும் ஏற்ற இடத்தொடும் பிறவற்றொடும் முழுமையாக உருவகம் செய்வது முற்று உருவகம் ஆகும்.

**(எகா)** **விழியே களிவண்டு மென்நகையே தாது**

**மொழியே முரு(கு)உலாந் தேறல் - பொழிகின்ற**

**தேமருவு கோதைத் தெரிவை திருமுகமே**

**தாமரைஎன் உள்ளத் தடத்து.**

நண்பனே ! என்உள்ளம் ஆழ்ந்த குளமாகத் திகழ்வதாகும். அதில் தேன் பொருந்திய மலர்களைச் சூடிய கூந்தலை உடைய பெண்ணின் திருமுகமே தாமரை மலராகும். அம்முகத்தில் அமைந்த கண்களே மகிழ்ச்சி கொண்ட வண்டுகளாகும். அப்பெண்ணின் வாயிலிருந்து தோன்றுகின்ற புன்முறுவலே மகரந்தங்களாகும்' மொழியே நறிய நாற்றத்துடன் உலவுகின்ற தேனாகும்.

இப்பாடலில் ஒரு பெண்ணின் உறுப்புக்களாகிய விழி, முறுவம், மொழி, முகம் என்பவை வண்டு, தாது, தேன், தாமரைமலர் என்பனவாக உருவகிக்கப்பட்டுள்ளன. தாமரை குளத்தில் வாழ்வது. அதற்கு ஏற்பத் தலைவன் உள்ளத்தைக் குளமாக உருவகித்துள்ளதால் இப்பாடல் முற்றுருவகம் ஆயிற்று.

**அவயவ உருவகம்**

உறுப்புக்களை உடைய பொருளை (உறுப்பியை) உருவகம் செய்யாமல் உறுப்புக்களை மட்டும் உருவகம் செய்வது அவயவ உருவகமாகும். (அவயவம் - உறுப்பு)

**(எகா)** **புருவச் சிலைகுனித்துக் கண்அம்(பு)என் உள்ளத்(து)**

**உருவத் துரந்தார் ஒருவர் - அருவி**

**பொருங்கல் சிலம்பில் புனைஅல்குல் தேர்மேல்**

**மருங்குல் கொடிநுடங்க வந்து.**

நண்பனே ' அழகு செய்யப் பெற்ற அல்குல் ஆகிய தேரின் மீது ஏறினாள் ஒருத்தி. அவள் தன் இடையாகிய கொடி அசைய வந்தாள். அருவிகள் அலைகழிக்கப்படும் மலைக்குன்றில் தோன்றினாள். தன்னுடைய புருவமாகிய வில்லை வளைத்தாள். கண்ணாகிய அம்பினை என் உள்ளத்தைத் துளைத்துப் போகும்படி எய்தாள். இதற்கு நான் செய்ய வேண்டுவது யாது? என்பதனை எனக்குக் கூறுவாயாக.

இப்பாடலில் ஒரு பெண்ணின் புருவம் - வில்' கண் அம்பு' அல்குல் - தேர்' இடை கொடி என உறுப்புக்கள் (அவயங்கள்) உருவகிக்கப்பட்டுள்ளன. இவ் உறுப்புக்களை உடைய அப்பெண்ணாகிய உறுப்பியை (அவயவி) உருவகம் செய்யாமல் ஒருவர் என்னும் அளவில் சுட்டியுள்ளதால் இது அவயவ உருவகம் ஆயிற்று.

### அவயவி உருவகம்

அவயவியாகிய பொருளை உருவகம் செய்து அதன் உறுப்புக்களை உருவகிக்காமல் விட்டுவிடுதல் அவயவி உருவகம் ஆகும்.

**வார்புருவம் கூத்தாட வாய்மழலை சோர்ந்(து)அசைய**

**வேர்அரும்பச் சேந்து விழிமதர்ப்ப - மூரல்**

**அளிக்கும் தெரிவை வதனாம் புயத்தால்**

**களிக்கும் தவம்உடையேன் கண்.**

நண்பனே நீண்ட புருவம் கூத்தாடியது. வாயில் தோன்றிய வார்த்தையானது உருத்தெரியாமல் தளர்ந்து அழிந்தது. சிறு வியர்வைத் துளி நெற்றியை அழகுபடுத்தியது. விழியானது சிவந்து மதர்த்துக் காணப்பட்டது. இத்தன்மையோடு முறுவல் செய்யும் முகமாகிய தாமரையைக் கண்டு என் கண்கள் களித்தன. அதற்குக் காரணம் நான் முற்பிறவியில் செய்த நல்வினைப் பயனே ஆகும்.

பெண்ணின் முகத்தைத் தாமரை என உருவகித்து அதன் உறுப்புக்களான புருவம் முதலானவற்றை உருவகிக்காமல் விட்டதால் இது அவயவி உருவகமாயிற்று.

### தீவகவணி

தீவகம் என்னும் வடசொல்லுக்கு ''விளக்கு'' என்பது பொருளாகும். ஓரிடத்தில் வைக்கப்பட்ட விளக்கு, பல இடங்களிலும் உள்ள பொருளை விளங்கக் காட்டும். அதுபோல ஓரிடத்தில் நின்ற சொல் பல இடங்களிலும் சென்று பொருளை விளக்குவது தீவக அணியாகும். இதற்கு விளக்கு அணி என்னும் வேறு பெயரும் உண்டு. இதனை வடநூலார் ''தீப அலங்காரம்'' என்பர்.

### தீவக அணியின் இலக்கணம் (4)

**குணம் தொழில் சாதி பொருள் குறித்(து) ஒருசொல்**

**ஒருவயின் நின்றும் பலவயின் பொருள்தரின்**

**தீவகம் செய்யுள் மூவிடத்(து) இயலும்.**

1.குணம் 2. தொழில் 3.சாதி 4.பொருள் ஆகிய நான்கனுள் யாதானும் ஒன்றைக் குறிக்கும் ஒருசொல் ஓரிடத்தில் நிற்கும். அச்சொல் செய்யுளில் பல இடத்தும் நின்ற சொற்களோடு பொருந்திப் பொருள் விளைப்பது தீவக அணியாகும். அது செய்யுளின் மூன்றிடத்தும் வெளிப்பட்டுத் தோன்றும்.

மூன்றிடமாவன: முதல், இடை, கடை என்பனவாம். அவற்றிற்கேற்பத் தீவகமும் முதனிலைத் தீவகம், இடைநிலைத் தீவகம், கடைநிலைத் தீவகம் என மூன்றாயின. இம்மூன்றையும் குணம், தொழில், சாதி, பொருள் என்னும் நான்கோடு உறழப் பன்னிரண்டாகும்.

## முதனிலைத் தீவகம்

### 1. முதனிலைக் குணத்தீவகம்

முதற்கண் நிற்கும் பண்பை உணர்த்தும் சொல், பிற சொற்களோடு இயைந்து பொருள் உணர்த்துவது முதனிலைக் குணத்தீவகம் ஆகும்.

**(எகா) சேந்தன வேந்தன் திருநெடுங்கண் தெவ்வேந்தர்**

**ஏந்து தடந்தோள் இழிகுருதி - பாய்ந்து**

**திசைஅனைத்தும் வீரச் சிலைபொழிந்த அம்பும்**

**மிசைஅனைத்தும் புட்குலமும் வீழ்ந்து.**

பொருள் : 1. அரசனது அழகிய நீண்ட கண்கள் சினத்தால் சிவந்தன 2.அந்த அளவில் பகைவர்களின் உயர்ந்த தோள்கள் அம்புகள் பட்டுச் சிவந்தன 3.அத்தோள்களில் இருந்து வெளிப்பட்ட குருதியால் திசைகள் அனைத்தும் சிவந்தன 4. அந்தக் குருதியில் தோய்ந்ததால் வில்லிலிருந்து வெளிப்பட்ட அம்புகள் சிவந்தன 5. அக்குருதி மேல்படுதலால் பறவை இனங்கள் அனைத்தும் சிவந்தன.

சேந்தன என்னும் சொல் செம்மை என்னும் பண்படியாய்த் தோன்றிய சொல். அச்சொல் சிவத்தல் என்னும் நிறத்தைக் குறிக்கும். சேந்தன என முதற்கண் நின்ற அச்சொல் கண் சேந்தன' தோள் சேந்தன' திசை அனைத்தும் சேந்தன' அம்பு சேந்தன' புட்குலம் சேந்தன எனப் பல சொற்களோடும் சேர்ந்து பொருள் கொள்ளும்படி இயைந்து நின்றது. எனவே இது முதனிலைக் குணத்தீவகமாயிற்று.

### 2. முதனிலைத் தொழில் தீவகம்

முதற்கண் நிற்கும் தொழிலை உணர்த்தும் சொல், செய்யுளின் பிற சொற்களோடு இயைந்து பொருள்படுதலே முதனிலைத் தொழில் தீவகமாகும்.

**(எகா) சரியும் புனைசங்கும் தண்தளிர்போல் மேனி**

**வரியும் தனதடம்சூழ் வம்பும் - திருமான**

**ஆரம் தழுவும் தடந்தோள் அகளங்கன்**

**கோரம் தொழுத கொடிக்கு.**

பொருள் : திருமகள் தங்கும் சிறப்பினையும் முத்துமாலை அணிந்து அழகியதாய் விளங்கும் தோள்களையும் உடையவன் குற்றமில்லாத சோழ அரசன். அவனுடைய குதிரையைப் பூங்கொடி போன்ற ஒரு பெண் வணங்கினாள். அப்போது அப்பெண்ணின் 1. கைவளையல்கள் சரிந்தன 2.குளிர்ச்சி பொருந்திய தளிரைப் போன்ற அவளுடைய உடலின் அழகு சரிந்தது 3. பெரிய மார்புகளின் மீது கட்டிய கச்சும் சரிந்தது.

இப்பாடலின் முதலில் நிற்கும் சரியும் என்னும் வினைச்சொல் சங்கு சரியும், வரி சரியும், வம்பு சரியும் எனப் பொருள் கொள்ள நின்றது. எனவே இது முதனிலைத் தொழில் தீவகமாயிற்று.

### 3. முதனிலைச் சாதித்தீவகம்

சாதியை உணர்த்தும் சொல் முதலில் நின்று அது செய்யுளின் ஏனைய சொற்களோடும் இயைந்து பொருள் புலப்படுத்துவது முதனிலைச் சாதித்தீவகமாகும்.

**(எகா)** **தென்றல் அனங்கன் துணையாம்" சிலகொம்பர்**

**மன்றல் தலைமகனாம்? வான்பொருள்மேல் - சென்றவர்க்குச்**

**சாற்றிவிடும் தூதாகும்" தங்கும் பெரும்புலவி**

**மாற்ற வருவிருந்தும் ஆம்.**

பொருள் : தென்றல் காற்றானது ஆசையைத் தூண்டுவதால்1.மன்மதனுக்குத் துணையாகும் 2. தன் வரவால் சில பூங்கொம்புகளாகிய பெண்கள் தளிர்த்தலால் அவற்றுக்குக் கணவனாகும் 3. பெரும் பொருளுக்காகத் தம்மைப் பிரிந்து சென்ற காதலருக்குத் தம் துன்பநிலையைக் கூறி விடுக்கின்ற தூதாகும் 4. ஊடல் கொண்டிருந்த பெண்டிருக்கு இன்ப உணர்ச்சியைத் தூண்டி ஊடலை நீக்கும் வாயிலாகிய விருந்தினராகவும் அமையும்.

தென்றல் என்பது காற்றுச் சாதியுள் ஒன்று. கிழக்கில் இருந்து வீசுவது கொண்டல். மேற்கில் இருந்து வீசுவது கோடை. வடக்கிலிருந்து வீசுவது வாடை. தெற்கிலிருந்து வீசுவது தென்றல்.

இப்பாடலின் முதற்கண் நின்ற இச்சொல் துணை, தலைமகன். தூது, விருந்து ஆகிய சொற்களிடத்துச் சென்று இயைந்து பொருள் விளக்கியதால் முதனிலைச் சாதித் தீவகமாயிற்று.

### 4.முதனிலைப் பொருள் தீவகம்

செய்யுளின் முதலில் நிற்கும் பொருட்பெயர், பிற சொற்களோடும் சென்று பொருந்திப் பொருள்புலப்படுத்துவது முதனிலைப் பொருள் தீவகமாகும்.

**(எகா)** **முருகவேள் சூர்மா முதல்தடிந்தான் வள்ளி**

**புரிகுழல்மேல் மாலை புனைந்தான்:- சாண்அளித்து**

**மேலாய வானோர் லியன்சேனை தாங்கினான்:**

**வேலால் இடைகிழித்தான் வெற்பு.**

பொருள்: முருகவேள் 1. சூரபதுமனாகிய மாமரத்தை வேரொடும் சாய்த்தான் 2. வள்ளியம்மையின் அழகிய கூந்தலில் மாலையைப் புனைந்தான் 3. மேன்மை பொருந்திய தேவர்களுக்கு அடைக்கலம் தந்து அவர்களுடைய படையைக் (சேனையைக்) காத்தான் 4. தன்னுடைய வேல்படையால் கிரவுஞ்ச மலையை இரண்டாகப் பிளந்தான்.

இப்பாடலில் முதல் நிற்கும் பொருட்பெயர் முருகவேள் என்பதாகும். அப்பெயர் தடிந்தான், புனைந்தான், தாங்கினான். கிழித்தான் என்னும் சொற்களோடு இயைந்து பொருளை விளக்கியதால் முதனிலைப் பொருள் தீவகமாயிற்று.

## 2. இடைநிலைத் தீவகம்

### இடைநிலைக் குணத் தீவகம்

1. செய்யுளின் இடையில் நின்று" குணப்பொருள் உணர்த்தும் சொல், பிற சொற்களோடு சென்று இயைந்து பொருள்படுவது இடைநிலைக் குணத் தீவகமாகும்.

**(எகா)** **எடுத்த நிரைகொணா என்றலுமே வென்றி**

**வடித்(து)இலங்கு வைவாளை வாங்கத் - துடித்தனவே**

**தண்ணார மார்பும்" தடந்தோளும் வேல்விழியும்**

**எண்ணாத மன்னர்க்(கு) இடம்.**

பொருள்: தாம் கவர நினைத்த ஆனிரைகளைக் (பசுக்களைக்) கொண்டு வருக என அரசன் கூறினான். உடனே அவ்அரசனுடைய வீரன் வெற்றி பொருந்திய கூரிய வாளைத் தன் வலக்கையில் ஏந்தினான். அவ்வளவில் பகைவர்களின் குளிர்ச்சி பொருந்திய முத்துமாலை அணிந்த 1. மார்பும் 2.அகன்ற கையும் 3. வேல் போன்ற நீண்ட கண்ணும் இடப்பக்கம் துடித்தன.

இப்பாடலின் இடையில் நின்ற துடித்தல் என்னும் சொல் பண்பு குறித்த சொல். இது மார்பு துடித்தது, கை துடித்தது, கண் துடித்தது என மூன்று சொற்களோடு இயைந்து பொருள்பட்டதால் இடைநிலைக் குணத்தீவகம் ஆயிற்று.

துடித்தல் என்பது தொழில் தன்மையாயினும் கண் துடித்தல் என்பது தீயநிமித்தம் உணர்த்துதலால் பண்பாயிற்று.

### 2. இடைநிலைத் தொழில் தீவகம்

இடையில் நின்று தொழிலை உணர்த்தும் சொல், ஏனையவற்றொடும் சென்று இயைந்து பொருள்படுவது இடைநிலைத் தொழில் தீவகமாகும்.

**(எகா)** **எடுக்கும் சிலைநின்று எதிர்ந்தவரும் கேளும்**

**வடுக்கொண்(டு) உரந்துணிய வாளி தொடுக்கும்**

**கொடையும் திருஅருளும் கோடாத செங்கோல்**

**நடையும் பெரும்புலவர் நா.**

பொருள்: ஓர் அரசன் தன் கையில் ஏந்திய வில்லில் அம்புகளை வைத்துத் தொடுத்தான். அதனால் அவனை எதிர்த்த அரசர்களும் அவர்களுக்கு உறவாயினோரும் மார்பு அறுபட்டு வீழ்ந்தனர். அவ்அளவில் புலவர்களின் நாவானது அப்பேரரசனின் கொடையையும், அவனுடைய அருட் குணத்தையும் செங்கோலின் திறத்தினையும் பாக்களில் தொடுத்துப் புகழ்வதாயின.

இப்பாடலின் இடையில் நின்ற தொழிற்சொல் தொடுக்கும் என்பதாகும். அது கொடை, அருள், நடை என்னும் சொற்களோடு இயைந்து பொருள் தந்ததால் இடைநிலைத் தொழில் தீவகமாயிற்று.

### 3. இடைநிலைச் சாதித்தீவகம்

இடையில் நின்று சாதியை உணர்த்தும் சொல். ஏனையவற்றொடும் சென்றியைந்து பொருள் புலப்படுத்துவது இடைநிலைச் சாதித் தீவகமாகும்.

(எகா) **கரமருவு பொற்றொடியாம் காலில் கழலாம்:**

**பொருவில் புயவலயம் ஆகும்'3 - அர(வு)அரைமேல்**

**நாணாம் அரற்கு, நகைமணிசேர் தாழ்குழையாம்,**

**பூணாம், புனைமாலை யாம்.**

பொருள் : நல்ல பாம்பானது சிவபெருமானுக்குக் 1. கையில் பொருந்திய அழகிய வளையலாகும் 2. காலில் அணியும் வீரக் கழலாகும். 3. ஒப்பில்லாத தோள் வளையமாகும் 4. இடுப்பில் அணிகின்ற அரைஞாண் 5. அழகிய காது வளையமாகும் 6. மற்றும் பல அணிகளாம் 7. அழகிய மாலையும் ஆகும்.

இப்பாடலின் இடையில் நின்ற சொல் அரவு என்பதாகும். இது பாம்பினுள் ஒரு சாதியாகிய நல்ல பாம்பினைக் குறிப்பதாகும். இச்சொல் தொடி, கழல், புயவலயம், அரைஞாண், குழை, அணி, மாலை ஆகிய சொற்களோடு இயைந்து நின்று பொருள் புலப்படுத்துவதால் இடைநிலைச் சாதித் தீவகமாயிற்று.

### 4. இடைநிலைப் பொருள் தீவகம்

இடையில் நின்று பொருளை உணர்த்தும் சொல், பிற சொற்களோடு சென்று இயைந்து பொருள் புலப்படுத்துவது இடைநிலைப் பொருள் தீவகமாகும்.

(எகா) **மான்அமரும் கண்ணாள் மணிவயிற்றில் வந்(து)உதித்தான்!**

**தானவரை என்றும் தலைஅழித்தான் - யானைமுகன்**

**ஓட்டினான் வெங்கலியை' பகலியை" உள்ளத்(து) இனி(து)அமர்ந்(து)**

**வீட்டினான் நம்மேல் வினை.**

பொருள் : மடப்பம் பொருந்திய மானின் பார்வையை ஒத்த கண்ணிலை உடையவள் உமாதேவி. 1. அவளுடைய அழகிய திருவயிற்றில் இருந்து பிறந்தான் விநாயகப் பெருமான் 2. அவன் எப்போதும் அசுரர்களை அழித்தான் 3. கொடிய வறுமையைப் போக்கியவன் 4. உள்ளத்தின் கண்ணே இனியதாய் வீற்றிருந்து நம்முடைய கன்ம வினைப்பகையை ஓடச்செய்தான்

இப்பாடலின் இடையில் நிற்கும் சொல் யானைமுகன். இச்சொல் பொருள் குறித்த சொல்லாகும். இது உதித்தான், அழித்தான், ஓட்டினான். வீட்டினான் என்னும் சொற்களோடு இயைந்து பொருள் தந்தது. ஆகையால் இடைநிலைப் பொருள் தீவகமாயிற்று.

### 3. கடைநிலைத் தீவகம்

#### 1. கடைநிலைக் குணத்தீவகம்

இறுதியில் நின்று குணத்தை உணர்த்தும் சொல்,ஏனைய சொற்களோடு சென்றியைந்து பொருளைப் புலப்படுத்துவது கடைநிலைக் குணத் தீவகமாகும்.

**(எகா)** **ஒருவன் அறிவானும் எல்லாமியா(து)**

**ஒன்றும் ஒருவன் அறியா தவனும் - ஒருவன்**

**குணம்அடங்கக் குற்றம் உளானும் ஒருவன்**

**கணன்அடங்கக் கற்றானும் இல்.**

பொருள்: 1.எல்லாவற்றையும் அறிந்த ஒருவன் இவ்உலகத்தில் இல்லை 2. யாதொன்றையும் அறியாதவனும் இவ்உலகத்தில் இல்லை 3. முழுமையும் நற்குணங்களைப் பெற்ற ஒருவனும் இல்லை. முழுமையும் தீய குணங்களைப் பெற்றவனும் இல்லை 4. இவற்றைப் போல அனைத்துக் துறைகளையும் கற்றறிந்தவனும் இல்லை.

இல் என்பது இல்லாமையை உணர்த்தும் பண்புச்சொல் ஆகும். இது ஈற்றில் நின்று அறிவானும் இல்' அறியாதவனும் இல்' உளானும் இலானும் இல்' கற்றானும் இல் என முன் உள்ள சொற்களோடு பொருந்திப் பொருள் தந்தது. எனவே இது கடைநிலைக் குணத் தீவகமாயிற்று.

#### 2. கடைநிலைத் தொழில் தீவகம்

இறுதியில் நின்று தொழிலை உணர்த்தும் சொல், பிற சொற்களோடு சென்றியைந்து பொருள்புலப்படுத்துவது கடைநிலை தொழில் தீவகமாகும்.

**(எகா)** **துற(வ)உளவாச் சான்றோர் இளிவரவும்! தூய**

**பிறஉளவா ஊன்துறவர் ஊணும் - பறைகறங்கக்**

**கொண்டான் இருப்பக் கொடுங்குழையாள் தெய்வமும் ஒன்(று)**

**உண்டாக வைக்கற்பாற்(று) அன்று**

பொருள்: 1. மெய்யுணர்வு பெற்ற ஞானியர்களுக்குச் சிறந்த துறவு நெறி இருக்க மற்றைக் கூடா ஒழுக்கம் கொள்ளுதல் 2. தூய்மையான நல்ல உணவுகள் இருக்க ஊன் கலந்த உணவு உளதாதல் 3. மணமுரசு ஒலிக்க மணந்து கொண்ட பெண்ணுக்கு அக்கணவன் இருக்கப் பிறிதொரு தெய்வத்தை வணங்குதல் ஆகியவை மதிக்கத்தக்கது அன்றாம்.

வைக்கப்பாற்றன்று என்பது ஒரு சொல் நீர்மைத்து. அதற்கு மதிக்கத்தக்கதன்று என்பது பொருள். இது வினைச் சொல்லாகும். இச்சொல் இளிவரவு, ஊன், தெய்வம் என்னும் சொற்களுடன் பொருந்தி நின்று பொருள் தந்ததால் இது கடைநிலைத் தொழில் தீவகம் ஆயிற்று.

### 3. கடைநிலைப் பொருள் தீவகம்

இறுதியில் நின்று பொருளை உணர்த்துகின்ற பெயர்ச்சொல், பிற சொற்களோடு இயைந்து பொருள் புலப்படுத்துவது கடைநிலைப் பொருள் தீவகமாகும்.

**(எகா)** **புறத்தன ஊரன நீரன மாவின்**

**திறத்தன கொல்சே ரியவே - அறத்தின்**

**மகனை முறைசெய்தான் மாவஞ்சி ஆட்டி**

**முகனை முறைசெய்த கண்.**

பொருள் : கன்றினைக் கொன்ற குற்றத்திற்காகத் தன் மகனைத் தேர்க்காலில் இட்டுக் கொன்றவன் மனுநீதிச் சோழன். அச்சோழனின் மேன்மை பொருந்தியது வஞ்சி என்னும் நகரமாகும். அந்நகரில் உள்ள பெண்களின் முகத்தை அழகு செய்பவை அவர்தம் கண்கள். அவை 1. வெளியிடத்துள்ள மான்களின் கண்களைப் போன்றன 2. நாட்டின்கண் உள்ள அம்புகளை ஒப்பன 3. நீரின்கண் உள்ள தாமரையைப் போன்றன 4. மாவடுக்களைப் பிளந்தாற் போன்றன 5. கொல்லர்களின் சேரிகளில் செய்யப்படும் வாளைப் போன்றன.

இப்பாடலின் இறுதியில் இடம்பெற்ற கண் என்னும் பொருள் குறித்த சொல் புறம், ஊர், நீர், மாவடு, கொல்சேரி என்னும் சொற்களோடு இயைந்து பொருள் உணர்த்தியதால் இது கடைநிலைப் பொருள் தீவகமாயிற்று.

### வேற்றுமையணி

கவிஞன் ஒப்புமை உடைய இரு பொருள்களை எடுத்துக் கொண்டு முன்னர் அவற்றுக்குரிய ஒப்புமையைக் கூறுவான். பின்னர் வேற்றுமையையும் கூறி வேறுபடுத்துவது வேற்றுமையணி ஆகும். அதாவது இருபொருள்களுக்குள் உயர்வோ, தாழ்வோ தோன்ற உரைப்பதாகும்.இதனை வீரசோழியம் “விதிரேகம்“ எனக் கூறுகிறது. வடநூல் “வியதிரேகம்“ எனக் குறிக்கிறது. (வியதிரேகம் : எதிர்மறை -மாறுபாடு உறழ்ச்சி)

### வேற்றுமையணியின் இலக்கணம் (2)

**கூற்றினும் குறிப்பினும் ஒப்புடை இருபொருள்**

**வேற்றுமைப் படவரின் வேற்றுமை அதுவே.**

ஒப்புடைய இரு பொருள்களைத் தம்முள் வேறுபடுத்திக் கூறுவது வேற்றுமையணி ஆகும். அது 1. கூற்றினாலோ 2. குறிப்பினாலோ அமையும்.

கூற்றாவது சொற்களால் வெளிப்படையாக அறிவிப்பது. குறிப்பாவது சொல்லுக்கு வேறாக உய்த்துணரும்படி நிற்பது. இவ்வேற்றுமை, சமமும் உயர்வும் தாழ்வும் தோன்ற வருவதாகும்.

வேற்றுமை என்னாது அதுவே என்ற மிகையால் அவை 1. ஒருபொருளான் வேற்றுமை செய்தலும் 2. இருபொருளான் வேற்றுமை செய்தலும் உடையன.

**1. ஒருபொருள் வேற்றுமைச் சமம்**

ஒத்த இரு பொருள்களை எடுத்துக்கொண்டு அவற்றுள் ஒன்றற்கு ஒரு வேற்றுமையைக் கூறிப் பிற ஒப்புமைத் தன்மைகளால் சமப்படுத்துவது ஒருபொருள் வேற்றுமைச் சமமாகும். (இது கூற்றான் அமைந்த வேற்றுமை)

(எகா) **அனைத்(து)உலகும் சூழ்போய் அரும்பொருள் கைக்கொண்(டு)**

**இனைத்(து)அளவைத்(து) என்றற்(கு) அரிதாம் -பனிக்கடல்**

**மன்னவநின் சேனைபோல் மற்றது நீர்வடிவிற்(று)**

**என்னும் இதுஒன்றே வேறு.**

பொருள் : அரசனே! 1. முழு உலகத்தையும் சூழ்ந்திருத்தல் 2. அரிய பொருள்களைத் தன்னிடத்தே கொண்டிருத்தல் 3. இன்ன அளவினை உடையதென அளத்தற்கு அருமையுடையதாதல் ஆகிய தன்மைகளைக் கொண்டது கடல். 1. எல்லா நாட்டையும் கைப்பற்றுதல் 2. பல நாட்டு அரசர்களின் அரிய செல்வங்களைப் பெற்றிருத்தல் 3. இத்துணை என்று எண்ணிக்கையால் எண்ணுவதற்கு அரியதாதல் ஆகிய தன்மைகளை உடையது உன்னுடைய படை. இவ்இரண்டும் ஒத்த தன்மை வாய்ந்தன. ஆயினும் கடல், நீராகிய வடிவைக் கொண்டது என்னும் குணத்தால் வேறுபட்டுள்ளது.

இப்பாடலில் ஒப்புமை கூறப்பட்ட பொருள்கள் இரண்டு 1.கடல் 2. படை என்பனவாம். இவ்இரண்டும் மூன்று காரணங்களால் ஒத்து நின்றன. ஆனால் நீர் வடிவத்தைக் கொண்டது என அக்கடல் வேற்றுமைப்படுத்தப்பட்டது. ஆயினும் கடலுக்கும் படைக்கும் உயர்வு. தாழ்வு கூறப்படாமல் அவை இரண்டும் ஒப்புமையுடையதாகக் காட்டப்பட்டுள்ளன. எனவே இது ஒருபொருள் வேற்றுமைச் சமமாயிற்று.

**2. இருபொருள் வேற்றுமைச் சமம்**

இரண்டு பொருள்களை எடுத்துக் கொண்டு ஒப்புமை கூறிப் பின்னர் அவ்இரு பொருள்களுக்கும் வேறுபாடு கூறுவது இருபொருள் வேற்றுமைச் சமம் ஆகும். (இது கூற்றான் அமைந்த வேற்றுமை)

(எகா) **சென்று செவிஅளக்கும் செம்மையவாய்ச் சிந்தைஉள்ளே**

**நின்றளவில் இன்பம் நிறைப்பவற்றுள் - ஒன்று**

**மலர்இவரும் கூந்தலார் மாதர்நோக்(கு) ஒன்று**

**மலரிவரும் கூத்தன்தன் வாக்கு.**

பொருள்: உலவிச் சென்று காதை அளவிடும் செம்மையை உடையனவாய் மனத்துள் தங்கிய அளவில் எல்லையில்லாத இன்பத்தைச் செய்வன இரண்டு. அவற்றுள் ஒன்று மலர்கள்

பொருந்திய கூந்தலை உடைய பெண்ணின் அழகிய கண்ணாகும். மற்றொன்று மலரி என்னும் ஊரில் தோன்றிய ஒட்டக்கூத்தன் என்னும் இயற்பெயருடைய புலவனின் கவிதையாகும்.

இப்பாடலில் ஒப்புமை கூறப்பட்ட பொருள்கள் இரண்டு. அவற்றுள் ஒன்று கண். மற்றொன்று கூத்தனின் கவிதை.

கண்: 1. நீண்டு காணப்படும் தன்மையால் காதுவரை சென்று அளக்கக் கூடிய இயல்பு கொண்டது 2. காதலோடு கூடிய நோக்கைப் பிறர் மனத்துள் பதித்தவுடன் நிறைந்த மகிழ்ச்சியை அவர்க்குச் செய்யும் இயல்பு கொண்டது.

கூத்தன் வாக்கு : 1. உலகத்தாரின் கேட்கும் தன்மை கொண்ட செவியால் அளந்தறியப்படுவது 2. கேட்போரின் மனங்களைப் பற்றி நின்று அளவில்லாத இன்பத்தைத் தோன்றச் செய்வது.

இவ்இரு பொருள்கள் ஒவ்வொன்றும் இரு இயல்புகளால் ஒற்றுமைப்படுத்திக் கூறப்பட்டன. பின்னர் இத்தன்மைகளைக் கொண்ட பொருள்களுள் ஒன்று மாதர் நோக்கு' மற்றொன்று கூத்தன் தன் பாட்டு என்று வேறுபாடு கூறப்பட்டது. ஆயினும் ஒன்றற்கு ஒன்று உயர்வு, தாழ்வு இன்மையால் இது இருபொருள் வேற்றுமைச் சமமாயிற்று.

### 3. உயர்ச்சி வேற்றுமை

ஒரு பொருளுக்குக் காட்டப்படும் உவமையை விட அப்பொருள் உயர்வுடையது எனக் கூறி வேற்றுமைப்படுத்துவது உயர்ச்சி வேற்றுமை ஆகும். (இது கூற்றான் அமைந்த வேற்றுமை)

**(எகா) மலிதேரான் கச்சியும் மாகடலும் தம்முள்**

**ஒலியும் பெருமையும் ஒக்கும்' - மலிதேரான்**

**கச்சி படுவ கடல்படா சுச்சி**

**கடல்படுவ எல்லாம் படும்.**

பொருள் : 1. மிகுதியான தேர்ப்படையைப் பெற்றவன் எம் அரசன். அவனுக்கு உரியதாக விளங்குவது காஞ்சி மாநகரமாகும். அந்நகரமும் பெரிய கடலும் தமக்குள் ஒலியாலும் பெருமையாலும் ஒத்து விளங்குவன 2.ஆயினும் தேர்கள் நிறைந்த காஞ்சிபுரத்தில் உள்ள பொருள்கள் எல்லாம் கடலின்கண் காணப்படா கடலில் காணப்படுகின்ற பொருள்கள் எல்லாம் காஞ்சிபுரத்தில் காணப்படுவனவாம்.

இப்பாடலில் ஒப்புமை உடையனவாகக் குறிக்கப்பட்ட பொருள்கள் இரண்டு, அவை கச்சியாகிய 1. காஞ்சிபுரமும் 2. கடலும் ஆகும். இவ்இரண்டும் ஒலியாலும் பெருமையாலும் ஒத்தன என முதலில் ஒப்புமையாக்கப்பட்டன. கடலைவிடக் காஞ்சிபுரம் உயர்ந்ததெனப் (கடல்படுவ எல்லாம் கச்சி படும்) பின்னர்க் கூறி வேற்றுமை செய்ததால் இது உயர்ச்சி வேற்றுமை ஆயிற்று.

### 4. இருபொருள் வேற்றுமைச் சமம்

இரு பொருள்களுக்குரிய ஒப்புமையைக் கூறிப் பின் அவற்றுக்குரிய வேறுபாட்டைக் காட்டி ஒப்புமைப்படக் கூறுவது பொருள் வேற்றுமைச் சமமாகும். (இது குறிப்பான் அமைந்த றுமை)

(எகா) **கார்க்குலமும் பாய்திரையும் காட்டும் கடல் படையும்**

**போர்க்களிறும் பாய்மாவும் பொங்(கு)மால், - ஏற்ற**

**கலம்உடைத்(து) முந்நீர்’ கதிர்வூழித் திண்தேர்**

**பலஉ பலஉடைத்(து) வேந்தன் படை.**

பொருள் : கரிய கடலானது 1. மேகக்கூட்டங்களையும் 2. பாய்ந்து ல்லுகின்ற அலைகளையும் உடையது. சோழனுடைய படையானது 1. பார்த்தொழில் மிக்க யானைகளையும் 2. பாயும் குதிரைகளையும் மிகுதியாகக் கொண்டது.

கடல் பல பொருள்களையும் ஏற்றிச் செல்லும் மரக்கலங்களை உடையது.சோழனின் படை கதிரவனைப் போன்று ஒளி விக்கி சக்கரத்தை உடைய வலிமையான தேரினை உடையது. இப்பாடலுள் கடல் மேகக் கூட்டம், பாய்திரை என்னும் இரண்டையும் உடையது. படை கரியயாவை, பாயும் குதிலர என்னும் இரண்டையும் உடையது. இவ்வாறு முதலில் ஒப்புமை கூறப்பட்டன. மேகம் போல் யானை, திரை போல் குதிரை என்பன குறிப்பால் உணர்த்தப்பட்டன.

பின்னர்த் கடல் கலமுடையது’ படை தேர் உடையது என் வேற்றுமை கூறப்பட்டது. இரண்டுக்கும் உயர்வு, தாழ்வு கூறப்படாததால் சமமாயிற்று,ஆகலின் இது இருபொருள் வேற்றுமைச் சமமாயிற்று.

**5.உயர்ச்சி வேற்றுமை**

ஒப்புமை காட்டப்பட்ட பொருள்களுள் ஒன்றற்கு உயர்ச்சி கூறி வேறுபடுத்துவது உயர்ச்சி வேற்றுமை ஆகும். (இது குறிப்பான் அமைந்த வேற்றுமை)

**(எகா)** **பதுமம் களிக்கும் அளிஉடைத்து பாவை**

**வதனம் மதர்நோக்(கு) உடைத்து, - புதைஇருள்சூழ்**

**அப்போது இயல்(பு)அழியும் அம்போ ருக, வதனம்**

**எப்போதும் நீங்கா(து) இயல்பு.**

பொருள் : 1. தாமரை மலர் தன்னிடத்து வண்டுகளை உடையது 2. இப்பெண்ணின் முகமும் தன்னிடத்து மதர்த்த கண்களை உடையது 3. ஆயினும் இருள் சூழ்கின்ற மாலை நேரத்தில் தாமரையின் இயல்பு கெடும் 4பெண்ணின் முகமோ எப்போதும் இயல்பு கெடாது ஒரு தன்மைத்தாய் விளங்கும்.

இப்பாடலில் ஒப்புமை கூறப்பட்ட பொருள்கள் 1. தாமரை 2.பெண்ணின் முகம். இவ்இரண்டும் முறையே வண்டினையும் கண்களையும் பெற்று ஒப்புடையவாயின. பின்னர் எப்போதும் மலர்ச்சியுடன் இருக்கும் தன்மை முகத்திற்கு உண்டெனத் தாமரையை விட உயர்வு கூறப்பட்டது. எனவே உயர்ச்சி வேற்றுமை ஆயிற்று.

வண்டுகளுக்குக் கண்கள் ஒப்புமை உடைமையைக் குறிப்பால் உணர்த்தியமையால் இது குறிப்பான் வந்த வேற்றுமையின் விரியாகும்.

**வேற்றுமை அணியின் வகைகள் (4)**

**அதுவே,**

**குணம் பொருள் ²சாதி 3 தொழிலொடும் 4 புணரும்.**

அவ்வேற்றுமை அணியானது 1. குணத்தோடும் 3. பொருளோடும் 3. சாதியோடும் 4 தொழிலோடும் கூடியும் வரும்.

**1. குண வேற்றுமை**

இரண்டு பொருள்களை எடுத்துக்கொண்டு அவற்றின் குணங்களை வேறுபடுத்திக் கட்டுவது குணவேற்றுமை ஆகும்.

**சுற்றுவில் காமனும் சோழர் பெருமானாம் கொற்றப்போர்க**

**கிள்ளியும் கேழ்ஒவ்வார் - பொற்றொடியே!**

**ஆழி உடையான் மகன்மாயன்: செய்யனே**

**கோழி உடையான் மகன்.**

பொருள்: பொன்னால் ஆகிய தொடியினை அணிந்த பெண்ணே நாணால் இழுத்துக் கட்டப்பட்ட வில்லினை ஏந்தியவன் காமன். பெருமைக்குரிய சோழர் மரபில் தோன்றிப் போர் ஆற்றலில் பிறரை வெற்றி காணும் தன்மை கொண்டவன் கிள்ளிவளவன். அவ்விருவரும் நிறத்தால் ஒருவரை ஒருவர் ஒப்பாக மாட்டார். சக்கரப் படையைக் கையில் கொண்டுள்ள திருமாலின் மகனாகிய மன்மகன் கரிய நிறத்தை உடையவன், கோழி என்னும் ஊரை உடையவனாகிய சோழனுடைய மகன் சிவந்த நிறத்தை உடையவன்.

இப்பாடலில் கூறப்பட்டவர்கள் மன்மதனும் சோழனும் ஆவர். அவர்கள் இருவரும் கருமை, செம்மை என்னும் நிறத்தால் (குணத்தால்) வேற்றுமைப்படுத்திக் காட்டப்பட்டதால் இப்பாடல் குண வேற்றுமை ஆயிற்று.

**2. பொருள் வேற்றுமை**

தொழிலால் ஒப்புமையுடையவற்றை எடுத்துக்கொண்டு அவற்றைப் பொருளால் வேறுபடுத்திக் காட்டுவது பொருள் வேற்றுமை ஆகும்.

**(எகா)** **ஓங்கல் இடைவந்(து) உயர்ந்தோர் தொழவிளங்கி**

**ஏங்கொலிநீர் ஞாலத்(து) இருள்அகற்றும் - ஆங்கவற்றுள்**

**மின்னேர் தனிஆழி வெங்கதிர்ஒன்(று)' ஏனையது**

**தன்னேர் இலாத தமிழ்.**

பொருள்: 1.மலையில் தோன்றிய இயல்புடையது 2. மேன்மக்களால் தொழுது வணங்கப்படுவது 3. இடைவிடாது மிக்கொலிக்கும் கடல் சூழ்ந்த உலகத்து இருளை அகற்றுவது என்னும் குணங்களைப் பெற்ற பொருள்கள் இரண்டு. அவற்றுள் ஒன்று ஒளியுடன் அழகும் கூடிய

ஒற்றைச் சக்கரத்தை உடைய சூரியன். ஏனையது தனக்கு ஒப்புமை கூற முடியாததாய் விளங்கும் தமிழ் மொழியாகும்.

இப்பாடலில் கூறப்பட்ட பொருள்கள் இரண்டு. அவை 1.சூரியன் 2.தமிழ் என்பனவாம்.

சூரியன் : 1. உதயகிரியில் தோன்றுதல் 2. மேன்மக்களால் தொழப்படுதல் 3. இருள் அகற்றுதல் ஆகிய மூன்று குணங்களை உடையது.

தமிழ்: 1. பொதிய மலையில் தோன்றியமை 2. அறிவுடையோர் தொழுதேத்தும்படி விளங்குதல் 3. அறியாமை யாகிய இருளை அகற்றுதல் ஆகிய மூன்று குணங்களை உடையது.

ஆயினும் இவ்இரண்டும் தொழிலால் ஒன்றுபட்டும் பொருளால் வேறுபட்டவை என்பதைக் காட்டுவதால் இது பொருள் வேற்றுமை ஆயிற்று.

### 3. சாதி வேற்றுமை

ஒரு சாதிக்குரிய பொருள்களை ஒன்றாக வைத்து அவற்றிடையே வேற்றுமை தோன்றக் கூறுவது சாதி வேற்றுமை ஆகும்.

**(எகா)** **வெங்கதிர்க்கும் செந்தி விரிசுடர்க்கும் நீங்காது**

**பொங்கு மதி ஒளிக்கும் போகாது -தங்கும்**

**வளமையான் வந்த மதிமருட்சி மாந்தர்க்(கு)**

**இளமையான் வந்த இருள்.**

பொருள்: 1. வெம்மையான கதிர்களை உடைய சூரியனுக்கும் நீங்காது 2. சிவந்த நிறமாய் விரிகின்ற விளக்கிற்கும் விலகாது 3. பொங்கி எழுந்து வருகின்ற சந்திரனின் ஒளிக்கும் போகாது. இளமைப் பருவத்தில் வாய்த்த செல்வக் களிப்பால் உருப்பெற்ற அறியாமையாகிய இருள்.

இப்பாடற்கண் மருட்சி, இருள் என்னும் இருபொருள்கள் ஒப்புமைப்படுத்தப்பட்டன. மருட்சி என்பது அக இருள். இருள் என்பது புற இருள். இவை இரண்டும் இருள் என்னும் ஒரு சாதியினைச் சார்ந்ததாகும். இவற்றுள் புறஇருள் சூரியனாலும் விளக்காலும் சந்திர ஒளியாலும் நீங்கும். இம்மூன்றாலும் நீங்காதது மருட்சி எனக் குறிப்பால் வேற்றுமைப்படுத்தப்பட்டதால் இது சாதி வேற்றுமை ஆயிற்று.

### 4.தொழில் வேற்றுமை

தொழிலால் ஒற்றுமை உடைய இரு பொருள்களை வைத்து அவற்றைத் தொழில் நிகழ்ச்சியால் வேறுபடுத்திக் காட்டுவது தொழில் வேற்றுமையாகும்.

**(எகா)** **புனல்நாடர் கோமானும் பூந்துழாய் மாலும்**

**வினைவகையான் வேறு படுவர் - புனல்நாடன்**

**ஏற்(று)எறிந்து மாற்றலர்பால் எய்தியபார் மாயவன்**

**ஏற்(று)இரந்து கொண்டமையி னால்.**

பொருள்: நீர் நாட்டின் கோமகனாக விளங்குபவன் சோழன். அழகினை உடைய துளசி மாலையை அணிந்தவன் மாயனாகிய திருமால். அவ்இருவரும் தொழிலால் வேறுபட்டவர்கள். சோழன் போர்க்களத்தில் நின்று பகைவர் தன்மீது எறிந்த வேலைத் தாங்கியும் தன்னுடைய வேலைப் பகைவர் மீது எறிந்தும் அவர்தம் நாட்டைக் கைப்பற்றுவான். ஆனால் மாயம் செய்வதில் வல்லவனான திருமாலோ பிறர் நீர்ஊற்றித் தாரை வார்த்துக் கொடுப்பதையும் பிறரிடம் இரந்து (யாசித்துப்) பெறுவதையும் தொழிலாகக் கொண்டவன்.

## தற்குறிப்பேற்றவணி

இயல்பாக நிகழும் நிகழ்ச்சி ஒன்றின் மேல் கவிஞன் தான் கூறக் கருதிய பொருளை ஏற்றிச் சுவைபட உரைப்பது தற்குறிப்பேற்ற அணியாகும்.ஒன்றை வேறொன்றாகச் சிந்தித்துச் சொல்லுவதே இவ்அணியாகும். அணிகளுள் சிறந்ததாகக் கருதப்படும் இவ்அணியைக் கவிஞன் உடன்பாட்டுக்கும் எதிர்மறைக்கும் பயன்படுத்துவான். பல இலக்கியங்களில் கவிஞனின் கற்பனை ஆற்றலையும் சிந்திக்கும் திறனையும் அறிவதற்கு இ∴து ஒரு கருவியாக அமைகிறது. இதற்கு நோக்கணி, தற்குறிப்பணி என்னும் பெயர்களும் உண்டு. வடநூலார் இதனை "உற்பிரேட்சை அலங்காரம்" என உரைப்பர்.

### தற்குறிப்பேற்ற அணியின் இலக்கணம் (2)

**பெயர்பொருள் அல்பொருள்" எனஇரு பொருளினும்**

**இயல்பின் விளைதிறன் அன்றி அயல்ஒன்(று)**

**தான்குறித்(து) ஏற்றுதல் தற்குறிப் பேற்றம்**

பொருள்கள் 1. இயங்கு பொருள் (பெயரும் பொருள்) 2. இயங்காப் பொருள் (பெயராப் பொருள்) என இருவகைப்படும். அவ்இருபொருள்களுக்கும் இயல்பாக நிகழும் நிகழ்ச்சிகள் உள. ஒரு பொருளின் இயல்புத் தன்மையை விடுத்துக் கவிஞன் தான் கருதிய வேறொன்றனை அவற்றின் மீது ஏற்றிச் சொல்லுவதே தற்குறிப்பேற்றம் என்னும் அணியாகும். தன் குறிப்பை ஏற்றிக் கூறுவதால் தற்குறிப்பேற்றம் ஆயிற்று. குறிப்பு என்பது ஈண்டுக் கருத்து எனப் பொருள்படும்.

### 1.பெயர் பொருள் தற்குறிப்பேற்றம்

இயங்குகின்ற பொருளில் இயல்பாக நடக்கும் நிகழ்ச்சி மீது தன் கருத்தை ஏற்றிக் கூறுவது பெயர் பொருள் தற்குறிப்பேற்றம் ஆகும்.

**(எகா)** **மண்படுதோள் கிள்ளி மதயானை மாற்(று)அரசர்**

**வெண்குடையைத் தேய்த்த வெகுளியால் - விண்படர்ந்து**

**பாயும்கொல்? என்று பனிமதியம் போல்வதூஉம்**

**தேயும் தெளிவிசும்பில் நின்று.**

பொருள்: நிலவுலகத்தைத் தாங்குகின்ற தோள் வலிமை உடையவன் சோழமன்னன். அச்சோழனின் பட்டத்து யானையானது, போர்க்களத்தின்கண் வெகுண்டு எதிர்த்துப் போரிட்ட பகையரசர்களின் வெண்கொற்றக் குடைகளைச் சீறிப் பாய்ந்து அழித்தது. அச்சினம் தணியாத யானை, குடை போன்ற தன் மேலும் பாயுமோ? என்று குளிர்ச்சி பொருந்திய சந்திரன் அஞ்சியது. ஆதலால் தெளிவுடைய வானத்திலிருந்து தேயத் தொடங்கியது.

இப்பாடலில் கூறப்பட்ட பொருள் சந்திரன். அது ஓரிடத்தில் நில்லாமல் வானின்கண் உலவுவதால் பெயர் பொருளாகும். அது வளர்தலும் தேய்தலும் ஆகிய இயல்புகளைக் கொண்டது. பகைவர் குடைகளை அழித்த யானை, தன்மீதும் பாயும் எனக் கருதித் தேய்பிறையாக மாறியது என்பது கவிஞன் கூற்று. பிறை தேய்தலின் இயல்புக்குத் தன் கருத்தை ஏற்றிக் கூறியதால் இது பெயர் பொருள் தற்குறிப்பேற்றம் ஆயிற்று.

**2.பெயராப் பொருள் தற்குறிப்பேற்றம்**

இயங்காத பொருளில் இயல்பாக நடக்கும் நிகழ்ச்சி மீது தன் கருத்தை ஏற்றிக் கூறுவது பெயராப் பொருள் தற்குறிப்பேற்றம் ஆகும்.

**(எகா)** **வேனில் வெயிற்(கு)உலர்ந்த மெய்வறுமை கண்(டு)இரங்கி**

**வானின் வளம்சுரந்த வண்புயற்குத் தான்உடைய**

**தாதுமே தக்க மதுவும் தடம்சினையால்**

**போதுமீது ஏந்தும் பொழில்.**

பொருள் : முதுவேனில் காலத்தில் கதிரவன் மிகுந்த வெம்மையைச் செய்தான். அதனைப் பொறுக்காமல் சோலைகள் எல்லாம் வாட்டமுற்றன. இதனைக் கண்டு இரக்கமுற்ற முகில் வானத்தின்கண் நின்று மழையைப் பொழிந்து சோலைகளின் வாட்டத்தைப் போக்கியது. அம்முகிலுக்குத் தம்மிடத்து உண்டாகிய மேன்மை மிக்க மகரந்தத்தோடு கூடிய மலர்களையும் தேனையும் தம்முடைய பெரிய கிளைகளாகிய கைகளால் மேல் நோக்கித் தாங்கி நின்றன அச்சோலைகள்.

இப்பாடலில் கூறப்பட்ட பொருள் சோலை. இது பெயராத பொருள். சோலைகளில் இருக்கும் மரங்கள் உயர்ந்து வளர்ந்த கிளைகளில் பூவையும் தேனையும் கொண்டிருத்தல் இயல்பாகும். வெப்பத்தால் வாடிய காலத்தில் மழை பொழிந்தது மேகம். அதற்குக் கைமாறாகத் தன்னிடத்துள்ள பொருள்களைச் சோலைகள் கிளையாகிய கையில் ஏந்தி நின்றன என்பது கவிஞன் ஏற்றிக் கூறிய கருத்தாகும். ஆதலால் இது பெயராப் பொருள் தற்குறிப்பேற்றம் ஆயிற்று.

**ஏதுவணி**

ஒரு பொருளில் தோன்றும் தன்மைக்கு இதனாலேயே இது நிகழ்ந்தது எனக் காரணத்தை மிகுத்துச் சொல்லுவது எது என்னும் அணியாகும். காரணத்தோடு காரியத்தையும் சேர்த்துச் சொல்லுவதும் ஏதுஅணியின் இலக்கணம் ஆகும். ஏது என்பதற்குக் காரணம் என்பது பொருளாகும்.

**ஏதுஅணியின் இலக்கணம் (2)**

**யாதன் திறத்தினும் இதனின்இது விளைந்த(து) என்(று)**

**ஏதுவிதந்(து) உரைப்ப(து) ஏது' அதுதான்**

**காரகம் 1 ஞாபகம் 2 எனஇரு திறப்படும்.**

யாதானும் ஒரு பொருள் திறத்து அதனால் இது நிகழ்ந்தது என்று காரணத்தைச் சிறப்பித்துச் சொல்லுவது ஏது என்னும் அணியாகும். அது 1. காரக ஏது 2. ஞாபசு ஏது என்னும் இரண்டு வகைப்படும்.(காரகம் -தொழிலோடு தொடர்புடையது' ஞாபகம் - அறிவிப்பது.

**காரக ஏதுவின் வகைகள் (6)**

**முதல்வனும் பொருளும் கருமமும் கருவியும்**

**ஏற்பது நீக்கமும் எளஇவை காரகம்.**

1. கருத்தா (முதல்வன்) 2. பொருள் 3. கருமம் 4. கருவி 5. ஏற்பது 6. நீக்கம் என்னும் இவ்ஆறன் காரணமாகத் தோன்றுவது காரக ஏதுவாகும். இவ்ஆறனைச் சிலர் ஏற்பது இல்லை. முதல்வன், பொருள், கருமம்,கருவி என்னும் நான்கும் ஏற்பதும் (நன்மை அளித்தல்) நீக்குவதும் (தீமைசெய்தல்) என்னும் இருவகையாகி வருவன என உரைப்பர்.

**1. கருத்தா காரக ஏது**

கருத்தாவின் செயலைப் பிற தோன்றுவதற்குக் காரணமாகவும் காட்டுவது கருத்தா காரக ஏதுவாகும்.

**(எகா)** **எல்லைநீர் வையகத்(து) எண்ணிறந்த எவ்உயிர்க்கும்**

**சொல்லரிய பேரின்பம் தோற்றியதால் - முல்லைசேர்**

**தா(து)அலைத்து வன்கொன்றைத் தார்அலைத்து வண்(டு)ஆர்க்கப்**

**பூதலத்து வந்த புயல்.**

பொருள்: முல்லை மலரில் சேர்ந்த மகரந்தங்களை உதிர்த்து, வளப்பம் பொருந்திய கொன்றை மலர்களை அசைத்து அவற்றில் உள்ள வண்டுகள் பறந்து இசையெழுப்பும் படி நிலவுலகத்தின்கண்ணே காற்று வீசியது. அக்காற்றானது கடல்சூழ்ந்த இவ்உலகத்தில் வாழ்கின்ற எல்லா உயிர்களுக்கும் பேரின்பத்தைத் தோற்றுவித்தது.

இப்பாடலில் கூறப்பட்ட வினைமுதல் (கருத்தா) காற்று. வந்த புயல் என்னும் வினைமுதல் தாதலைத்தல், தார்அலைத்தல்,வண்டு ஒலித்தல் ஆகிய செயல்கள் நிகழ்வதற்குக் காரணமாய் நின்றது. இன்பத்தைத் தோற்றுவித்தது எனக் காரகமாகவும் நின்றது. ஆதலால் இது கருத்தா காரக ஏதுவாயிற்று. எவ்உயிர்களுக்கும் பேரின்பம் அளித்தது என்பதால் இது நன்மை ஆயிற்று. (ஏற்பது)

**2. பொருட்காரசு ஏது**

பொருட்களின் செயலினை ஏதுவாக்கிக் காட்டுவது பொருட்காரக ஏது ஆகும்.

(எகா) **கனிகொள் பொழில்அருவி கைகலந்து சந்தின்**

**பனிவிரவிப் பாற்கதிர்கள் தோய்ந்து - தனியிருந்தோர்**

**சிந்தை உடனே உயிர்உணக்கும் தென்மலயம்**

**தந்த தமிழ்மா ருதம்.**

பொருள்: தென்திசையில் உள்ளது பொதிகை மலை. அம்மலையில் பிறந்து தமிழோடு பழகுவது தென்றல்காற்று. அக்காற்று மலைமீது உண்டாகிய சோலைகள் உதிர்த்த கனியோடு கலந்து பாய்கின்ற அருவியினுள் புகுந்தது. அம்மலையில் இருக்கின்ற சந்தனத்தின் குளிர்ச்சியுடன் பொருந்தியது. பால் போன்ற நிலவுக்கதிர்களில் மூழ்கியது. தனது இயற்கைத் தன்மைக்கு மாறுபட்டுக் காதலரைப் பிரிந்து தனித்திருந்த பெண்களின் மனத்தோடு உயிரையும் வாட்டியது.

இப்பாடலில் கூறப்பட்ட பொருள் மாருதம் ஆகும். அது உணக்கும் (வாட்டும்) என்னும் வினையோடு முடிந்து காரகமாயும் (கருவியாய்) உணங்குதற்கும் ஏதுவாயிற்று. உயிருக்குத் தீங்கு செய்வதாய்க் கூறப்பட்டதால் இது அழிவுப் பொருள் உணர்த்தியது.

**3. கரும காரசு ஏது**

ஒரு செயற்பாட்டினைக் கருவியாகவும் காரணமாகவும் காட்டுவது கருமகாரக ஏதுவாகும்.

(எகா) **மலையின் அலைகடலின் வாள்அரவின் வெய்ய**

**தலையில் பயின்ற தலத்தால் - தலைமைசேர**

. **அம்மாதர் புல்லும் அபயன் புயம்புணர**

**எம்மா தவம்புரிந்தோம் யாம்.**

பொருள்: தோழியே! விந்திய மலையிலும் அலைகடலிலும் ஒளிவீசுகின்ற பாம்பினது வெய்ய தலையிலும் நின்று செய்த தவத்தினால் தலைமை பெற்ற பெண்டிர் மூவர். அம்மூவராலும் தழுவப்பட்டது சோழனுடைய தோள்களாகும். அச்சிறப்புப் பொருந்திய தோள்களைத் தழுவுவதற்கு எவ்வகையில் சிறந்த தவத்தினை யாம் செய்தோம்?

தவம் செய்து தலைமை பெற்ற மூவர் விந்திய மலையி மலையில் தவம் செய்தவள் - கொற்றவை அலைகடலில் தவம் செய்தவள் இலக்குமி பாம்பின் மீதிருந்து தவம் செய்தவள் பூமாதேவி T இவர்கள் வாழும் இடங்களே தவம் செய்த இடங்களாகக் கூறப்பட்டன.

இப்பாடலில் தவம் என்பது செயப்படுபொருளாகும். அது புரிந்தோம் என்னும் வினையொடு முடிந்தது. அத்தவமே கருவியாக நின்றது. அதுவே சோழனின் தோளைப் புணர்தலாகிய காரியத்திற்கு ஏதுவும் ஆகியது. ஆதலால் இது கரும காரக ஏதுவாயிற்று.

### 4.கருவி காரக ஏது

கருவியாகிய துணைக்காரணத்தின் செயலினை ஏதுவாக்கிக் காட்டுவது கருவி காரக ஏதுவாகும்.

**(எகா)** **காடத்தான் மாரியும் கண்ணால் வெயிலும்**

**நிரைவயிரக் கோட்டால் நிலவும் - சொரியுமால்**

**நீளார்த் தொடைஅதுலன் நேரார் கலிங்கத்து**

**வாளால் கவர்ந்த வளம்.**

பொருள் : நீண்ட ஆத்தி மாலையைச் சூடியவன் சோழன். ஒப்பில்லாத அச்சோழன் தன்னுடன் பகை கொண்ட கலிங்கரைப் போரில் வென்றான். அப்போரில் வாள்வலிமையால் வளமாகிய யானைக் கூட்டத்தைக் கவர்ந்தான். அவ்யானைகள் மதத்தால் 1. மழையைப் பொழிந்தன 2. கண்ணின் கடுமையால் வெயிலை வெளிப்படுத்தின 3. வரிசையாக வயிரப் பூணை உடைய தந்தங்களின் வெண்மையால் நிலவை உமிழ்ந்தன. (அதுலன் - ஒப்பில்லாதவன்)

இப்பாடலில் கூறப்பட்ட கருவிகள் கரடம், கண், கோடு என்பனவாம். அவை சொரியுமால் என்னும் வினை கொண்டன. மதம்-மழையையும் கண் வெயிலையும் கோடு-நிலவையும் தோற்றுவித்தன என்பதால் அவை வினைமுதலாக நின்றன. அக்கருவிகள் தோற்றுவித்தன என்பதால் ஏதுவாயும் அமைந்தன. ஆதலின் இது கருவி காரசு ஏதுவாயிற்று.

### 2. ஞாபக ஏது

தொழிலை அறிவிப்பது ஞாபக ஏதுவாகும்.

### ஞாபக ஏதுவின் இலக்கணம்

**அவையல பிறவின் அறிவது ஞாபகம்.**

சொல்லப்பட்ட காரணமன்றிப் பிற காரணத்தினால் சிந்தித்து அறிவது (உய்த்துணர்வது) ஞாபக ஏதுவாகும். ஞாபகம் -அறிவித்தல். இது கவிஞனின் எடுத்துக்காட்டுக்களினால் அறியத்தக்கது.

(எகா) **காதலன்மேல் ஊடல் கரைஇறத்தல் காட்டுமால்**

**மாதர் நுதல்வியர்ப்ப வாய்துடிப்ப - மீது**

**மருங்குவளை வில்முரிய வாள்இடுக நீண்ட**

**கருங்குவளை சேந்த கருத்து.**

பொருள் : 1. பெண்ணின் நெற்றி வியர்த்தது 2. வாய் துடித்தது 3. பக்கங்கள் வளையப்பெற்ற புருவங்களாகிய விற்கள் மேலே சென்று முரிந்தன 4. கொல்லும் தன்மையுடைய வாட்படையானது சிறுத்துப் போகும்படி கண்கள் கூர்மை பெற்று நீண்டன 5. கருங்குவளை போன்ற அக்கண்கள் சிவந்தன. இச்செயல்களின் குறிப்பானது தம்முடைய தலைவன்மீது கொண்ட அளவுகடந்த ஊடலைத் தெரிவித்தன.

காதலன் மேல் ஊடல் அளவு கடந்ததை நெற்றி வியர்த்தல் முதலான குறிப்புக்கள் அறிவித்தலால் இது ஞாபக ஏதுவாயிற்று.

## இலேசவணி

ஒருவர் தன்னிடத்தில் வெளிப்படும் மெய்ப்பாட்டுணர்விற்கு உரிய மெய்யான காரணத்தை மறைத்து அது வேறொன்றால் நிகழ்ந்ததாகக் கூறுவது இலேச அணி எனப்படும். (இலேசம் - கனம் இன்மை’ அற்பம்)

### இலேச அணியின் இலக்கணம்

**குறிப்பு வெளிப்படுக்கும் சத்துவம் பிறிதின்**

**மறைத்(து) உரை யாடல் இலேசம் ஆகும்.**

உள்ளம் கருதியதனை வெளிப்படுத்தும் சத்துவமாகிய குணங்களைப் பிறிதொன்றால் நிகழ்ந்ததாக மறைத்துச் சொல்லுவது இலேசம் என்னும் அணியாகும்.

சத்துவம் என்பன வெண்பளிங்கில் செந்நூல் கோத்தால் அதன் செம்மை புறம்பே தோன்றும். அது போல உள்ளம் கருதியது புலனாக்கும் குணங்கள்’ அவை சொல்தளர்தல், மெய்வியர்த்தல், கண்ணீர் வழிதல், மெய் நடுக்கம், மெய்வெதும்பல், மெய்ம்மயிர் சிலிர்த்தல் முதலியன. (சத்துவம் - உள்ளதன் தன்மை)

(எகா) **கல்உயர்தோள் கிள்ளி பரிதொழுது கண்பனிசோர்**

**மெல்இயலார் தோழியர்முன் வேறுஒன்று - சொல்லுவரால்**

**பொங்கும் படைபரப்ப மீ(து)எழுந்த பூந்துகள்சேர்ந்(து)**

**எம்கண் கலுழ்ந்தனவால் என்று.**

பொருள் : மலை போன்று உயர்ந்த தோள்களை உடையவன் சோழமன்னன். அவன் உலாச் சென்ற குதிரையை மென்மையான நடையினை உடைய பெண்கள் கண்டு தொழுதனர். அவர்களுடைய கண்ணிலிருந்து நீர் வழிந்தது. அப்பெண்கள், சினத்தை உடைய படைகள் பரவி வர அதனால் விண்ணில் எழுந்த பூந்துகள் எம் கண்ணுள்ளே சென்று கண்ணீர் வடிந்தது என உண்மையை மறைத்துத் தன் தோழியரிடம் கூறினர்.

பெண்கள் உலாவந்த சோழனைக் கண்டு விருப்பம் கொண்டனர். அது நிறைவேறாமை குறித்து வருந்தினர். அக்கருத்தால் கண்ணீர் வந்தது. அதைப் பூந்துகளால் தோன்றியதென்று மறைத்துக் கூறியதால் இது இலேச அணியாயிற்று.

**(எகா)** **மதுப்பொழிதார் மன்னவனை மால்கரிமேல் கண்ட**

**விதிர்ப்பும் மயிர்அரும்பும் மெய்யும் - புதைத்தாள்**

**வளவார் அணநெடுங்கை வண்திவலை தோய்ந்த**

**இளவாடை கூர்ந்த(து) என**

தேன் வழியும் மலர்களால் ஆகிய மாலையினை அணிந்த சோழ மன்னன் உயர்ந்த ஆண் யானையின் மீதேறி உலா வந்தான். அதைக் கண்ட பெண்கள் மேனி நடுங்கவும் மெய்ம்மயிர் சிலிர்க்கவும் நின்றனர்.

இச்செயல்கள், சோழன் ஏறி வந்த வளப்பமான களிற்றின் நெடிய கையில் உண்டாகிய நீர்த்திவலையைக் கொண்டு வந்த இளவாடை என் மேனியை நனைத்ததால் தோன்றின எனக் கூறினர் அப்பெண்கள்

யானை மீது உலாவந்த சோழனைக் கண்ட பெண்கள், ஆசையால் நடுக்கத்தையும் மயிர் சிலிர்த்தலையும் அடைந்தனர். அத்தன்மைகளுக்கு இளவாடைக்காற்றே காரணம் என மறைத்துக் கூறியதால் இது இலேச அணியாயிற்று.

## இலேச அணியின் வகைகள் (2)

**புகழ்வது போலப் பழித்திறம் புனைதலும்!**

**பழிப்பது போலப் புகழ்புலப் படுத்தலும்**

**அவையும் அன்ன(து)என்(று) அறைகுநர் உளரே.**

1. ஒன்றனைப் புகழ்வது போலப் பழித்து உரைத்தல் 2. பழிப்பது போலப் புகழ்ந்து உரைத்தல் என்பனவும் முற்கூறிய இலேச அணி ஆகுமென்று சொல்லுவாரும் உளர்.

### 1. புகழ்வது போலப் பழித்தல்

ஒன்றனைப் புகழ்வது போலப் பழித்துக் கூறுதலே புகழ்வது போலப் பழித்தல் ஆகும்.

(எகா) **மேய கலவி விளைபொழுது நம்மெல்லென்**

**சாயல் தளராமல் தாங்குமால் - சேயிழாய்!**

**போர்வேட்ட மேன்மைப் புகழாளன் யாம்விரும்பித்**

**தார்வேட்ட தோள்விடலை தான்.**

பொருள்: தோழியே! நம் தலைவன் எப்பொழுதும் போர்த்தொழிலை விரும்புகின்ற மேலான புகழை உடையவன். நம்மால் விரும்பி மாலை இடப்பட்ட தோள்களை உடையவன். அவன் எம்மோடு கூடி முயங்கும் கலவிக் காலத்து நம் மென்மைத்தன்மை குன்றாதபடி பாதுகாக்கின்றான்.

புணர்ச்சிக் காலத்தில் தலைவன், தலைவியின் மென்மைத் தன்மை கெடும்படியாகக் கூட வேண்டும். ஆனால் தலைவனோ அவ்வாறு செயல்படவில்லை. இத்தன்மை கொண்ட தலைவனைத் தலைவி "சாயல் தளராமல் தாங்குமால்" எனப் புகழ்கிறாள். இது தலைவனின் செயலைப் பழிப்பதால் புகழ்வது போலப் பழித்தலாயிற்று.

## 2.பழிப்பது போலப் புகழ்தல்

ஒன்றனைப் பழிப்பது போலப் புகழ்ந்து கூறுதலே பழிப்பது போலப் புகழ்தல் ஆகும். (ஏ -

(எகா) **ஆடல் மயில்இயலி அன்பன் அணியாகம்**

**கூடுங்கால் மெல்லென் குறிப்(பு)அறியான் - ஊடல**

**இளிவந்த செய்கை இரவாளன் யார்க்கும்**

**விளிவந்த வேட்கை இலன்.**

பொருள்: ஆடுகின்ற மயிலைப் போன்ற மென்மைத்தன்மை உடைய தோழியே! நம் மீது அன்பு வைத்த தலைவனுடைய மார்பைக் கூடினேன். அக்காலத்து அவன் நம்முடைய மென்மைத் தன்மையைப் பாராட்ட அறியாதவன். ஊடற்கண் தனக்குத் தகாதன செய்து யாசிக்கின்ற இரவாளன். யாவர்க்கும் வெ வெறுக்கத்தக்க ஆசைப்பாடு இச்செயல்களால் இகழ்வதற்குக் காரணமாயினான். உடையன் அல்லன்.

தலைவனின் இயல்பைக், "கூடுங்கால் மெல்லென் குறிப்பறியான்" எனத் தலைவி பழித்துக் கூறுகிறாள். கூடுங்காலத்து அறிவழிந்து செயல்படுவதே முறையாகும். ஆதலின் இது பழிப்பது போலப் புகழ்தலாயிற்று.

## நிரல்நிறையணி

கவிஞர் தம் செய்யுட்களில் முதலில் சொற்பொருட்களை வரிசைப்படுத்துவர். அவற்றோடு தொடர்புடையவற்றைப் பின்னர் அதே முறையில் பொருள்படுமாறு வரிசைப்படுத்திப் பாடுவர். இவ்வாறு அமைப்பதே நிரல்நிறை என்னும் அணியாகும். இதற்கு அடைவணி என்னும் வேறு பெயரும் உண்டு. வடநூலார் இவ்அணியை "யதாசங்கி அலங்காரம்" எனக்கூறுவர். (நிரல் - வரிசை' நிறை -நிறுத்துதல்)

## நிரல்நிறை அணியின் இலக்கணம்

**நிரல்நிறுத்(து) இயற்றுதல் நிரல்நிறை அணியே**

சொல்லையும் பொருளையும் நிரலே நிறுத்தி நேரே பொருள் கொள்வது நிரல்நிறை என்னும் அணியாகும்.) நிரல் நிறுத்துதல் என்று கூறாமல் இயற்றுதல் எனக் கூறப்பட்டதால் இது மொழிமாற்றியும் கொள்ளப்படும்

### 1. முறை நிரல்நிறை

எழுவாயாய் அமைந்த பொருள்களையும் அவற்றிற்கு உரிய பயனிலைகளையும் கிடந்த முறையிலே இயைத்துப் பொருள் காண்பது முறை நிரல்நிறை அணியாகும். இதனை நிரலே நிறுத்தி நேரே பொருள்கொள்வது என்றும் கூறுவர்.

**காரிகை மென்மொழியால் நோக்கால் கதிர்முலையாள்**

**வார்ப்புருவத் தால் இடையால் வாய்த்தளிரால் - நேர்தொலைந்த**

**கொல்லி வடிநெடுவேல் கோங்கரும்பு வில்கரும்பு**

**வல்லி கவிர்மென் மலர்.**

பொருள் : அழகிய தோற்றத்தால் பொலிவு பெற்றவள் தலைவி. அவள் 1.மென்மையான சொல் 2. நோக்கு 3. ஒளி பொருந்திய கொங்கைகள் 4.நீண்ட புருவம் 5. இடை 6. தளிர் அனைய கைகள் ஆகியவற்றைப் பெற்றுத் திகழ்ந்தாள்.

அவற்றால் 1. கொல்லி என்னும் இனிய பண் 2.கூர்மை பொருந்திய வேல் 3. கோங்கினது அரும்பு 4. மன்மதனின் வில்லாகிய கரும்பு 5. பூங்கொடி 6. மென்மையான முருக்க மலர் என்பவை தத்தம் அழகை இழந்தன.

இப்பாடலில் முன்னர் வைக்கப்பட்ட பொருள் ஆறு. அவை 1.மொழி 2. நோக்கு 3. கொங்கை 4. புருவம் 5. இடை 6. கை என்பன. அவற்றிற்கேற்பக் கொல்லி, வேல், கோங்கரும்பு,

கரும்பு வில், வல்லி, முருக்க மலர் என்பவை பின் வைக்கப்பட்டன. இவை, மொழியால் தொலைந்தது கொல்லிப்பண் என்பது முதலாகப் பொருள்பட நிரலே வைக்கப்பட்டமையால் முறை நிரல்நிறையாயிற்று.

## 2.மொழிமாற்று நிரல்நிறை

நிரலே கிடந்த எழுவாய்க்கேற்பப் பயனிலைகளை மாற்றிப் பொருள் பொருந்துமாறு இயைத்துக் காண்பது மொழிமாற்று நிரல்நிறை ஆகும். இதனை நிரலே நிறுத்தி மொழிமாற்றிப் பொருள் கொள்வது என்றும் குறிப்பர்.

**(எகா)** **ஆடவர்கள் எவ்வா(று) அகன்(று)ஒழிவார் வெ.்.காவும்!**

**பாடகமும் ஊரகமும் பஞ்சரமா - நீடியமால் நின்றான்**

**இருந்தான் கிடந்தான்! இதுவன்றோ**

**மன்றார் மதிற்கச்சி மாண்பு.**

பொருள்: நீண்ட திருக்கோலத்தை உடையவன் திருமால். அவன் 1.திருவெ.்.கா 2. பாடகம் 3. ஊரகம் ஆகிய மூன்றையும் தனக்குரிய இடங்களாகக் கொண்டவன். அவற்றுள் முறையே 3. படுத்திருத்தல் 2. இருத்தல் 1. நிற்றல் ஆகிய செயல்களைச் செய்தான். இச்சிறப்புப் பொருந்திய இடங்களைத் தன்னிடத்தே கொண்ட காஞ்சிபுரம், மன்றங்கள் பல நிறைந்தது.மதில்களால் சூழப்பட்டது. இப்பெருமைகள் பல பெற்ற காஞ்சிபுரத்தை மனிதர்கள் எங்ஙனம் விட்டு நீங்குவார்கள்.

இப்பாடலில் முன்னர் வரிசைப்படுத்தப்பட்ட பொருள்கள் மூன்று. அவை 1. வெ.்.கா 2. பாடகம் 3. ஊரகம் என்பன. பின் நிறுத்தப்பட்ட தொழில்கள் நிற்றல், இருத்தல், கிடத்தல் என்பன. இவை முன் நிறுத்தப்பட்ட சொற்களோடு பொருந்துமாறு நிறுத்தப்படவில்லை. வெ.்.காவில் கிடந்தான்' பாடகத்தில் இருந்தான்', ஊரகத்தில் நின்றான் எனச் சொற்களை மாற்றி இயைபுபடுத்தப்பட்டதால் இது மொழிமாற்று நிரல்நிறை ஆயிற்று. இதனை ''எதிர்நிரல்நிறை அணி'' என்றும் கூறுவர்.

## சிலேடையணி

செய்யுளில் இடம்பெறும் ஒரு சொல்லோ தொடரோ தனித்து நின்றும் பிரிந்து நின்றும் பல பொருள்களைத் தரும். அவ்வாறு பல பொருள் பட அமைவதனைச் சிலேடை அணி என்பர். சிலேடை என்னும் சொல்லுக்குத் தழுவுதல் உடையது என்பது பொருளாகும். பல பொருள் உடையதாகிய சொற்களை அரிதில் தேர்ந்தெடுத்து அமைக்கும் இவ்அணி நுட்பமும் திட்பமும் உடைய புலவர்களுக்கே இயலுவதாகும். இதனை "இரட்டுறமொழிதல் அணி" என்றும் கூறுவர். சிலேஷை என்னும் சமற்கிருதச்சொல் சிலேடை என்னும் வடசொல் ஆயிற்று. இச்சொற்குத் துணைப் பொருள் தருதல் என்பது பொருளாகும்.

**சிலேடை அணியின் இலக்கணம்**

**ஒருவகைச் சொற்றொடர் பலபொருள் பெற்றி**

**தெரி(வு)தர வருவது சிலேடை ஆகும்.**

ஒரு வகையாய் நின்ற தொடர்ச்சொல் பல பொருள்களது தன்மை புலப்பட வருவது சிலேடை என்னும் அணியாகும்.

சிலேடை என்னாது ஆகும் என்றதனால் தொடர்ச்சொல்லே அன்றி ஒரு சொல்லே அவ்வாறு அமையினும் அதுவும் சிலேடை அணியாகவே கொள்ளப்படும்.

**சிலேடை அணியின் வகைகள் (2)**

**அதுவே,**

**செம்மொழி 1 பிரிமொழி? எனஇரு திறப்படும்.**

மேற்கூறப்பட்ட சிலேடை 1. செம்மொழிச் சிலேடை 2. பிரிமொழிச் சிலேடை என இரண்டு வகைப்படும்.

**1. செம்மொழிச் சிலேடை**

பிரிக்கப்படும் தன்மை அற்று நேரே நின்று பலபொருள் தரும் சொற்களால் அமைவது செம்மொழிச் சிலேடை ஆகும்.

**செங்கரங்க ளான்இரவு நீக்கும் திறம்புரிந்து**

**பங்கய மாதர் நலம்பயிலப் - பொங்(கு)உதயத்(து)**

**ஓர்ஆழி வெய்யோன் உயர்ந்த நெறிஒழுகும்**

**நீராழி நீள்நிலத்து மேல்.**

இப்பாடல் கதிரவனுக்கும் சோழனுக்கும் சிலேடையாய் அமைந்துள்ளது.

பொருள்: சூரியன் : 1. சிவந்த ஒளிக்கதிர்களால் இருளை நீக்கும் திறன் மிகுந்தது 2. தாமரை விரும்பும் சிறப்புடையது 3. மேல் நோக்கிய தோற்றத்தை உடையது 4. ஒற்றைச் சக்கரத்தால் ஆகிய ஊர்தியை உடையது 5. கடலால் சூழப்பெற்ற இந்நிலவுலகத்தின் மேல் அமைந்த வானவெளியில் இயங்குவது என்னும் இயல்புகளை உடையது சூரியன்.

சோழன்: 1. சிவந்த கைகளைக் கொண்டு இவ்வுலகத்தில் உள்ளோரின் வறுமை நீக்கும் தொழில் மிகுந்திருத்தல் 2. தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகளின் செல்வத்தைப் பெருக்குதல் 3. மேம்பட்டு நிற்கின்ற செல்வ வளத்தைப் பெற்றிருத்தல் 4. தனித்த ஆணைச் சக்கரத்தை உடைமை 5. கடல் சூழ்ந்த நிலவுலகத்தில் உள்ளதாய் விரும்பப்படுகின்ற உயர்ந்த நெறியில் ஒழுகுதல் என்னும் இயல்புகளை உடையவன் சோழன்.

இப்பாடலில் உள்ள சொற்களும் தொடர்களும் சூரியன், சோழன் ஆகிய இரு பொருள்களுக்கும் பொருந்துவதாக இருப்பதால் இது சிலேடையாயிற்று. ஒரே நிலையில் நின்ற

சொற்கள் அந்நிலையிலேயே சூரியன், சோழன் ஆகிய இரண்டு பொருள்களுக்கும் பிரிந்து பொருள்படுவதால் இது செம்மொழிச் சிலேடை ஆயிற்று.

**2. பிரிமொழிச் சிலேடை**

ஒரு வகையாய் நின்ற சொல்லையோ தொடரையோ பிரித்துப் பொருளுக்கேற்பக் கொள்ளப்படுவது பிரிமொழிச் சிலேடையாகும்.

**(எகா)** **தள்ளா விடத்தேர் தடந்தா மரைஅடைய**

**எள்ளா அரிமான் இடர்மிகுப்ப - உள்வாழ்தேம்**

**சிந்தும் தகைமைத்தே எங்கோன் திருஉள்ளம்**

**நந்தும் தொழில்புரிந்தார் நாடு.**

இப்பாடல் 1. சோழனின் ஆட்சியை ஏற்றுக் கொண்டோரின் நாட்டின் நிலையையும் 2. ஏற்றுக் கொள்ளாதவரின் நாட்டின் நிலையையும் எடுத்துரைக்கும் சிலேடையாகும்.

1. சோழனின் மனம் விரும்ப நடந்தோர் நாட்டின் ஆக்கத்திற்கு ஏற்ப அமைத்துக் கொள்ளப்பட்ட முறை.

**(எகா)** **தள்ளா இடத்(து)எர் தடந்தா மரைஅடைய**

**எள்ளாஅரி மானிடர் மிகுப்ப - உள்வாழ்தேன்**

**சிந்தும் தகைமைத்தே' எங்கோன் திருஉள்ளம்**

**நந்தும் தொழில்புரிந்தார் நாடு.**

பொருள்: எம்கோமானாக விளங்குபவன் சோழன். அவனுடைய உள்ளம் மகிழும்படி நடந்து கொண்ட அரசர்கள் உளர். அவர் நாட்டின் அழகு கெடாத நிலங்களில் உழுத எருதுக்கள், பெரிய தாமரைகள் பொருந்திய குளங்களை அடைந்தன. இகழப்படாத நெல்அரியை உழவர்கள் திரட்டினர். எங்கும் காணப்பட்ட தாமரை மலர்களில் இருந்து தேன் ஒழுகியது.

2. சோழனின் மனம் வெறுக்க வாழ்ந்தோர் நாட்டின் அழிவிற்குத்தக அமைத்துக் கொள்ளப்பட்ட முறை.

**(எகா)** **தள்ளா விடத்தேர் தடம்தா மரைஅடைய**

**எள்ளா அரிமான் இடர்மிகுப்ப - உள்வாழ்தேம்**

**சிந்தும் தகைமைத்து எங்கோன் திருவுள்ளம்**

**நந்தும் தொழில்புரிந்தார் நாடு.**

பொருள்: எம்கோமானாக விளங்குபவன் சோழன். அவனுடைய உள்ளம் வெறுக்கும்படி நடந்து கொண்ட நாடுகள் சில உள. அங்கு அசையாத விடத்தேர் என்னும் மரங்களை உடைய மலைகள் காணப்பட்டன. அம்மலைகளில் வாழ்ந்த ஆண்சிங்கங்கள் மான்களுக்குத் தொல்லை

தந்ததால் அவை சிகரங்களைத் தாவின. நல்லோர் உள்ளங்களில் வாழும் அந்நாடுகள் எல்லாம் அழிவுபட்டன.

இவ்வாறு இருநிலைக்கேற்பப் பிரித்துப் பொருள் கொள்ளப் பட்டதால் இது பிரிமொழிச் சிலேடை ஆயிற்று.

### சிலேடையின் விரி (7)

**(எகா)** **ஒருவினை பலவினை முரண்வினை நியமம்**

**நியம விலக்கு விரோதம் அவிரோதம்**

**எனஎழு வகையினும் இயலும் என்ப.**

அச்சிலேடை 1. ஒருவினைச் சிலேடை 2. பலவினைச் சிலேடை 3. முரண்வினைச் சிலேடை 4. நியமச் சிலேடை 5. நியம விலக்குச் சிலேடை 6.விரோதச் சிலேடை 7. அவிரோதச் சிலேடை என்னும் ஏழு கூறுபாட்டாள் நடக்கும் என்று சொல்லுவர் புலவர்.

### 1. ஒருவினைச் சிலேடை

ஒரு வினையாய் வருவது ஒருவினைச் சிலேடையாகும். ஜஎ-டுஸ அம்பொன் பணைமுகத்துத் திண்கோட்(டு)" அணிநாகம் வம்புற்ற ஓடை மலர்ந்(து)இலங்க - உம்பர் நவம்புரியும் வானதியும் நாண்மதியும் நண்ணத் தவம்புரிவார்க்(கு) இன்பம் தரும்.

இப்பாடல் விநாயகருக்கும் மலைக்கும் பொருந்தும் வகையில் அமைந்ததாகும்.

பொருள் : விநாயகர் : கச்சோடு கட்டிய பட்டம் ஒளிவீச அழகு பெற்றிருந்தது ஒரு யானை. அது 1. பொலிவுடைய முகத்தின் கண்ணே வலிய கோட்டை உடையது 2. முடி மீது ஒளிமிக்குப் பெரிதாகிய கங்கையையும் இளம்பிறையையும் பொருந்தியது 3. தவம் செய்வோர்க்கு வேண்டிய இந்திரபதங்கள் முதலாகிய இன்பங்களைக் கொடுக்கவல்லது.

மலை : மணம் கமழும் ஓடை பூத்துவிளங்க அழகு பெற்றுத் திகழ்வது இமயமலை. அது 1. அழகிய பொன்னொடு கூடிய மூங்கில்கள் நெருங்கிய பக்கங்களைக் கொண்ட சிகரங்களை உடையது 2. ஒளிமிக்குப் பெரிதாகிய கங்கையும் பிறையும் பொருந்தும்படி உயர்ந்தது 3. தவம் செய்வார்க்கு வேண்டிய பொருள்களை எல்லாம் கொடுக்கவல்லது.

யானை உருவில் காட்சியளிக்கும் விநாயகனுக்கும் மலைக்கும் பொதுவாகப் பொருந்தி வரும் ஒப்புமைகளை அடிப்படையாகக் கொண்டது இப்பாடல். இதில் அமைந்த தொடர்கள் இவ்இரு பொருள்களுக்கும் பொருந்த அமைந்துள்ளன. இறுதியில் தரும் என்னும் ஒருவினைச்சொல்லைக் கொண்டு முடிக்கப்பட்டிருப்பதால் இது ஒரு வினைச் சிலேடையாயிற்று.

### 2. பலவினைச் சிலேடை

பல வினையாய் வருவது பலவினைச் சிலேடை ஆகும்.

**(எகா)** **தவிரா மதுஉண்(டு) களிதளிர்ப்ப நீண்டு**

**செவிமருவிச் செந்நீர்மை தாங்கிக் - குயில்இசையும்**

**மின்உயிரா நுண்ணிடையார் மென்நோக்கு மேவலார்**

**இன்னுயிரை ஈர்க்கின் றன.**

இப்பாடல் குயிலின் குரலுக்கும் பெண்ணின் கண்ணுக்கும் பொருந்தும் வகையில் அமைந்ததாகும்.

குயில்:குயிலின் குரலோசையானது 1. இடைவிடாமல் நறவுண்ண வந்த களிப்பால் நீண்டொலித்தது 2. செவியின் உள்ளே புகுந்து நிறைந்தது 3. கோடாத இயல்பு பெற்றது 4. பிரிந்தோர் உயிர்களை வருத்தும் தன்மை கொண்டதாம்.

கண் : மின்னலைப் போன்ற நுண்ணிய இடையை உடையவர் பெண்கள். அவர்களுடைய கண்கள் மென்மையானவை. அவை 1. விடுதற்கு அரிதாகிய கள்ளை உண்ட மயக்கத்தால் தழைத்தன 2. செவியளவும் நீண்டு சென்றன 3. சிவந்த குளிர்ச்சி உடையன 4. தம்மைப் புணராத தலைவனுடைய இனிய உயிருக்குத் துன்பம் தருவனவாம்

குயில் குரலாகிய சினைப் பொருளுக்கும் பெண்ணின் கண்ணாகிய சினைப் பொருளுக்கும் பொதுவாகப் பொருந்தி வரும் ஒப்புமைகளை அடிப்படையாகக் கொண்டது இப்பாடல். இதில் அமைந்த தொடர்கள் இவ்விரு பொருள்களுக்கும் பொருந்த அமைந்துள்ளன. இடையில் நீண்டு. மருவி, தாங்கி என்னும் எச்சங்கள் ஈர்க்கின்றன என்னும் வினையைக் கொண்டு முடிந்தன. நீண்டு முதலான பல வினைகளோடும் இயைந்து பொருள்படுவதால் இது பலவினைச் சிலேடை ஆயிற்று.

### 3. முரண்வினைச் சிலேடை

மாறுபட்ட வினையால் வருவது முரண்வினைச் சிலேடையாகும்.

**(எகா)** **மாலை மருவி மதிதிரிய மாமணம்செய்**

**காலைத் துணைமேவ லார்கடிய - வேலைமிசை**

**மிக்கார் கலிஅடங்கா தார்க்கும் வியன்பொழில்கள்**

**புக்கார் கலிஅடங்கும் புள்.**

இப்பாடல் துணைவரைப் பிரிந்தார்க்கும் சேர்ந்தார்க்கும் பொருந்தும் வகையில் அமைந்ததாகும்.

பொருள்: பிரிந்தார் : மயக்கத்தைப் பொருந்தியதால் கருத்து வேறுபட்டனர் காதலர். மணம் வீசுகின்ற மாலை நேரத்தில் ஒருவர் மற்றொருவராகிய தம் துணைவரைக் கூடாமல் இருந்தனர். அவர்கள் அஞ்சும்படியாகக் கரைமீது வந்து கடல் பொங்கி ஆரவாரித்தது. அகன்ற பொழில்களில் புகுந்து பறவைகள் ஒலி அடங்கின.

புணர்ந்தார்: மாலைப் பொழுதினைப் பொருந்தித் திங்கள் உலாவியது. மிக்கிருந்த கூட்டத்தைச் செய்யும் காலத்தில் தம் தலைவரைப் பொருந்தினோராய் (ஆடவரும் பெண்டிரும்)

விளங்கினர். அவர்கள் மகிழும்படியாகக் கரைமீது வந்து கடல் பொங்கி ஆரவாரித்தது. அகன்ற பொழில்களில் புகுந்து பறவைகள் ஒலியடங்கின.

இதில் அமைந்த தொடர்கள் இவ்இரு திறத்தினர்க்கும் பொதுவாய்ப் பொருந்தியுள்ளன. கடல் ஆரவாரித்தது, பறவைகள் ஒலியடங்கின என்பவற்றை முறையே ஆர்த்தன, அடங்கின என்னும் சொற்கள் வெளிப்படுத்தின. இவ்விரண்டு வினைச்சொற்களும் மாறுபட அமைந்ததால் இது முரண்வினைச் சிலேடை ஆயிற்று.

## 4. நியமச் சிலேடை

சிலேடைப்படுத்தப்பட்ட இரு பொருள்களுள் ஒன்றனை வரையறுத்துக் கூறுவது நியமச் சிலேடையாகும்.

**(எகா)** **வெண்நீர்மை தாங்குவன முத்தே வெறியவாய்க்**

**கண்நீர்மை சோர்வ கடிபொழிலே - பண்நீர்மை**

**மென்கோல யாழே இரங்குவன வேல்வேந்தே!**

**நின்கோல் உலாவும் நிலத்து.**

பொருள் : வேற்படையை உடைய அரசனே.׃. நின்னுடைய செங்கோல் ஆட்சிக்கு உட்பட்டது இந்நிலவுலகம். இதில் 1. வெண்மை நிறத்தை உடையதாய் இருப்பன முத்துக்களே! 2. மணம் மிகுந்து தேன் வழியுமாறு நிற்பன பெரிய சோலைகளே! 3. குளிர்ந்த ஓசையும் அழகொடு கூடிய மென்மையும் கொண்டு பிறருக்கு மனக்குழைவை உண்டாக்குவன யாழ்களே! ஆகும்.

இவற்றைத் தவிர அறிவின்மை தாங்குபவர், இல்லாமையால் கண்ணீர் வடிப்பவர் பிறர்மனம் தளரும்படியான செயல்கள் ஆகியவை இல்லை என்பது கருத்து. இப்பாடலில் அமைந்த.

வெண்ணீர்மை: (வெண்மை நிறம் - அறியாமை)

வெறியவாதல்: (வாசம் உடைத்தாதல்வெறுமை உடைத்தாதல்)

கண்ணீர்மை : (கள்ளாகிய நீர்- கண்ணீர்)

என்னும் சொற்கள் இருபொருள்பட அமைந்துள்ளன. இருபொருள்பட எடுத்துக்கொண்ட (சிலேடிக்கப்பட்ட) பொருள்களுள் ஒன்றற்குத் தேற்றேகாரம் (முத்தே, பொழிலே, யாழே) கொடுத்து வரையறைப் படுத்தப்பட்டது. ஆதலால் இது நியமச் சிலேடை ஆயிற்று.

## 5.நியம விலக்குச் சிலேடை

இரு பொருள்பட எடுத்துக் கொண்ட பொருளை உறுதிப்படக் கூறி அதனை விலக்குவது நியம விலக்குச் சிலேடை ஆகும்.

**(எகா)** **சிறைபடுவ புட்குலமே! தீம்புனலும் அன்ன**

**இறைவநீ காத்(து)அளிக்கும் எல்லை -முறையில்**

**கொடியன குன்றத்தின் மாளிகையே! அன்றிக்**

**கடிஅவிழ்பூங் காவும் உள.**

பொருள் : தலைவனே∴ உன்னால் காக்கப்படுவது இந்நிலவுலகம். இதில் சிறை (சிறகு) உடைத்தாய் இருப்பன பறவை இனங்களே! அன்றித் தித்தித்த புனலும் சிறையை (அணை) உடையன. கொடியை உடையன குன்றம் போன்ற மாளிகைகளே' அன்றி மணம் பரப்பும் பூவை உடையதாகிய சோலைகளும் கொடியை உடையனவாம்.

ஓர் அரசனின் நாட்டில் சிறைச்சாலையும் கொடுமையும் இல்லை என்று கூறிச் சிறப்பிப்பதாக அமைந்தது இப்பாடல். இதில் சிறை, கொடி என்பவை சிலேடைப் பொருள்பட அமைந்துள்ளன. இவற்றுள் சிறை என்பது பறவைகளின் சிறகு, நீர்த்தடுப்பு, சிறைச்சாலை என்னும் பொருள்களைத் தரும். கொடி என்பது துணிக்கொடி, மலர்க்கொடி, கொடுமை என்னும் பொருள்களைத் தரும். இச்சொற்கள் பயன்படுத்தப் பட்டதால் சிலேடையாயிற்று. "சிறைபடுவ புட்குலமே" எனத் தேற்றேகாரம் கொடுத்து நியமித்துப்பின் தீம்புனலும் அன்ன என நீக்கப்பட்டது. "கொடியன.. மாளிகையே " எனத் தேற்றேகாரம் கொடுத்து நியமித்துப்பின் பூங்காவும் உள எனவும் விலக்கப்பட்டது. எனவே இப்பாடல் நியம விலக்குச் சிலேடை ஆயிற்று.

## விரோதச் சிலேடை

முன்னர்ச் சிலேடையாக்கப்பட்ட பொருள்களைப் பின்னர் விரோதமுறத் (மாறுபாடுறத்) தொடுப்பது விரோதச் சிலேடையாகும்.

**(எகா)** **விச்சா தரனேனும் அந்தரத்து மேவானால்**

**அச்சுத னேனும்அம் மாயன்அலன்- நிச்ச**

**நிறைவான் கலையான் அகளங்கன் நீதி**

**இறையான் அநகன்எம் கோ.**

பொருள் : 1. விஞ்ஞையர்கள் ஆகாயத்தில் பொருந்துவராயினும் துன்பம் அடைவர். சோழனாகிய விஞ்சையன் விண்ணில் பொருந்தான். துன்பம் அடையவும் மாட்டான்.

2. மாயம் செய்வதில் வல்லவனாய்க் கருமை நிறம் பொருந்தியவன் திருமால். ஆதலால் மாயன் எனப்படுவான். மாயம் செய்யாமையும் செம்மை நிறமும் உடைய சோழன் மாயன் எனப்படான்.

3. நாள்தோறும் வளர்ந்து வெண்மை எய்தும் கலைகளை உடையது திங்கள். அது கறையைப் பெற்றிருப்பதால் களங்கள் எனப்படும் நாள்தோறும் கலை நூல்களினால் அறிவுப் பெருக்கம் உடையவனாகிய சோழன் பாவமற்று (தீமையற்று) இருப்பதால் அகளங்கன் எனப்படுவாள்.

4. சிவபெருமான் பொருப்பாகிய இமயமலையை உடையவன். ஆகையால் நகன் எனப்பட்டான். சோழனாகிய எம் அரசன் தீயவினை இன்மையினால் அநகன் எனப்பட்டான்.

இப்பாடல் சோழனுக்கும் பல பொருள்களுக்கும் சிலேடைப் பொருள் பட அமைக்கப்பட்டுள்ளது.

## அவிரோதச் சிலேடை

முன்னர்ச் சிலேடையாக்கப்பட்ட பொருள்களோடு பின்வரும் லேடைச் சொற் பொருள்கள் மாறுபடாமல் பொருந்தத் தொடுப்பது அவிரோதச் சிலேடையாகும்.

**(எகா)** **சோதி இரவி கரத்தான் இர(வு)ஒழிக்கும்**

**மாதிடத்தான் மன்மதனை மா(று)அழிக்கும் மீதாம்**

**அனகமதி தோற்றிக் குமுதம் அளிக்கும்**

**தனதன் இருநிதிக்கோன் தான்.**

பொருள்: 1. ஒளியினை உடையவனாகிய கதிரவன் தன் ஒளிக்கதிர்களால் இருளை நீக்குவான். புகழை உடையவனாய்த் திகழும் கதிர்க் (சூரியக்) குலத்தில் தோன்றிய சோழன் கைகளால் பிறருடைய வறுமையைத் தீர்ப்பான் 2. உமாதேவியைத் தன் இடப்பாகமாகக் கொண்ட சிவபெருமான் மன்மதனிடம் மாறுகொண்டு அவனை அழிப்பான். மிகுந்த வலிமை கொண்ட சோழன் பிற அரசர்களின் ஆற்றலை மாறுகொண்டு கெடுப்பான்

3. வானத்தில் தோன்றுகின்ற திங்கள் அச்செயலால் குமுதங்களை அல்லி மலர்களை) மலரச் செய்யும். மேம்பாடுற்ற அறிவால் சோழன் மண்ணுலகத்தவர்க்கு மகிழ்ச்சியைக் கொடுப்பான் 4. குபேரன் “தனதன்“ என்னும் பெயரை உடையனாய்ச் சங்கநிதி, பதுமநிதி என்னும் இருபெரும் செல்வங்களுக்குத் தலைவன் ஆவான். சோழனும் பிறருக்கு அளவின்றிப் பொருளைக் கொடுத்து மிகுந்த பொருளுக்கு முதல்வன் எனச் சிறப்பிக்கப் படுவான்.

இப்பாடலில் சோதி இரவி, மாதிடத்தான்,மதி, தனதன் என்னும் சொற்கள் ஞாயிறு, சிவன், திங்கள், குபேரன் என்னும் பொருள்களுக்கும் சோழனுக்கும் சிலேடைச் சொற்பொருள்கள் புலப்பட அமைந்தன. இவை இரவொழித்தல் முதலான சொற்களோடு மாறுபாடு இன்றி இயைபு படுத்தப்பட்டன. ஆகையால் இது அவிரோதச் சிலேடை ஆயிற்று.

**மாதிரி வினாக்கள்**

## மனோன்ணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

## தொலைதூர கல்வி இயக்ககம்

## பருவத்தேர்வு

## யாப்பிலக்கணம்

**நேரம்: 2 மணி** **மதிப்பெண்: 75**

**பகுதி - அ**

**சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக.** **(10x1=10)**

1. செய்யுள் பாடுவதற்கான இலக்கணம் எது?

அ) அணி இலக்கணம்

ஆ) சொல் இலக்கணம்

இ) பொருள் இலக்கணம்

ஈ) யாப்பு இலக்கணம்

2. பாடலுக்கு மேலும் அழகும் இனிமையும் சேர்ப்பது எவ்வகை இலக்கணம்?

அ) அணி இலக்கணம்

ஆ) சொல் இலக்கணம்

இ) பொருள் இலக்கணம்

ஈ) யாப்பு இலக்கணம்

3. மாதிரி, போல, போன்று என்பன என்ன?

அ) உவம உருபுகள்

ஆ) பொதுப்பண்புகள்

இ) உண்மைப்பொருள்கள்

ஈ) ஒப்பாகக் கூறப்படும் பொருள்

4. குதிரை போல ஓடினார் என்பதில் குதிரை என்பது என்ன?

அ) அணி இலக்கணம்

ஆ) சொல் இலக்கணம்

இ) பொருள் இலக்கணம்

ஈ) யாப்பு இலக்கணம்

5. உவமை அணியின் பகுதிகள் எத்தனை?

அ) மூன்று

ஆ)ஐந்து

இ) ஆறு

ஈ) நான்கு

6. யாப்பின் பா வகைகள் யாவை?

அ) வெண்பா, ஆசிரியப்பா, தாழிசைப்பா, விருத்தப்பா

ஆ) திருக்காட்டுப் பள்ளி

இ) விருத்தப்பா, வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா

ஈ) வெண்பா, கலிப்பா, ஆசிரியப்பா, எண்சீர்விருத்தம்

7. சொல்லாலும் பொருளாலும் மாறுபட்டு தன்மையின் பயன் புலப்பட உரைப்பது எவ்வணி?

அ) விரோத அணி

ஆ) விசேட அணி

இ) நிதர்சன் அணி

ஈ) பாவிக அணி

8. பிரியா அணியின் மற்றொறு பெயர் என்ன?

அ) ஏதுவணி

ஆ) நுட்ப அணி

இ) தற்குறிப்பேற்ற அணி

ஈ) அதிசய அணி

9. இரட்டுற மொழிதல் என்று குறிப்பிடும் அணி எது?

அ) லேச அணி

ஆ) நிரல்நிகர அணி

இ) சிலேடை அணி

ஈ) பாவிக அணி

10. சங்கீரை அணிணின் வேறு பெயர் யாது?

அ) ஆசி

ஆ) கலவை அணி

இ) சுட்டணி

ஈ) முரண அணி

**பகுதி - ஆ**

**எவையேனும் ஐந்தனுக்கு விரிவான விடையளிக்க. (5x5=25)**

1. (அ) உவமை அணி என்றால் என்ன? விளக்குக.

(அல்லது)

(ஆ) செய்யுள் உறுப்புகள் சிலவற்றைக் கூறுக.

2. (அ) யாப்பின் பா வகைகள் யாவை? அவற்றை வரையறுக்க

(அல்லது)

(ஆ) உவமை அணியின் பகுதிகள் யாவை? அதனை ஆராய்க.

3. (அ) ‘‘தாயே உயிரே! தமிழே நினைவணங்கும்’’ என்று தொடங்கும் செய்யுளின் பாவகை என நிறுவுக.

(ஆ) யாப்பு என்றால் என்ன? வரையரை தருக.

4. (அ) பொதுவியல் காட்டும் செய்யுள் வகைகளை குறிப்பிடுக.

(ஆ) செய்யுள் நெறிகள் குறித்து விவரி.

5. (அ) தீவக அணியின் வகைகளை விவரித்து கூறுக.

**பகுதி - இ**

**எவையேனும் ஐந்தனுக்கு விரிவான விடையளிக்க.** **(8x5=40)**

7. (அ) தமிழில் இலக்கணம் எத்தனை வகைபெறும்?

(அல்லது)

(ஆ) செய்யுளுக்கு மேலும் இனிமை சேர்ப்பது எது?

8. (அ) 'கல்வி போல் மம்மர் அறுக்கும் மருந்து' இதில் வந்துள்ளது எந்த அணி?

(ஆ) உவம உருபுகள் சிலவற்றைக் கூறுக.

9. (அ) தற்குறிப்பேற்ற அணியின் வகைகளை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க

(ஆ) தன்மையனி குறித்து எழுதுக.

10. (அ) சிலேடை அணியை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

(ஆ) ஏது அணியை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.